உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சைவசமய ஸ்தாபனாசாரியராகிய

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரது

நன்மாணாக்கராகிய

# சம்பந்தசரணாலயர்

அருளிய

# தத்துவவிளக்க மூலமும்

---

ஸ்ரீகாசிவாசி

## செந்திநாதையரவர்கள்

இயற்றிய உரையும்

---


காரைக்குடி

ம-ள-ள-ஸ்ரீ ஆவி. பழ. சிதம்பரச்செட்டியார்

அவர்களால்

---

மதுரை

சூரியோதய அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டன.

பிங்கள௵ மாசி௴

1918



[COPY-RIGHT REGISTERED]

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# உபோற்காதம்

திருப்பாண்டிநாட்டிலே கூன்பாண்டியராஜன் தான் பூருவ சென்மத்தில் ஈட்டிய தீவினையினாலே கபடிகளாகிய க்ஷமணர்களுடைய துர்ப்போதனையை மெய்யெனத் துணிந்து, சத்தியசமயமாகிய சைவசமயத்தை விடுத்து, அசத்திய சமயமாகிய ஆருகத மதப் பிரவேசஞ் செய்துவிட்டான். "மன்னனெப்படி மன்னுயிரப்படி" என்றவாறு குடிகளும் க்ஷமணசமயத்தராயினர். அப்பாண்டியனுடைய மனைவியும் சோழராஜாவின் புதல்வியுமாகிய மங்கையர்க்கரசியாரும், அவ்வரசன் முதன் மந்திரியாராகிய குலச்சிறைநாயனருமாகிய இருவருமே நாமெல்லாஞ் செய்துகொண்ட புண்ணியத்தினாற் சைவர்களாயே இருந்தார்கள். இங்ஙனம் ஒழுகுநாளிலே திருஞானசம்பந்தமூர்த்திநாயனருடைய அளவிலா மகிமைகளையும் அவர் செய்த அற்புதங்களையும், அவர் வேதாரணியத்தில் எழுந்தருளி யிருத்தலையும் அவ்விருவரும் கேள்வியுற்றுப் பரிசனங்களை அவர்பால் ஏவினார்கள்.

அப்பரிசனங்கள் வேதாரணியத்தைச் சேர்ந்து திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் திருமடத்தை அடைந்து, அவரது ஆஞ்ஞையினால் அவர்கள் மடத்தினுள்ளே புகுந்து, அவரைத் தரிசனஞ் செய்து அஞ்சலியஸ்தராய் நின்று, "பாண்டிநாட்டாரெல்லாம் க்ஷமணருடைய துர்ப்போதனையினாலே க்ஷமணசமயத்தவராயினர்; அது கண்டு, அரசியாரும் மந்திரியாரும் மிகக் கவலைகொண்டவர்களாகி, இந்தச் சமாசாரத்தைத் தேவரீருக்கு விஞ்ஞாபனம் செய்யுமாறு அடியேங்களை அனுப்பினார்கள்" என்று விண்ணப்பஞ்செய்தார்கள்.

அது கேட்ட திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் அடியார் கூட்டங்கள் பக்கத்திலே சூழ, முத்துப்பல்லக்கின்மீதிவர்ந்து வே

தாரணியத்தைக் கடந்து, பாண்டிநாட்டை அடைந்து, திருவாலவாயுடைய சோமசுந்தரப்பெருமானை வழிபட்டு, க்ஷமணர்கள் தீர்க்கமாட்டாது போய கூன்பாண்டியனுடைய வெப்புநோயை "மந்திரமாவது நீறு" என்னும் தமிழ்வேதம் ஓதி அந்நோயை நீக்கியும், அவ்வரச சபையிலே அமைக்கப்பட்ட மிகச் சுவாலிக்கும் அக்கினியிலே இடப்பட்ட ஆருகதசமய நூல்களெல்லாம் தீய்ந்து சாம்பலாய்ப்போக, நாயனார் "போகமார்த்தபூண்முலையாள்" என்னும் திருநள்ளாற்றுப் பதிக ஏட்டை அந்நெருப்பிலிட்டு அழியாது பச்சையாயிருக்கச்செய்து, அதனைப்பின் தமது திருக்கரத்தினால் எடுத்தும், வைகையாற்றிலே இட்ட க்ஷமணநூலேடுகளெல்லாம் அவர்களை கட்டாற்றில் விட்டு ஆற்றிலே அள்ளுண்டுபோய்விட, நாயனார் தாம் அப்போதே திருவாய்மலர்ந்தருளிய வாழ்கவந்தணர் வானவரானினம் என்னும் திருப்பாசுரத் திருமறையை ஏட்டில் வரைந்து ஆற்றில் இட்டு அது நதியில் எதிர்ந்து ஜலத்தைக் கிழித்துக்கொண்டு செல்லச்செய்தும், இங்ஙனம் யானைமலை முதலிய எட்டு மலைகளினும் வசித்த க்ஷமணர் எண்ணாயிரவரையும் அரசன் முதலாயினோர் முன்னே செயித்து, அந்த க்ஷமணர்கள் தங்கள் சபதப்பிரகாரம் கழுவேறிவிட, அதனால் அந்த க்ஷமணசமயத்தை அழித்து, மங்கையர்க்கரசியார்க்கும் குலச்சிறைமந்திரியார்க்கும் பேரன்பும் பேரானந்தமும் பிறக்குமாறு பாண்டியனும் மற்றைப்பாண்டிநாட்டாரும் விபூதிதரிக்கச் செய்து, இங்ஙனம் வைதிகசைவம் தலையெடுக்குமாறு சைவஸ்தாபனஞ் செய்துவிட்டு, பாண்டிநாட்டைக் கடந்து, பற்பல ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு, திருத்தெளிச்சேரியை அடைந்து சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு செல்லுங்கால், பவுத்தர்களுடைய ஸ்தானமாகிய போதிமங்கை சமீபிக்க, அடியார்களெல்லாம் கடலொலி நிகர்ப்பச் சங்குமுதலிய பலவகைப்பட்ட வாத்தியங்களை முழக்கி ஆரவாரிக்க, முத்துச் சின்னங்கள் "பரசமயகோளரி வந்தார்" என்று பணிமாறியபோது, அங்கிருந்த புத்தநந்தி மிகக் கோபமுற்றுத் தன்னை வாதிலே வென்றபின்னன்றோ வெற்றிச்சின்னம் ஊதல்வேண்டுமென்று தடுக்க, திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருடைய மாதுலரும் தேவாரலேககருமாகிய சம்பந்தசரணாலயர்

புத்தர்சமண்கழுக்கையர்பொய்கொளாச்
சித்தத்தவர்கடெளிந்துதேறின —
வித்தகநீறணிவார்வினைப்பகைக்
கத்திரமாவனவஞ்செழுத்துமே

என்னும் அஸ்திரவாக்கை ஓதி "இப்புத்தனுடைய சிரம் உருண்டு விழும்படி இடி இடித்து விழக்கடவது" என்று சபித்தவுடனே, இடியிடித்துப் புத்தநந்தியுடைய சரீரத்தையும் தலையையும் வேறு படக் கூறுபடுத்திவிட, அதுகண்ட பவுத்தர்கூட்டத்தினர் அஞ்சிக் குலைந்தோடி மீண்டும் ஒருங்கு கூடி, "இச்செய்கை வஞ்சனையோ இன்றேல் அவர்கள் சைவசமயத்தன்மையோ" என்று மருண்டு, "மந்திரவாதமின்றித் தர்க்கம் பேசுமாறு வாருங்கள்" என்றுவிளித்துச் சாரிபுத்தனைத் தலைவனாகக்கொண்டவராகி நணுகியபோது, நாயனார் திருவுளமிகமகிழ்ந்து முத்துச்சிவிகையினின்றிறங்கி, ஓர் சத்திரமண்டபத்தின்மேலேறித் திரையிட்டு வீற்றிருப்ப, புத்தநந்தியுடைய சிரசை அஸ்திரவாக்கினாற் கூறுபடுத்திய அச்சம்பந்தசரணாலயர் அச்சாரிபுத்தன் முதலாயினோரது பவுத்தசமயத்தை நிராகரணஞ் செய்து அவனை வென்று நாயனாருடைய திருவடிகளை நமஸ்கரிக்க, நாயனார் அப்பவுத்தர்களுக்குச் சைவசமயமே சற்சமயம் என்று சந்தேகவிபரீதமற உணர்த்தி அவர்களைச் சைவர்களாக்கினார்.

இங்ஙனம் புத்தர்களை வாதிலே வென்றபின், சம்பந்தசரணாலயர் சீகாழிக்குப்போய் ஸ்ரீ ஞானசம்பந்தப்பெருமானோடு வீற்றிருக்குங்காலத்திலே, செந்தமிழ்நாட்டு அடியவர்கள் வேதசிவாகமங்களின் தத்துவப்பொருள் வடமொழிவல்லுநர்க்கன்றி மற்றையோர்க்கு எளிதிற்புலப்படமாட்டாதாகையால் எங்களுக்கிரங்கித் தத்துவங்களை விளக்கித் தமிழில் ஓர் நூலைத் தந்தருளல்வேண்டுமெனப் பிரார்த்திக்க, வேதசிவாகமங்களினின்று பதிபசுபாசத் துண்மைகளைத் திரட்டித் தத்துவவிளக்கம் என்னும் பெயரினால் இந்நூலைத் தமிழிலே கலித்துறைப்பாவினாலியற்றி அவர்களுக்கு அநுக்கிரகம்

புரிந்து ஸ்ரீஞானசம்பந்தப்பெருமானோடு ஆச்சாபுரம் எனப் பெய ரியதிருநல்லூர்ப்பெருமணத்திற் றோற்றிய சோதியிற்கலந்தருளினார்.

இவர் கலந்து நெடுங்காலஞ் சென்றபின், வடமொழி தென் மொழியில் வல்ல போஜராஜர் இத்தத்துவவிளக்கத்தை ஆதாரமா கக்கொண்டு ஆரியாவிருத்தசுலோகத்தினால் தத்துவப்பிரகாசம் என் னும் வடமொழிநூலை இயற்றினர். அது இப்போது அஷ்டப்பிரகர ணங்களுள் ஒன்றாகக் கணிக்கப்படுகின்றது.

இத்தத்துவவிளக்கநூலிற் காணப்படும் செய்யுட்கள் சிற்சில ம றைஞானசம்பந்ததேசிகராலும் நிரம்பவழகியராலும் தனித்தனி இயற்றப்பட்ட சிவஞானசித்தியாருரைகளினும், மதுரைச் சிவப்பிர காசர்செய்த சிவப்பிரகாசவுரையினும் உதாகரணங்களாக வரையப் பட்டுள்ளன.

சம்பந்தசரணாலயப்பெருமான் அருளிய தத்துவவிளக்கச் செய் யுளுக்கு மூலமாய்நின்ற வேதாகமபுராணப் பிரமாணங்களையும், அவற்றுக்கு இன்றியமையாது வேண்டற்பாலனவற்றையும், அச் செய்யுட்களுக்கு நேரே பொருளாய்நின்ற போஜராஜரது தத்துவப் பிரகாசசுலோகங்களையும் வேண்டுமிடமோர்ந்து உதகரித்திருக்கின் றேம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் * காலம் ஏறக்குறைய நாலா யிரம் வருஷத்தது என்றும், சங்கராசாரியர்காலத்துக்கு மூற்பட் டவர் போஜராஜர் என்றும், இவர்க்கு முற்பட்டவர் ஸ்ரீஞானசம் பந்தப்பெருமான் என்றும் அறியப்படலான், ஸ்ரீஞானசம்பந்தப் பெருமானது மாதுலராகிய சம்பந்தசரணாலயர் அருளிய தத்துவவி

---

* யாழ்ப்பாணம் ஆ. முத்துத்தம்பிப்பண்டிதர் என்பார் தமது அபிதானகோசத்தில் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் காலம் ஐந் து பிரபல நியாயங்கொண்டு நாலாயிரம் வருஷத்துக்கு முன்னுள்ள தென்றும், சிலாசாசனங்கொண்டு செய்யப்பட்ட கால நிச்சயம் அங்கீகரிக்கற்பாலதொன்றன்றென்றும் வரைந்துள்ளார். ஆண்டுக் காண்க.

ளக்கம் நாலாயிரம் வருஷத்தது என்றும், அதனால் இத்தத்துவ விளக்கம் ஓர் மிகப் பிராசீனமாகிய சைவசித்தாந்தநூல் என்றும் யாவரும் அறியற்பாலர்.

தேவாரத்திருப்பதிகத்தை நிகர்ப்பத் திருச்செய்யுட்கடோறும் சீகாழிப்பிரானையும் திருக்கழுமலமாகிய திருப்படைவீட்டையுமுடையது இத்தத்துவவிளக்கம் என்னும் நூலாம்.

சைவசித்தாந்தச்செல்வராகிய காரைக்குடி ஸ்ரீமாந் ராம. சோ. சோக்கலிங்கச்செட்டியாரவர்கள் இந்நூலை அச்சிடுமாறு பொருளுபகரிப்பித்துச் செய்த உதவி மறக்கற்பாலதொன்றன்று.

இங்ஙனம்,

ஸ்ரீகாசிவாசி-செந்திநாதையர்.

சிவமயம்

# சிறப்புப்பாயிரம்

"எம்பந்த" என்னுஞ் செய்யுளிற் சம்பந்தசரணாலயர் எனவே ஆக்கியோன் பெயரும், தத்துவவிளக்கம் எனவே நூற்பெயரும், "சீரார் கயிலைத் திருவாய்மலர்ந்த சிவாகமங் கற்றாராய்வது வடசொற் பயின்றார்க் கெளிதம்மொழியைச் சாராதவருந் தத்துவ ஞானந் தலைப்படுதற் கோரார் தமிழ்ச்செய்யுளால்" என்னுந் திருச்செய்யுளினால் வழியும் காரணமும், தமிழ் வழங்கு நிலமே இந்நூல் வழங்கு நிலமாதலின் எல்லையும், சரியையாதி மூன்று பாதங்களை ஆராயு நூல்களின் மேற்பட்டது தத்துவவிளக்கமாதலின் அந்நூல்கள் கேட்டபின் இந்நூல் கேட்கத்தக்கது என்னும் யாப்பும், "எய்தும் பொருள்" என்ற செய்யுளினாற் பதி பசு பாசம் என்னும் திரிபதார்த்தங்களின் விளக்கமே உண்மையின் நுதலிய பொருளும், இருவினையொப்பு மலபரிபாக முற்றவரே இந்நூல் கேட்டற்கு அதிகாரிகளாதலின் கேட்போரும், "பவமேவியநெறி" என்னுஞ் செய்யுளிற் "சிவமேவுவர்" என்றமையாற் பயனும், திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் காலத்ததாதலிற் காலமும், திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருநாவுக்கரசுநாயனார் திருநீலகண்டயாழ்ப்பாணநாயனார்முதலிய அறிஞர் அவைக்கண்ணே ஏறினமையாற் களனுமாகிய பதினொன்றும் இந்நூலுக்குச் சிறப்புப்பாயிரமாகக் கொள்ளக்கிடந்தன.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்

# சம்பந்தசரணாலயர் துதி.

எம்பந்த பாசமறக் காழிவந்த யென்றுணைவ
னெழுதுமறை யெழுதும் பேறு
நம்பன்ற னருளாதனுற் பெற்றஞான நன்முனி
தத்துவவிளக்க நவின்ற நாவன்
வம்பின்கட் பிதற்றிவரு புத்தநந்தி மௌலியினி
லிடிவிழவண் டமிழ்நூல் பாடுஞ்
* சம்பந்த சரணா லயன்றன்பாதஞ் சந்ததமு
னைந்துநகிச் சிந்தை செய்வாம்.

(இதன் பொருள்) எம்பந்த பாசம் அறக் காழிவந்த என் றுணைவன் எழுதுமறை எழுதும் பேறு = எமது பந்தமாகிய மும்மல பாசங்கள் வலிகுன்றுமாறு சீகாழிப்பதியின்கண்ணே திருவவதாரஞ் செய்த எனது பிராணநாயகராகிய ஸ்ரீஞானசம்பந்தமூர்த்திநாயனாருளிய தமிழ் வேதத்தைத் தமது திருக்கரத்தினால் லேக

* ததாஸ்ய ஶிஷ்யோ நாம்நா ஸம்பந்தஶரணாலய꞉|
தந்நாமைவக꞉ ப்ராஹ கோபாத் ஶஸ்த்ராஸ்த்ராணி வை||

"அப்போது திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருடைய நன்மாமனாரும், அவரது தேவாரப்பதிகங்களை எழுதுபவருமாகிய சம்பந்தசரணாலயர் கோபத்தினுற் (புத்தநந்தியுடைய) தலையின்கண்ணே (இடிவிழுமாறு புத்தர் சமண் கழுக்கையர் என்னும் (அஸ்திர வாக்கைக்) கூறினர்" என்று சிவபக்தவிலாசம் கூறுகின்றது.

ளஞ் செய்யும் பேற்றை ; நம்பன்றன் அருளதனால் பெற்ற ஞான நன்முனி = சிவபெருமான் திருவருளாற் பெற்றுக்கொண்ட நல்ல சிவஞானமுனிவரும் ; தத்துவ விளக்கம் நவின்ற நாவன் = தத்துவவிளக்கம் என்னும் திவ்ய சைவசித்தாந்தநூலைத் திருவாய் மலர்ந்தருளிய நாவினருமாயுள்ள ; வம்பின்கட் பிதற்றிவரு புத்த நந்தி மௌலியினில் இடிவிழ வண் தமிழ் நால் பாடும் = வம்பு கொண்டு பித்துரை பகர்ந்து வந்த புத்தநந்தி தன் தலைமீது இடி வீழ்ந்திறக்குமாறு (ஸ்ரீ ஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருவாய்மலர்ந் தருளிய புத்தர் சமண் கழுக்கையர் என்னும்) அழகிய தமிழாகிய அஸ்திரவாக்கைப் பிரயோகித்தருளிய ; சம்பந்த சரணாலயன்றன் பாதம் சந்ததமும் நைந்துருகிச் சிந்தை செய்வாம் = சம்பந்தசரணாலயப்பெருமானுடைய திருவடிகளை எஞ்ஞான்றும் நெக்கு நெக்குருகித் தியானஞ்செய்வாம் எ-று.

(விசேஷவுரை) மந்ததர, மந்த, தீவிர, தீவிரதரம் என்னும் நால்வகைச் சத்திநிபாதங்களைத் தத்தம் கன்மபரிபாக முறையானேயுடைய ஆன்மாக்களாகிய எங்கள் ஆணவம் மாயை கன்மம் என்னும் முப்பாசங்களும் அற்று நாமுய்ந்துபோம்வண்ணம் அருட்பாவாகிய தமிழ் வேதத் தேவாரத்தைத் திருவாய்மலர்ந்தருளுமாறு ஸ்ரீகாழிப்பதியின்கண்ணே எழுந்தருளிய எனது ஆன்மநாயகர் பரமாசாரியராகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனாராமாதலின் அவர் "எம்பந்த பாசமறக்காழிவந்த வென்றுணைவன்" என்று கூறப்பட்டார்.

இருக்காதி ஆரியவேதம் எழுதாமறை எனப்படுவதாக, அவ்வேதத்தின் சாரமாகிய தமிழ்வேதம் எழுதப்பட்டதொன்றுமாதலின் எழுதுமறை எனப்பட்டது.

இடையிலே ஒவ்வோர்கால் அற்றுப்போகக்கூடியனவாய் உயிர்களை நரகலோகமுதலியவற்றுக்குக் கொண்டுபோமாறு யமன் முதலாயினோர் கைக்கணுள்ளனவாய பாசங்கள்போலாகாது, அளவிலாப் பிறவிதோறும் செம்பிற் களிம்புபோல ஆன்மாக்களை

டியைந்ததனாற் சிவத்தை அறிந்து பேரின்பமெய்தாவண்ணம் தடுத்து மறைத்துநின்று, அநாதிநித்தியமாதலால், முத்திதசையில் ஆன்மாக்களுக்கு இன்பத்தை விளைவித்தற்குக் காரணம் அவ்வாணவபாசமாதலின், "எம்பந்தபாசமற" என்றுரைக்கப்பட்டது.

"அற" என்பது, "பரிதிமுன்னிருளெனமலம்பணையிணைமாயும்" என்றவாறு, ஆணவபாசம் சூரியப்பிரகாசத்தின் முன் இருள்போலத் துரிய பரைதரிசனத்திற்றன் சத்திகெட்டு நிற்பதென்னும் பொருட்டாம்.

தன்மை முன்னிலை படர்க்கையிலுள்ளோரை யெல்லாம் அடக்குதற்கே "எம்" என்னும் விசேஷணம் புணர்த்தி "எம்பந்தபாசம்" எனக் கூறப்பட்டது.

யாவத³க்ஷரஸங்க்²யாநம் ஶிவஜ்ஞாநஸ்ய புஸ்தகே|
தாவத்³வர்ஷஸஹஸ்ராணி தா³தா ஶிவபுரே வஸேத்|
[illegible]|
[illegible] ஶிவபுரம் வ்ரஜேத்||

"சிவஞானபுஸ்தகத்தைக் கொடுப்பவன் அச்சிவஞானபுஸ்தகத்தில் எவ்வளவு எழுத்துக்களுண்டோ அத்துணை ஆயிரம் கற்பம் மகாசிவபுரத்தின்கண்ணே வசிப்பான்; தனக்கு முன்னும் பின்னுமுள்ள பத்தும்பத்துமாகிய இருபது குலத்தினரையும் மகாசிவலோகத்திருத்தித் தானும் அதனை அடைகின்றான்" என்று சிவதருமோத்தராகமம் கூறுகின்றவாறு, சிவஞானத் தமிழ்வேதத்தை எழுதவல்லவர் பற்பலர்பதினாயிரம் திருக்கூட்டத்துள்ளே உளராயவிடத்தும், அதிதீவிர சத்திநிபாதமுற்று நின்ற ஸ்ரீஞானசம்பந்தப் பெருமானது நன்மாமறையாகிய சம்பந்தசரணாலயரே சிவபெருமான் திருவருளால் அச்சிஞானத் தமிழ்வேதத்தை எழுதும்பெரும்பேறு பெற்றாராதலின் "எழுதுமறையெழுதும் பேறு நம்பன்றனருளதனாற்பெற்றஞானநன்முனி" என்று கூறப்பட்டார்.

குறையுணர்வாகிய பாசஞான பசுஞானங்களுக்கு மேற்பட்ட சிவஞானச்செல்வராய்,

[illegible]
[illegible]

"பாசப்பற்றுடையாருடைய சித்தமானது எக்காலமும் இந்திரிய விஷயங்களிற் செல்வதேயாக, முத்தர்களுடைய சித்தம் இந்திரிய விஷயங்கட்கு எட்டாத நிராகிருத பரமாகாய சிவனார் திருவடியிலே செல்லும்" என்று நிச்சுவாசகாரிகையும்,

[illegible]

"சிவனாது பரமானந்த ரூபத்தைக் கண்டு ஆனந்தமாய் விளங்குகின்றான்" என்று தேவிகாலோத்தரமும் கூறுமாறு, இந்திரியாதீதபதத்துப் பரமாகாய பரமானந்த மகோததியிலே கருத்தோங்கி நிற்பவராதலின் சம்பந்தசரணாலயர் "ஞானமுனி" யென்றுரைக்கப்பட்டார்.

காடுகடோறும் சஞ்சரித்துச் சடைகள் கட்டிக் காய், கனி, சருகு, வாயுபக்ஷணஞ் செய்கின்ற முனிவர்களுக்கும் கிட்டுதற்கரிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரது திருக்கல்யாணத்திற் கிளர்ந்த சிவசோதியை எளிதிலே தலைப்பட்டுக் கலந்தவர் சம்பந்தசரணாலய முனிவராதலின், அவர் "நன்முனி" எனப்பட்டார்,

புத்தநந்தி தன்னையும் ஓர் பெரிய மதவாதி என்று நினைந்து திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரது முத்துச்சிவிகைக்கு முன்னே "பரசமயகோளரி வந்தார்" என்று ஊதிய முத்துச்சின்னத்தை ஊதவொட்டாது நீதிக்கு மாறுகத் தீவினைவலியால் தடுக்கப்போந்தவனாதலின் "வம்பின்கட்பிதற்றிவருபுத்தநந்தி" என்று கூறப்பட்டது.

பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவ
ரத்தமு மாவியு மாண்டொன்றின் மாய்ந்திடுஞ்
சத்திய மீது சதாநந்தி யாணையே

என்று திருமூலநாயனாரருளியவாறு, பாவ கன்மங்கள் பல்வகைப்பட்டனவேயாக, அப்பாவங்களின் பயன் எய்தற்கு மூன்று வருஷம் ஒரு வருஷமுதலியவாகச் செல்வனவேயாக, புத்தநந்தி சின்னத்தை ஊதவொட்டாது தடுத்தமை அதிபாதகமாகிய சிவத்துரோகமாதலினானும், அதற்குச் சிரச்சேதமே பிராயச்சித்தமென்று வேதசிவாகமங்கள் கூறுகின்றமையானும், பரமாசாரிய சுவாமிகளாகிய ஸ்ரீஞானசம்பந்தப்பெருமானது கடாக்ஷவீக்ஷணம் பெற்று நின்மலதுரியத்தின்கண்ணே நின்ற சம்பந்தசரணாலய முனிவர்

வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை

என்னும் உத்தரவேதத் திருக்குறட்கிலக்காக நின்ற அப்புத்தநந்தியின் தலையை அறுக்குமாறு பிரயோகித்த "புத்தர் சமண்கழுக்கையர்" என்னும் வாக்கஸ்திரத்தினால் அப்புத்தநந்தியின் தலையிலே வர்ஷாகாலத்தில் எய்தும் இடிபோலாகாத மற்றோர் வெள்ளிடியே காலம் தாழ்க்காது வீழ்ந்து அவன் தலையையும் உடலையும் வேறாக அறுத்துவிட்டது.

ஸ்ரீஞானசம்பந்தசரணாலயமுனிவரது திருவடிகளை நாம் எஞ்ஞான்றும் சிந்தித்து நைந்து உருகுங்கால், அச்சம்பந்தசரணாலய முனிவராகிய சங்கம ஆன்மலிங்கத்திலே தயிரில் நெய்போல எஞ்ஞான்றும் விளங்கி, அன்பின் நிலையே நிலையாய்ப் பரமானந்தப் பெருஞ்செல்வமே சுயந்திருமேனியாயுள்ள சிவபரம்பொருள் "தாபரசங்கமங்களென்றிரண்டுருவினின்று மாபரன் பூசைகொள்வன்" என்று காணப்படலான், அவ்வுருகிய அன்பின்வழியே புகுந்து பேரின்ப போகத்தைப் பாலித்திடுமாதலின், "சம்பந்தசரணாலயன்றன் பாதஞ் சந்ததமு நைந்துருகிச் சிந்தை" செய்தல் முறையாம் என்று பெறப்பட்டது.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# தத்துவவிளக்கம்

## மூலமும் உரையும்

---:o:---

### பிரமபுரீசர் வணக்கம்*

சித்தத் துவந்தெமக் கின்பம் படச்சென்னி மேலிருந்து
மெய்த்தத் துவங்கட்கு மேலா வனவிய லார்பசுநூற்
கோத்தத் துவந்து குறுகா தனகோச்சை மன்னவன்று
ளித்தத் துவவிளக் கம்பகர் வான்பணிந் தேத்துதுமே.

(இ-ள்) எமக்கு இன்பம் படச் சித்தத்து உவந்து சென்னிமேலிருந்து = எமக்குச் சிவானந்தபோகம் விளையுமாறு (எமது அறிவின்கண்ணே சிவசொரூபத்தை விளக்கத்) திருவுள்ளத்திலே விரும்பி எமது சென்னியின்கண்ணே (சூட்டுதலான்) அமர்ந்து; மெய்த் தத்துவங்கட்கு மேலாவன = சிவதத்துவங்கட்கு மேலாயினவாய்; இயலார் பசுநூற் கொத்து அத்து வந்து குறுகாதன = இயல்புபொருந்திய பசுசாஸ்திரத்தொகுதிகள் அதனிடத்தியைந்து எவ்வியல்பின என்று கூறிப்போந்து அடையப்பெறாதனவாயுள்ள; கொச்சை மன்னவன் தாள் இத்தத்துவவிளக்கம் பகர்வான் பணிந்து ஏத்துதும் = கொச்சை எனப் பெயரிய திருப்பதிக்கிறைவராகிய பிரமபுரீசரது திருவடிகளை இத்தத்துவவிளக்கம் (இடையூறின்றிப்) பாடி முடியுமாறு சிந்தித்துத்துதித்து வணங்குவாம் எ-று.

(வி-ரை) "நான்பெற்றவின்பம்பெறுகவிவ்வையகம்" என ஸ்ரீமூலநாயனார் திருவாய்மலர்ந்தருளியவாறு, பெரியோர் தாம் அடையும் இன்பத்தை உலகினரும் பெறல்வேண்டும் என்னும் காருண்ணிய திருவுள்ளமுடையராதலின், தன்மை முதலிய மூவிடத்து முள்ளாரையும் உளப்படுத்துமாறு "எனக்கு இன்பம்பட" என்று கூறாது "எமக்கு இன்பம்பட" என்று அருளிச்செய்தார்.

[illegible]

---

* வணக்கம், பொருளியல்புரைத்தல், வாழ்த்து என்னும் மூவகை மங்கலவாழ்த்தினுள்ளே இது வணக்கமாம்.

"அவர் (சிவபிரான்) ஆனந்தமுடையர்; அவர் ஆனந்தத்தைவிளைவிக்கின்றார்; ஆன்மா பிரமானந்தத்தை அடைந்து ஆனந்தமாகின்றது" என்று தைத்திரீயோபநிடதமும்,

ரஸோ ஹ்யேவாயம் லப்த்வாநந்தீ பவதி நாந்யதா ।

"பரப்பிரமசிவம் ஆனந்தமுடையது; அந்தப் பிரமானந்தத்தை (ஆன்மா) அடைந்து ஆனந்தமாயிருக்கின்றான்; மற்றோர்பிரகாரத்தாலன்று" என்று ஆனந்தாமிர்தமும் கூறுகின்றன.

நந்தி (டு நதி) என்னும் தாதுவினின்று பிறந்த ஆனந்தம் என்னும் மொழியும் இன்பம் என்னும் மொழியும் ஒருபொருட்சொற்களாய் வழங்கப்படுகின்றன. ஆன்மாவின் வேறாய் மூலப்பிரகிருதிக்கண்ணதாகிய சாத்துவிககுணம் ஆன்மாவின்மாட்டுமேற்பட்டு விளங்குதல் உலகவின்பமேயாக, ஆன்மாவுக்கு வேறாய்ச் சிவத்தின்கண்ணே உளவாகியமுற்றுணர்வு முதலிய எண் குணங்களையும் அடக்கிநின்ற சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவமென்பன அவ்வான்மாவின்மாட்டுமேம்பட்டுவிளங்கும் விளக்கமே சிவானந்த பேரின்பமாம்.

சிவானந்தமானது ஞானாசாரியர் உபதேசித்தமாத்திரையானே சிவசாஸ்திரசிரவணாதி வேண்டாது அதிதீவிரபக்குவமுடையார்க்கு விரைந்து உடனே விளையும். ஏனையோர்க்கு அது சிவசாஸ்திரசிரவணாதிகளாற் சோபானமுறையானே விளைவதொன்றுமாதலின், இன்பம் விரைந்துவிளைய எனப் பொருட்படக் கூறாது "இன்பம்பட" என லேசானே கூறப்பட்டது. "காலுந்தலையுமறியார்கலதிகள், காலந்தச்சத்தியருளென்பர்காரணம், பாலொன்றுஞானமே பண்பார்தலையுயிர்" என்று திருமூலநாயனாரும்,

உச்சியாய் மென்றசையா யோடாகி மூளையாய்
நச்சியா வென்றலையா யீர்மயிர்பேன்—மெச்சிரா
வானைவைத்த கண்ணி மணவாளன் மன்றினிடத்
தானைவைத்த வென்றன் றலை.

அஞ்சுவி ரலாயக் குதியா யகம்புறமாய்
விஞ்சுநகமாய்ச் சிவந்து மெல்கியா—துஞ்சா
துலைமீது வெண்ணெயென வுள்ளுருக்கு மென்றன்
றலைமீது வைத்த சிவன்றாள்

என்று பெரியோர் கூறுமாற்றானும்,

ஜ்ஞானாக்யா தக்ஷிணே தஸ்ய வாமதஸ்து க்ரியாஹ்வயா।

'சிவனாரது வலத்திருவடி ஞானசத்தி எனவும், இடத்திருவடி கிரியாசத்தி எனவும்'' வாயுசங்கிதை கூறுமாற்றானும், திருவடியினாலும் தலையினாலும் முறையே குறிக்கப்பட்டவை அருட்சத்தியும் ஆன்மாவுமேயாம்.

ஶிஷ்யஸ்ய ஸம்முகம் க்ருத்வா ஸ்வஸ்ய பாதத்வயம் ததா।
ஶிவஶக்திஸ்வரூபேண . . . மூர்த்தாதௌ விந்யஸேத்॥

"தக்ஷிணாபிமுகமாக வீற்றிருக்கும், ஆசாரியர் சீடனை எதிர்முகமாக்கித் தமது பாதமிரண்டையும் சிவசத்திரூபமாகக்கொண்டு அச்சீடனுடைய சிரசுமுதலியவற்றிலே அத்திருவடியை நியசிக்க'' என்று இரௌரவாகமமும்,

அவிச்சேதேன ஶிரஸோ பாதம் காருண்யதேஶிகஃ।
தத்த்வாஜ் ஜ்ஞானஸ்வபாவம் ஶிஷ்யஸ்ய போதயேத்।
ப்ரயத்னேனைவ தேன த்விதீயேனைவ தர்ஶனம்।
த்ருதீயேனைவ ஸம்ஸ்பர்ஶம் சதுர்த்தேன து வீக்ஷணம்।
பஞ்சமேன து ஸம்ஸ்பர்ஶம் ஷஷ்டம் ஸ்யாத் தச்ஶோதனம்।
ஸப்தமம் ஶிவபாவாப்த்யஷ்டமம் ஶிவதர்ஶனம்।
நவமம் ஶிவயோகஸ்து தஶமம் ஶிவஶோதகம்।
த்ரித்ரிதேஹேஷு தத்கர்ஷணம் பரஸம்பாவதீக்ஷயா॥

"(ஆசாரியராலே) சீடனுடைய சென்னிமத்தியிலே அவரது பாதம் வைக்கப்பட்டது; அக்காருண்ணியதேசிகரானவர் முதலாவதாகிய தத்துவரூபமும், இரண்டாவதாகிய தத்துவதரிசனமும், மூன்றாவதாகிய தத்துவசுத்தியும், நான்காவதாகிய ஆன்மரூபமும், ஐந்தாவதாகிய ஆன்மதரிசனமும், ஆறாவதாகிய ஆன்மசுத்தியும், ஏழாவதாகிய சிவரூபமும், எட்டாவதாகிய சிவதரிசனமும், ஒன்பதாவதாகிய சிவயோகமும், பத்தாவதாகிய சிவபோகமுமாகிய இந்தத் தசகாரியஞானவியல்பைச் சீடனுக்குப் போதிப்பாராக; பாசமும் பசுவும் தனித்தனி மும்மூன்றாகவும், பதி நான்காகவும் (இங்ஙனம்) பிரிபட்டுள்ளன; (இந்தத் தசகாரிய ஞானமார்க்கம் இங்ஙனம் விதிக்கப்பட்டுள்ளது)" என்று காமிகாகமமும்,

> பாவநாதீக்ஷயா ஶிஷ்யம் ஶோதயித்வா யதாவிதி |
> ஶிவஜ்ஞாநபோதஶாஸ்த்ரம் து தத்யாத் தத்த்வார்த்த வேதநம் ||

"(ஆசாரியர்) பாவனாதீக்ஷையினாலே சீடனை விதிப்பிரகாரம் தூயனாக்கிக்கொண்டு, (அந்தத்தசகாரியங்கள் அடங்கியதாய்ப்) பதிபசுபாசசிந்தனைக்குரியதாயுள்ள சிவஞானபோதசாஸ்திரத்தைச் சீடனுக்குக் கொடுக்க" என்று இரௌரவாகமமும் கூறுமாற்றாற் சிவானந்தபோகரசம் சீடனுக்கு எய்துமாறு போந்த ஞானதீக்ஷாமுறை சுருக்கிச் சூசிப்பிக்கப்பட்டது.

> சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சும் போலவே
> சூரிய காந்தஞ்சூழ் பஞ்சைச் சுடமாட்டா
> சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோ
> லாரியன் றோற்ற மலங்களே

என்று திருமந்திரம் கூறுமாறு, கிரணத்தோடு தோன்றும் ஞாயிற்றின் சந்நிதிமாத்திரையானே சூரியகாந்தக்கல்லின்கண் நெருப்புத் தோன்றுமாறுபோல, முத்திபஞ்சாக்ஷர கிராவியத்தோடு தோன்றும் ஆசிரியன் சந்நிதிமாத்திரையானே

அணோரணீயாந்|

"அணுவுக்கணுவாய்" என்று கடோபநிடதமும் "அணுவோரண்டமாஞ் சிறுமைகொண்டு" என்றும், "நுகர்கின்ற தொண்டர்தமக்கணுவாகி நொய்யானை" என்றும் அருட்பாக்களும் கூறுமாறு மாணுக்களது பிண்டமாகிய சரீரத்துள்ள ஆன்மாவாகிய தலையின் கண்ணே அருண்ஞானமிர்தம் மிகுமாறு வைக்கப்பட்ட அருட்டிருவடிகளானவை

மஹதோ மஹீயாந்|

"மகத்துக்கு மகத்தாய்" என்று கடோபநிடதமும் "அண்டமோரணுவாம்பெருமைகொண்டு" என்றும், "நிகரிலாமேருவரையணுவாக நீண்டானை" என்றும் அருட்பாக்களும் கூறுமாறு, ஆன்மதத்துவ வித்தியாதத்துவம் என்னும் பிருதிவியாதி மாயாந்தமாயுள்ள முப்பத்தோர் தத்துவங்கட்கு மேலாய் நின்ற மெய்த்தத்துவங்களாகிய சிவதத்துவம் ஐந்துக்கும் அப்பால் விளங்குவனவாம் என்றுணர்த்தவே "சென்னிமேலிருந்து மெய்த்தத்துவங்கட்கு மேலாவன" என்றருளிச்செய்யப்பட்டது.

ஶிவதத்வாநி பஞ்ச நித்யம் ஸத்யஸ்ய ஸாதநம்|

"சத்தியத்தின் சாதனமாகிய சிவதத்துவம் ஐந்தும் நித்தியம்" என்று ஞானசித்தியாகமமும், "விதையோடீசர்சாதாக்கியஞ்சத்தி சிவங்களைந்துஞ், சுத்ததத்துவஞ்சிவன்றன் சுதந்தரவடிவமாகு நித்தமென்றுரைப்பர்" என்று சிவஞானசித்தியாரும் கூறுதலானும் சிவதத்துவங்கள் "மெய்த்தத்துவங்கள்" எனப்பட்டன.

யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ|
ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந் ந பிபேதி குதஶ்சந||

"மனசினுற் குறிக்கப்படும் பசுஞானமும், வாக்கினுற் குறிக்கப்படும் பாசஞானமுமாகிய இரண்டும் செல்லமாட்டாது எங்கிருந்து

மீண்டுவிடுகின்றனவோ, அப்படிப்பட்டபரப்பிரமசிவானந்தத்தைப் (பதிஞானத்தினால்) அறிகின்றவன் யாண்டும் பயப்படுவானல்லன்'' என்று தைத்திரீயோபநிடதமும்,

பாஶஜ்ஞாநாந்ந முக்திஸ்ஸ்யாத் பஶுஜ்ஞாநாத்ததைவச ।
ஸர்வகஸ்ய யதோ முக்தி: பதிஜ்ஞாநேந ஸித்யதே ॥

“பாசஞானத்தினாலும் அங்ஙனமே பசுஞானத்தினாலும் முத்தி எய்தாது; எங்கும் வியாபகமாகிய முத்தி பதிஞானத்தினால் எய்துகின்றது'' என்று சுவாயம்புவாகமமும் கூறுமாற்றானும், லோகாயதன், மாத்தியமிகன், யோகசாரன், சௌத்திராந்திகன், வைபாடிகன், ஆருகதன் என்னும் புறப்புறச்சமயத்தாருடையவும், தார்க்கிகன், மீமாஞ்சகன், ஏகான்மவாதி, சாங்கியன், யோகி, பாஞ்சராத்திரி என்னும் புறச்சமயத்தாருடையவும் பசுநூற்றொகுதிகள் இவ்வியல்பின என்று இசைந்து இசைத்து அடைதற்கியலாதனவாயினவாம் அத்திருவடிகள் என்று உணர்த்தவே இயலார் பசுநூற்கொத் தத்துவங்குருவாகாதன'' என்றுரைக்கப்பட்டது.

ஒருத்திக்குக் குழந்தையிடத்துளதாம் அருவாகிய அன்பினைப் பிறர் அறியுமாறு வெளிப்படுத்தும் அவ்வன்பினுருவாகிய முலைப்பால் அக்குழந்தையைக் காணுமுன் இலதாய்ப் பின் உளதாமாறுபோல, நீரின்கண் நிழல்போல உயிர்களிடத்துப் புலப்படாதுநின்ற பிரமபுரீசராகியபரம்பொருள் ஸ்ரீஞானசம்பந்தமூர்த்திநாயனாரென்னும் ஆசாரியவடிவங்கொண்டெழுந்தருளிவந்து சம்பந்தசரணாலயமுனிவரென்னும் இந்நூலாசிரியரது சிரசின்மீது திருவடிசூட்டுதலாகிய சாம்பவிதீக்ஷை எனப்படும் விஞ்ஞானதீக்ஷைபுரிந்தருளினாராதலின், “தாடலைபோற்கூடியவைதானிகழாவேற்றின்பக் கூடலைநீயேகமெனக்கொள்'' என்னும் திருவாக்குக்கிசைய, பிரமபுரீசப்பெருமானுடைய ஞானசத்தி கிரியாசத்தி என்னும் இரண்டு திருவடிகளைச் சம்பந்தசரணாலயமுனிவர் தம்முடைய ஞானசத்தி கிரியாசத்

திகட்கு வியாபகமாகக் கொண்டு தாடலைபோல் அடங்கித் திருவருள்வசத்தராய் நின்றார் என்று உணர்த்துதற்கே "கொச்சைமன்னவன்றாள்பணிந்தேத்துதுமே" என்று கூறப்பட்டது.

பெத்தகாலத்தில் மலவிருளாற்றடையுற்று மாயாகலாதிவிளக்கினால் ஏகதேசத்தின்விளங்கிச் சோபாதிகமாய்க் கிஞ்சிஞ்ஞத்துவ கிஞ்சித்கர்த்திருத்துவங்களாம் ஆன்மாவின் ஞானக்கிரியைகள், அழுக்குப்போயவழிப் படகதெளகல்லியம் படமுழுதும் விளங்குமாறுபோல அநுட்கிரணத்தினால் மலநிவர்த்தியானபின்

𑌨𑌿𑌰𑌞𑍍𑌜𑌨𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌸𑌾𑌮𑍍𑌯𑌮𑍁𑌪𑍈𑌤𑌿 ।

"மலநீங்கினவனாய் அறிஞன் (பரப்பிரமசிவத்தோடு) சாமியத்தை அடைகின்றான்" என்று முண்டகோபநிடதமும்,

𑌮𑍁𑌕𑍍𑌤𑌃 𑌶𑌿𑌵𑌸𑌮𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍 ।

"முத்தன் சிவசாமியம் அடைகின்றான்" என்று வாயுசங்கிதையும்,

𑌤𑌥𑌾 𑌚 𑌶𑌿𑌵𑌵𑌨𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌦𑌿 𑌗𑍁𑌣𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃 ।
𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌂 𑌗𑍁𑌣𑌸𑌙𑍍𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌿𑌸𑌾𑌮𑍍𑌯𑌪𑌕𑍍𑌷𑍋 𑌨𑌿𑌰𑍂𑌪𑌿𑌤𑌃 ।

"சிவபெருமானைப்போல முத்தராயினோரும் சர்வஞ்ஞாதி குணங்களையுடையராகின்றார்; இங்ஙனம் (சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவங்களின் பகுதியவாய சர்வஞ்ஞாதி எண்) குணங்கள் ஆன்மாவில் (மாணிக்கத்தின் ஒளி ஸ்படிகத்தில் முழுவதும் பற்றுமாறுபோலச்) சங்கிரமிக்கும் என்னும் சாமியபக்ஷம் நிரூபிக்கப்பட்டது" என்று சித்தாந்தவிவேகமும் கூறுமாறு, ஆன்மவியாபகம் முழுதும் நிருபாதிகமாய்ச் சர்வதோமுகமாய் சர்வதாபிவியக்தமாய் விளங்கும் என்க. எண்குணங்களாகப் பகுக்கப்படும் பேரறிவு பெருந்தொழில் ஆன்மாவில் விளங்குதல்பற்றியே, "நட்டதே சிற்றறிவிற் பேரறிவு" என்றும், "உன்றன்குலமிரண்டென்குலமிரண்டுங் குறுகிடாவண்ணமின்பமாய்" என்றும் பெரியோரும் மொழிந்தார்.

தென்மொழி இலக்கணநூலார் * அகரம் (நஞ்) அன்மைப்பொருளினும், இன்மைப்பொருளினும், மறுதலைப்பொருளினும் வருவதாகப் பிரமாணம் காட்டி உதாகரணமுங் காட்டினர். இவர் சொல்லிய முப்பொருளும் "சிவஞானபோதவசனாலங்காரதீப"த்து உ-ஞ் சூத்திரத்து கரு-ம் பிரிவிற் காணப்படும் ஆறு பொருள்களுள் அடங்கி நின்றன.

"ஒரு பொன் பல பணியானது போல" என்னும் அபேதப்பொருள் ஏகான்மவாதிகளாலும், "இருளும் ஒளியும் போல" என்னும் பேதப்பொருள் மத்துவர்களாலும், "சொல்லும் பொருளும் போல" என்னும் பேதாபேதப்பொருள் வைஷ்ணவர்களாலும் கொள்ளப்படுவனவேயாக, சைவசித்தாந்தமானது இம்மும்மதத்தினர் கொள்ளும் முப்பொருள்களையும் மறுத்து மிகு சூக்குமமாய் அம்மூன்று பொருள்களும் "உடலுயிர், கண் அருக்கன், அறிவு ஒளிபோல்" எனத் தன்னுள்ளே அடங்கிநிற்க உண்மையதிதனை உணர்த்துமாம் என்க.

நஞிவயுக்தமந்யஸத்ருசாதிகரணே ததா ஹ்யர்த்தகதி: |

என்று பரிபாஷேந்துசேகரகாரர் கூறி, அகாரத்தின் (நஞின்) சாதிருசிய அன்மைப்பொருளை †"அநசுவம்"என்னும்உதாரணங்கொண்டு விளக்கினர். அத்துவிதசப்தத்தின் முதற்கணுள்ள அகாரத்தின் சாதிருசிய (சாமிய) அன்மைப்பொருள் ஒன்றே அப்பிராமணன் என்னும் உதாரணங்கொண்டு பதஞ்சலிமுனிவராலும் மகாபாஷ்யத்து உ-ம் அத்தியாயத்து, உ-ம் பாதத்து, உ-ம் ஆந்நிகத்து, கூ-ஞ் சூத்திரத்தில் எடுத்து விரித்து விளக்கப்பட்டது. ஆகலின், ஏகான்மவாதிகள் அத்துவிதம் என்னும் எண்ணுப்பெயர்மேல் வைத்து அகாரத்துக்குக் கூறும் பொருள் ஒவ்வாதென்பதும் சைவசித்தாந்திகள் (முண்டகோபநிடதத்து ங. க. ங-ம் மந்திரத்திற் கூறப்

---

* இலக்கணக்கொத்து, சூத்திரம், க௦௦.

† இதன்பொருளைச் "சிவஞானபோதவசனாலங்காரதீப"த்து உ-ஞ் சூத்திரத்து கடு-ம் பிரிவிற் காண்க.

பட்டவாறு) சாமியப்பொருள் கொள்வதே பொருத்தமாமென்பதும் பெரியோர் அனைவர்க்கும் ஒப்பமுடிந்தபக்ஷமாம் என்க.

அத்துவிதமாவது பேதப்பொருள் இரண்டும் தம்முள் அபேதமாதற்குரிய சம்பந்தவிசேஷமாம். அது "அறிவொளிபோற்பிரிவருமத்துவிதம்" என்று உமாபதிசிவாசாரியசுவாமிகள் கூறினமையான் அறியப்படும். "ஒவ்வோர் விடயத்தைக் காணுமிடத்து ஆன்மசிற்சத்தி இந்திரிய ஞானத்தோடு விரவியல்லதுகாட்சிப்படாதிருந்தும், மானதம், தன்வேதனை, யோகம், அநுமானம், உரைமுதலிய காட்சியிற் செல்லுங்காலத்து அதனைப் பிரிந்து வேறாயும் அதனுவாயும் நிற்கும் ஆன்மசிற்சத்தி அவ்விந்திரியஞானத்தோடு விரவிக் காட்சிப்படுங்காலத்து, அது அறிந்ததென்றும் இது அறிந்ததென்றும் பிரிக்கப்படாதிருந்ததுபோல" என்பதே "அறிவொளிபோற்பிரிவருமத்துவிதம்" என்பதின் பொருளாம்.

மன்றவேதமத்துவிதமென்றுரைத்திடுமரபா
லொன்றலாற்பொருளிலையெனினுணர்த்துதுந்தெளிநீ
யென்றும்வேறன்மையுணர்த்துமிக்கிளவியேயிதனு
னின்றவாருயிர்பலவுந்தானாய்நிற்குநிமலன்.

சொன்னதத்துவமசியெனுஞ்சுருதியின்மொழியு
மன்னுகாரணப்பதியுநானெனவரும்பசுவு
மென்னவேபொருளிருமைகண்டியைந்துவேறன்மை
தன்னைநாட்டியதல்லதுதனியென்றதின்றே

என்று அத்துவிதம் தத்துவமசி என்பவற்றின் பொருளை விளக்கினார் பெரியோர்.

யமுனாநதியில் ஓடஞ்செலுத்திக்கொண்டிருந்த மற்சகந்தியைத் திருக்கைலாசத்தினின்றும் பொதியமலைக்குப் போகவேண்டி அவ்விடம்வந்த பராசரமுனிவர் நோக்கி "ஓடம் விடுவையோ" என்று வினவ, அவள் "ஆயிரம்பேர் ஏறினாலன்றி ஓடம் சமப்பட்டுக் கரையேறாது" என்று கூற, முனிவர் அவ்வாயிரம்பேர் வலியுடைய தமது தண்டங்கொண்டு ஓடத்தைச் சமப்படுத்திக் கரையேறிய பின்

னர், மற்சகந்தியின்மீது மோசமுற்று அவள் துர்க்கந்த நீக்கி யோசனைகந்தியுடையளாக்கி அவளோடு கலந்து வியாசரைப் பெற்று, பின் அம்முனிவர் ஐயோ மயக்கத்தினல் இது நேர்ந்துபோய்விட்டதே என்று வருந்தி, இந்தப் பாவம் பூலோககைலாசமாகிய உமாபதிபுரம் எனப்படும் சீகாழிக்குப்போய்ச் சிவலிங்காராதனஞ்செய்தாற்றான் தீரும் என்றோர்ந்து, ஆங்குச் சென்று சிவலிங்காராதனஞ்செய்ய, சிவபெருமான் அவருக்குச் சாந்நித்தியராய் அவரது அஞ்ஞானமோகத்தை நீக்கி உனக்குவேண்டிய வரம் கேள் என்று ஆஞ்ஞாபிக்க, முனிவர் சுவாமீ! அடியேற்கு ஒழிக்கப்பட்டது அஞ்ஞானமாகிய கொச்சையாமாதலின் "அந்தக் கொச்சை என்னும் பெயர் இத்தலத்துக்காமாறு அருளுக" என்று பிரார்த்திக்க, அதற்குச் சிவபிரானிசைந்து வரம்கொடுத்தருளினர். இவ்வுண்மை

> நச்சரவுநச்சேனவசைச்சுமதியுக்சியின்மிலைக்கோருகையான்
> மேயிச்சிரமணேக்குலகினிச்சமிருபிச்சையமர்பிச்சனிடமா
> மச்சமதநச்சிமதமச்சிறுமியைச்செய்தவவச்சவிரதக்
> கோச்சைமூரவச்சர்பணியச்சுரர்கணச்சிமிடைகோச்சைநகரே

என்னும் திராவிடசுருதியினற் சூசிககப்படுகின்றது.

## சிவனடியார் பெருமை.

---

(உ) மேடுங் குழியும் விழுந்தேன் விழுங்க வெழுந்துவிண்ணைக்
கூடும் பொழிற்கோச்சை வேந்தன் குரைகழற் கன்பர்குன்றும்
காடேஞ் கடேஞ்சுர முங்கட லேழுங் கடந்தரிதிற்
றேடும் பொருளினுஞ் சேர்ந்தவுற் றாரினுஞ் சீரியரே.

(இ-ள்) மேடுங் குழியும் விழும் தேன் விழுங்க எழுந்து விண்ணைக் கூடும் பொழில் கொச்சை வேந்தன் குரைகழற்கு அன்பர் = (மேடுகளினும் குழிகளினும் வீழ்ந்த பூந்தேன் மேடுபள்ளந்தோன்ருவண்ணம் அவற்றைச் சமப்படுத்தி மூடிவிடுமாறு உயர்ந்து ஆகாயத்தை அளாவும் சோலையையுடைய கொச்சைபுரத்திறைவராகிய சிவபிரானது சிலம்பொலிக்கும் திருவடிகளுக்கு அன்பு செய்

யும் அடியார்கள்; குன்றுங் காடும் கடுஞ்சுரமும் எழு கடலுங் கடந்து அரிதில் தேடும் பொருளினும் சேர்ந்த உற்றாரினுஞ் சீரியர் — மலைகளையும், காடு சார்ந்த முல்லைநிலங்களையும், கொடிய பாலைவனங்களையும், (நெய்தனிலப்பாற்பட்ட) எழு கடல்களையும் கடந்துபோய் வருத்தத்தினோடு சம்பாதித்த திரவியத்தினும் மிக்க உரிமையோடு எய்திய நட்பினர் உறவினர்களினும் உத்தமரேயாம் எ-று.

(வி-ரை) "சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடன்" என்னும் பழமொழிப்பிரகாரம் "ஏகனாகி இறைபணி நிற்கும்" அன்புடையாரை மாத்திரமன்றி "அடையாதார்க்கு நீடருள்புரியுநித்தன்" என்று பெரியோர் கூறியவாறு சாராதார்க்கும் கர்மாநுசாரமாகப் போக மூட்டி அநுக்கிரகஞ் செய்பவர் பிரமபுரீசராம் என்பது குறிப்பினாற் றொனிக்கவே, "மேடுங் குழியும் விழுந்தேன் விழுங்க" என்று கூறப்பட்டது.

தமது அருட்டிருவடிகளுக்கு உருகுதலினாற் பஞ்சபுலன்களுமொன்றி விரிந்த சிந்தையோடு அன்புமடைதிறந்து நின்ற மெய்யடியார்களுக்குப் பிரமபுரீசர் அளவறுக்கொணாப் பொறுப்பரிய பேரின்பத்தேனை வழங்க, அதனைப் பெற்ற அம்மெய்யடியார் தம்மைச் சரணென்றடைந்தவர்களைப் பிறவிக்குழியினின்று மெடுத்து, விபரீதவுணர்வையோட்டி, ஏகதேசவுணர்வைத் தூர்த்து, வியாபகவறிவைக் கொடுத்து, சிவானந்தபோக நிறைவிலே விடுத்து, "அடியேனடுவுளிருவீருமிருப்பதானாலடியார்நடுவுளிருக்குமருளைப்புரியாய்" என்றவாறு அவர்களுக்குத் தாங்கள் ஓர் வேலிபோலாகி அவர்களை அப்பெருநிலைச் சிவபோகச் செல்வநிலைநிறைவிலே நிறுவிப் பிறழவொட்டாது பரமுத்தியிற் றலைப்படுமாறு செய்தலினால், சிலகாலம் உயிர்க்கு ஓர் ஒதுக்கிடமாய் வாய்ந்த இந்த நாற்றச் சடலத்தை வளர்த்தற்குச் சாதனமாய் வேண்டப்பட்ட சடப்பொருள்களாய், குன்றுகளையும், காடுகளையும், கடுஞ் சுரங்களையும், சப்த சமுத்திரங்களையும் கடந்து வருத்தத்தோடு தேடப்பட்டனவாயுள்ள திரவியங்களினும், அவற்றின் வாயிலாகப் பெறப்பட்ட தாவரமாகிய விளைநிலமுதலியவைகளினும், உரிமையுடையேம் நண்புடையேம் என்று தம் நயத்தின்பொருட்டே வந்தணைந்து சிவபோகநிலையை

அலேத்து, வியாபக அறிவைத் தடுத்து, ஏகதேசவுணர்வில் விடுத்து, விபரீதவுணர்விற் போக்கி, பிறவிக்குழியிலே பொறிக்கும் போலி நட்பினர் உறவினர்களாகிய சங்கமப் பொருள்களினும், மிகமிக உயர்ந்தோராம் என்பதுணர்த்தற்கே "குரைகழற்கன்பர் தேடும் பொருளினுஞ் சேர்ந்தவுற்றாரினுஞ் சீரியர்" என்றுரைக்கப்பட்டது. இம்மெய்யடியார்கள் சிவமெனக்கொண்டு வழிபடற்பாலர் என்பது.

முக்தௌ ப்ராப்ய ஸதஸ்தேஷாம் பஜேத்வேஷம் ஶிவாலயம் |

"முக்தியின்பொருட்டுச் சீவன்முக்தர்களாகிய அடியார்களையடைந்து அவர்களுடைய திருவேடத்தையும் திருக்கோயிலையும் (சிவமெனக் கண்டு) வழிபடுக" என்னும் சிவஞான போத சூத்திரத்தினால் உணரப்படும்.

ஸ்தாவரம் ஜங்கமஞ்சேதி லிங்கம் த்விவிதமுச்யதே |
ஸ்தாவரம் ஸ்தாபிதம் லிங்கம் தீக்ஷிதம் ஜங்கமம் விது: |
ஜங்கமஸ்யாவமாநேந ஸ்தாவரம் நிஷ்பலம் பவேத் |

"ஸ்தாவரலிங்கம் ஜங்கமலிங்கம் என லிங்கம் இருவகைப்படும்; ஸ்தாவரலிங்கமாவது (சிவாசாரியராற் சிவாகமப்பிரகாரம்) ஆலயங்களிலே ஸ்தாபிக்கப்பட்ட லிங்கம் என்றும், ஜங்கமலிங்கமாவது அச்சிவாசாரியரால் தீக்ஷிக்கப்பட்ட (அடியார்) லிங்கம் என்றும் அறிக; ஜங்கமலிங்கம் எனப்படும் அடியாரை அவமதித்தலினால் (ஆலயத்துள் எழுந்தருளியிருக்கும்) ஸ்தாவரலிங்க வழிபாடு நிஷ்பலமாகும்" என்று சிவதருமோத்தரம் கூறுகின்றது. ஆகவே, சிவலிங்கவழிபாட்டினும் அடியார் வழிபாடு சிறந்ததாமாதலின் "கொச்சைவேந்தன் குரைகழற்கன்பர் சீரியரே" என்று கூறப்பட்டது.

ஶிவபக்தா மஹாத்மாநஸ் ஸந்தி தேவேஷு தேஷு ச |
தைத்யேஷு யாதுதாநேஷு யக்ஷராக்ஷஸயோநிஷு |
முநீஶ்வரேஷு மர்த்யேஷு ப்ராஹ்மணேஷு ந்ருபேஷ்வபி |
வைஶ்யேஷ்வபி ஶூத்ரேஷு ஸங்கரேஷ்வபி ஸர்வஶ: |

வர்ணாஶ்ரமவ்யவஸ்தாஶ்ச நைஷாம் ஸந்தி மஹீஶ்வரா:।
கேவலம் ஶிவபக்தா யே ஸர்வே மாஹேஶ்வரா: ஸ்ம்ருதா:।
அதிவர்ணாஶ்ரமா: ப்ரோக்தா: ஸர்வவேதேஷு ஸம்ஸ்திதா:।

"தேவருள்ளும், அசுரருள்ளும், அரக்கருள்ளும், யக்ஷருள்ளும் கந்தருவருள்ளும், நாகருள்ளும், முனிவருள்ளும், மானிடருள்ளே பிராமணருள்ளும், க்ஷத்திரியருள்ளும், வைசியருள்ளும், சூத்திருள்ளும் சங்கரஜாதியாருள்ளும் மகாத்துமாக்களாகிய சிற்சில சிவனடியார்கள் இருக்கின்றார்கள்; இவர்கட்கெல்லாம் வர்ணாச்சிரமங்களின் கட்டுப்பாடில்லை; அந்தச்சிவபக்தர்களாகிய இவரெல்லாம் மாகேசுவரர்களாகக் கொள்ளப்படுகின்றார்கள்; அவரெல்லாம் அதிவர்ணாச்சிரமிகளென்று சமஸ்த வேதாகமங்களினும் ஒப்புக்கொள்ளப்படுகின்றார்" என்று அடியார் பெருமையை ஸ்காந்தபுராண உபதேசகாண்டம் கூறுகின்றது.

இந்நூல் முதநூல்
வழித்தென்பது.

---

(௬) சீரார் கயிலைத் திருவாய் மலர்ந்த சிவாகமங்கற்
றாராய் வதுவட சொற்பயின் றார்க்கெளி தம்மொழியைச்
சாரா தவரருந் தத்துவ ஞானந் தலைப்படுதற்
கேரார் தமிழ்ச்செய் யுளான்மைய றீர வெழுதுவனே.

(இ-ள்) சீரார் கயிலைத் திருவாய்மலர்ந்த சிவாகமம் கற்று ஆராய்வது வடசொற்பயின்றார்க்கு எளிது = திருக்கைலாசத்தின்கண்ணே (சிவபெருமான் சாதாக்கிய தத்துவத்திற் சதாசிவ மூர்த்தியா யெழுந்தருளியிருந்து) திருவாய்மலர்ந்தருளிய காமிகாதி மூலாகமம் இருபத்தெட்டையும் உபாகமங்களையும் கற்றாராய்வது ஆரியபாஷையில் வல்லுநர்க்கு அரியதன்று; அம்மொழியைச் சாராதவர் அரும் தத்துவஞானம் தலைப்படுதற்கு ஏர் ஆர் தமிழ்ச் செய்யுளால் மையல் தீர எழுதுவன் = அவ்வாரியமொழியைப் பயிலாதவர் பெறுதற்கரிய பதிபசுபாச தத்துவஞானத்தைத் தலைப்

பட்டு உய்யும்பொருட்டு இனிமைவாய்ந்த தமிழ்ப்பாவினாலே தத்துவவிளக்கம் என்னும் இந்நூலை (இருவினையொப்பு மலபரிபாகமுற்ற ஆன்மாக்களின்) மயக்கந்தீர வரைவேனாயினேன் எ-று.

ஜம்புத்தீவு எனப்படும் பரதகண்டத்து உத்தரதிசைக்கண்ணதாகிய இமாசலச்சாரலில் ஓர் கைலாசமும், ஆன்மதத்துவத்தின் உபரிபாகத்துள்ள பிரகிருதிக்கு மேலே ஸ்ரீகண்டநாயனார் எழுந்தருளியிருக்கும் ஓர் கைலாசமும், சுத்தவித்தை ஈசுரதத்துவத்திலேயுள்ள மகேசுவரரெழுந்தருளியிருக்கும் ஓர் கைலாசமும், சாதாக்கியதத்துவத்திற் சதாசிவநாயனார் ஏழுந்தருளியிருக்கும் ஓர் கைலாசமும், சத்திசிவதத்துவங்களில் ஆதி எனப்படும் உமையம்மையாரோடு கூடிய சிவபிரான் எழுந்தருளியிருக்கும் ஓர் கைலாசமுமாக ஐந்து கைலாசங்கள் உள்ளனவாகக் காளகஸ்திப்புராணம் கூறுகின்றது, மேலும், சிவபிரான் தம்மை வழிபட்டுய்யும்பொருட்டுத்தியானபூஜாதிகளுக்கு அங்கங்கே எளிவந்து அடியார்களுக்கு அநுக்கிரகிக்குமாறுசாந்நித்தியமாயிருக்கும் தானங்களும் கைலாசம் எனப்படும்.

இச்செய்யுளிற் கைலாசம் எனப்பட்டது சாதாக்கியதத்துவத்துச் சதாசிவநாயனார் வேதசிவாகமங்களை உபதேசித்தற்கிடமாயிருந்த ஸ்தானமேயாம். இதுபற்றியே சீரார் என்னும் விசேஷணம் புணர்த்திச் "சீரார் கைலை" எனப்பட்டது.

𑌈𑌶𑌾𑌨𑌃 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑌾𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾
𑌧𑌿𑌪𑌤𑌿𑌰𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋𑌽𑌧𑌿𑌪𑌤𑌿𑌰𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌶𑌿𑌵𑍋 𑌮𑍇 𑌅𑌸𑍍𑌤𑍁 𑌸𑌦𑌾
𑌶𑌿𑌵𑍋𑌮𑍍 ।

என்னும் தைத்திரீய ஆரணியக (௧௦. ௨௧. ௩௦) மந்திரத்திலே, சதாசிவோம் (𑌸𑌦𑌾𑌶𑌿𑌵𑍋𑌮𑍍) என்றது சிவசாதாக்கியத்தையும், சிவோமே அஸ்து (𑌶𑌿𑌵𑍋 𑌮𑍇 𑌅𑌸𑍍𑌤𑍁) என்றது அமூர்த்திசாதாக்கியத்தையும், பிரம்மாதிபதிர்பிரம்மணோதிபதிர் பிரம்மா (𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌧𑌿𑌪𑌤𑌿𑌰𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋𑌽𑌧𑌿𑌪𑌤𑌿𑌰𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾) என்றது மூர்த்திசாதாக்கியத்தையும், ஈச்வரஸ்சர்வபூதாநாம் (𑌈𑌶𑍍𑌵𑌰𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂) என்றது கர்த்திருசாதாக்கியத்தையும், ஈசாநஸ்சர்வவித்தியாநாம் (𑌈𑌶𑌾𑌨𑌃 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑌾𑌂) என்றது கன்மசாதாக்கியத்தையும் உணர்த்துவனவாம் என்பது

ஶிவஸ்ய தத்புருஷ ... ருக்வேத ... ।
... ஸாமவேத ... ।
... [illegible] ।

என்னும் வாதுளசுத்தாக்கிய சுலோகத்தினால் அறியப்படுகின்றது.

சதாசிவப்பிரமத்தினுடைய கன்மசாதாக்கியம் தற்புருஷமுகமாகவும், கர்த்திருசாதாக்கியம் அகோரமுகமாகவும், மூர்த்திசாதாக்கியம் சத்தியோசாதமுகமாகவும், அமூர்த்திசாதாக்கியம் வாமதேவமுக மாக[illegible] சிவசாதாக்கியம் ஈசானமுகமாகவுங் கொள்ளப்படுகின்றன.

... நாநி திவ்யாநி காமிகாதீநி ... ।
ஸ்ரீஸதாஶிவஸ்ய நாதஸ்ய ஸம்பவத்யுக்வேதகஃ ।
... ।
ஏகவிம்ஶதி ஶாகேந ... ।
யஜுர்வேதம் ஶதஶாகம் அகோர ... ।
ஸஹஸ்ரஶாகஸஹிதம் ஸாமவேதம் ச வாமதஃ ।
... ॥

"சதாசிவப்பிரமத்தினுடைய தற்புருஷமுகத்தினின்று இருபத்தொரு சாகையுடைய இருக்குவேதமும், அகோரமுகத்தினின்று நூறு சாகையுடைய யசுர்வேதமும், வாமதேவமுகத்தினின்று ஆயிரம் சாகையுடைய சாமவேதமும், சத்தியோசாத முகத்தினின்று ஒன்பது சாகையுடைய அதர்வவேதமும், ஊர்த்துவ ஈசானமுகத்தினின்று திவ்விய சிவஞானகாமிகாதி ஆகமங்களும் தோன்றிய" என்று அகஸ்தியசங்கிதை கூறுகின்றது.

ஸத்யோஜாத ... ।
... ।
... ॥

"சத்தியோசாதர், வாமதேவர், அகோரர், தற்புருஷர், ஈசானர் என்னும் ஐந்து மூர்த்திகளுக்கும் தனித்தனி ஐம்முகங்கள் உண்டு; அவற்றால் லௌகிகாதிகள் கூறப்பட்டன; இதுபற்றி ஐம்முகங்களுக்கும் இருபத்தைந்து சுரோதசுபேதங்கள் கூறப்படுகின்றன" என்று காமிகாகமமும்,

ஸத்யோஜாதமுகாஜ்ஜாதா: பஞ்சாத்யா: காமிகாதய:|
வாமதேவமுகாஜ்ஜாதா தீப்தாத்யா: பஞ்ச ஸம்ஹிதா:|
அகோரவக்த்ராதுத்பூதா: பஞ்சாபி விஜயாதய:|
பும்வக்த்ராதாவிர்பூதா: பஞ்சைவ ரௌரவாதய:
ஈஶாநவக்த்ரஜாதா: ப்ரோத்கீதாத்யஷ்ட ஸம்ஹிதா: ||

"சத்தியோசாதமுகத்தினின்று காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம் என்னும் ஐந்து ஆகமங்களும், வாமதேவமுகத்தினின்று தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அம்சுமான், சுப்பிரபேதம் என்னும் ஐந்து ஆகமங்களும், அகோரமுகத்தினின்று விஜயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம் என்னும் ஐந்து ஆகமங்களும், தற்புருஷமுகத்தினின்று இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம் என்னும் ஐந்து ஆகமங்களும், ஈசானமுகத்தினின்று புரோற்கீதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுவரம், கிரணம், வாதுளம் என்னும் எட்டு ஆகமங்களுமாக இருபத்தெட்டும் தோன்றின" என்று காரணாகமமும் கூறுகின்றன.

காமிக முதலிய ஐந்தும் கவுசிகவிருடியின்பொருட்டுத் தோன்றின. அவற்றிற் கூறியபிரகாரம் அவருக்குத் தீக்ஷை செய்யப்பட்டது. அவற்றிற்கு அதிதேவதை சிவமூர்த்தி. பூமியின்கண் அவ்விருஷிகோத்திரம் சிவகோசரம் * எனப்படும். தீப்தமுதலிய ஐந்தும் காசியபவிருடியின்பொருட்டுத் தோன்றின. அவற்றிற் கூறிய

* கோசரம் எனினும் கோத்திரம் எனினும் ஒக்கும்.

பிரகாரம் அவருக்குத் தீக்ஷை செய்யப்பட்டது. அவற்றிற்கு அதிதேவதை ஈசுரன். அவ்விருடிகோத்திரம் சிகாகோசரம் எனப்படும். விஜயமுதலிய ஐந்தும் பாரத்துவாஜவிருஷியின்பொருட்டுத் தோன்றின. அவற்றிற் கூறியபிரகாரம் அவருக்குத் தீக்ஷை செய்யப்பட்டது. அவற்றிற்கு அதிதேவதை ஈசானன். அவ்விருஷிகோத்திரம் சோதிகோசரம் எனப்படும். இரௌரவ முதலிய ஐந்தும் கவுதமவிருஷியின்பொருட்டுத் தோன்றின. அவற்றிற் கூறியபிரகாரம் அவருக்குத் தீக்ஷை செய்யப்பட்டது. அவற்றிற்கு அதிதேவதை பிரமமூர்த்தி. அவ்விருஷிகோத்திரம் சாவித்திரிகோசரம் எனப்படும். புரோற்கீதமுதலிய எட்டும் அகஸ்தியவிருஷியின்பொருட்டுத் தோன்றின. அவற்றிற் கூறியபிரகாரம் அவருக்குத் தீக்ஷை செய்யப்பட்டது. அவற்றிற்கு அதிதேவதை நடேசமூர்த்தி. அவ்விருஷிகோத்திரம் வியோமகோசரம் எனப்படும்.

மேலே காமிகமுதலிய ஆகமங்கள் இருபத்தெட்டும் சதாசிவநாயனாரது ஈசானமுகத்தினின்று தோற்றியவாகக் கூறி, ஈண்டு சத்தியோசாத முதலிய முகங்களினின்று காமிகமுதலிய ஐந்தும் பிறவும் தோற்றியவாகக் கூறினமை மலைவாம் பிறவெனின், ஆகாது; ஈசானமுதலிய ஒவ்வோர் முகங்களுக்கும் ஐவைந்து சுரோதஸ்பேதங்கள் உள்ளன என்று கூறப்பட்டமையானும், அங்ஙனம் ஈசானமுகசம்பந்தமாகிய ஐந்து சுரோதசுகளினின்று காமிகமுதல் வாதுளம் இறுதியாகிய இருபத்தெட்டு ஆகமங்களும் தோன்றின என்று பெறப்பட்டமையானுமாம்.

ஸப்தாநாம் உபாகமைஸ்ஸார்த்தம் தசாஷ்டாதச ஸம்மிதம் ।
வேதாஸ் ஸாங்காஸ் சத்வார ஊர்த்வவக்த்ராத் விநிர்கதா: ॥

"(இருநூற்றேழு) உபாகமங்களோடு பத்தும் பதினெட்டுமாகிய இருபத்தெட்டு மூல) ஆகமங்களும் ஷடங்கங்களோடு நான்கு வேதமும் ஊர்த்துவமுகத்திற் றோன்றிய" என்று அசிதாகமம் கூறுகின்றது.

காமிகமுதலிய ஆகமங்கள் இருபத்தெட்டுமே ஊர்த்துவமுக ஈசானசம்பந்தமாகிய ஐம்முகங்களினின்று தோற்றிய என்றும் இருக்குமுதலிய நான்குவேதங்களும் தற்புருஷமுதலிய நான்கு முகங்களினின்று தோற்றிய என்றும் கூறிவிட்டு, ஈண்டு இருக்குமுதலியநான்கும் ஊர்த்துவமுகத்தினின்றுபிறந்தன என்றமை மலைவாம் பிற எனின், ஆகாது; முகம் ஒன்றுக்குத் தனித்தனி ஐந்து முகங்கள் உளவாம் என்று நிரூபிக்கப்பட்டமையானும்,ஈசான ஊர்த்துவமுகசம்பந்தமாகிய சத்தியோசாத முதலியவற்றினின்று காமிகாதி ஆகமங்கள் தோன்றவே, தற்புருஷம் அகோரம் வாமம் சத்தியோசாதம் என்னும்மற்றைய நான்குமுகங்கட்கும் முகம்ஒன்றுக்குத் தனித்தனிஐந்து சுரோதசுகளுண்மையின், தற்புருஷத்துக்குரிய ஊர்த்துவசுரோதசினின்று இருக்குவேதமும், அகோரமுகத்துக்குள்ள ஊர்த்துவசுரோதசினின்றுயசுர்வேதமும்,வாமத்துக்குள்ள ஊர்த்துவசுரோதசினின்று சாமவேதமும், சத்தியோசாதத்துக்குள்ள ஊர்த்துவமுகத்தினின்று அதர்வவேதமும் பிறந்தன என்று பெறப்படுகின்றமையானுமாம்.

ஈசாந: ஸர்வவித்யாநாம்--தைத்திரீய ஆரணியகம், க0. உக. ந-கூ-
என்றற்றொடக்கத்ததாகவும்,

தத்புருஷாய வித்மஹே ஷை ஷை க0. உ0. ந-அ-
என்றற்றொடக்கத்ததாகவும்.

அகோரேப்ய: ஷை ஷை க0. கசு. ந-எ-
என்றற்றொடக்கத்ததாகவும்,

வாமதேவாய நம: ஷை ஷை க0. கஅ. ந-சு-
என்றற்றொடக்கத்ததாகவும்,

ஸத்யோஜாதம் ப்ரபத்யாமி ஷை ஷை க0. கஎ, ந-ரு-

என்றற்றொடக்கத்ததாகவும் ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம்,சத்தியோஜாதம்என்னும் பஞ்சப்பிரஹ்மமந்திரங்களை தைத்திரீய ஆரணியகசுருதி எடுத்துக் கூறிற்று.

தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் என்னும் நான்கு முகங்களால் நான்கு வேதங்களையும் தோற்றுவித்தார் என்றும்

𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌨𑌿𑌰𑍂𑌪𑌿𑌤𑌞𑍍𑌚 𑌪𑌰𑌮𑌂 𑌷𑌟𑍍𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌤𑍍𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌕𑌂। 𑌤
𑌸𑍍𑌮𑌾𑌦𑍁𑌤𑍍𑌤𑌰𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌕𑍍𑌷𑌰𑌮𑌯𑌂 𑌧𑍍𑌯𑍇𑌯𑌂 𑌸𑌦𑌾 𑌯𑍋𑌗𑌿𑌭𑌿𑌃। 𑌓𑌂𑌕𑌾𑌰𑌮𑍁
𑌖𑌕𑌾𑌮𑌿𑌕𑌾𑌦𑌿𑌜𑌨𑌕𑌂 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌤𑌿𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌂 𑌪𑌰𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌪𑌞𑍍𑌚𑌮𑌮𑍀𑌶𑍍𑌵
𑌰𑌸𑍍𑌯 𑌵𑌦𑌨𑌂 𑌖𑌂 𑌵𑍍𑌯𑌾𑌪𑌿 𑌤𑍇𑌜𑍋𑌮𑌯𑌮𑍍॥

"வியக்தாவியக்தமாய் நிரூபிக்கப்பட்டதும், மேலாயதும், (நில முதல் நாதமீறாகிய) முப்பத்தாறு தத்துவசொரூபமாயதும், ஆகலின் (தற்புருஷமுதலிய நான்கு முகங்களுக்கும்) சிரேஷ்டமாயதும், அழியா இயல்பினதாயதும், யோகிகளாலே எக்காலமும் தியானிக்கற்பாலதும், ஓங்காரத்தை முதலாகக்கொண்ட காமிகாதி ஆகமங்களைப் பிறப்பிப்பதும், சூக்குமததினும் அதிசூக்குமமாய் மேலாயதும் (சாந்தியதீத) பரமாகாயத்தை வியாபித்த ஒளியினையுடையதுமாகிய (தாண்டவேசுவர மஹாசதாசிவப்பெருமானது) ஐந்தாவதாகிய (ஈசான முகத்தை நமஸ்கரிக்கின்றேன்" என்றும் சிரௌதசூத்திரம், கிருஹ்யசூத்திரம் எனபவற்றை அருளிய போதாயனமஹர்ஷி கூறினர்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]॥

"சிவபிரான் அபிவியக்த சர்வஞ்ஞத்துவாதி குணமுள்ள சுத்தர்களாய்ச் சிவசொரூபர்களாயுள்ள சாதாக்கிய தத்துவபதவாசிகளாகிய பிரணவர் முதலிய பதின்மரையும் முதற்கண்ணே சங்கற்ப மாத்திரையினல் ஊர்த்துவசிருஷ்டியாற் படைத்து, அனந்தாதி அஷ்டவித்தியேஸ்வரர்களுக்கு ஆகமஞானோபதேசமானபின் அந்த நாதரூப சிவஞானத்தைக் காமிகமுதலிய பத்தாகப் பிரித்து அவர்களுக்கு (பிரணவாதியர்க்கு) நேராகத்தாமே உபதேசித்தார்; ஆகலின், காமிக முதலிய பத்தும் சிவபேதம் எனப்படும்; பின்னும்

சகலர்தத்துவத்திலிருக்கும் அநாதிருத்திரர் முதலியபதினெண்மர்களையும் அறிஞர்களாக்கி, அச்சதாசிவநாயனாரால் அவர்களுக்கு உபதேசிக்கப்பட்ட விஜயாதி பதினெட்டு ஆகமங்களும் அபரமாகிய உருத்திரபேதம் எனப்படும்" என்று சித்தாந்தசாராவளி கூறுகின்றது.

இருபத்தெட்டு ஆகமங்களின் பெயரும் சுலோகத்தொகையும் வருமாறு:—

| பெயர் | | தொகை |
|---|---|---|
| 1. | காமிகம் | பரார்த்தம் 100,000,000,000,000,000 |
| 2. | யோகஜம் | இலக்ஷம் 100,000 |
| 3. | சிந்தியம் | இலக்ஷம் 100,000 |
| 4. | காரணம் | கோடி 10,000,000 |
| 5. | அஜிதம் | * இலக்ஷம் 100,000 |
| 6. | தீப்தம் | இலக்ஷம் 100,000 |
| 7. | சூட்சுமம் | பதுமம் 1,000,000,000,000,000 |
| 8. | சகசிரம் | சங்கம 100,000,000,000,000 |
| 9. | அஞ்சுமான் | † ஐந்திலக்ஷம் 500,000 |
| 10. | சுப்பிரபேதம் | மூன்றுகோடி 30,000,000 |
| 11. | விஜயம் | மூன்றுகோடி 30,000,000 |

* பத்திலக்ஷம் என்றும் கூறுப. † நியுதம் என்றும் கூறுப.

| | | |
|---|---|---|
| 12. | நிச்சுவாசம் | கோடி<br>10,000,000 |
| 13. | சுவாயம்புவம் | § ஒன்றரைக்கோடி<br>15,000,000 |
| 14. | ஆக்கினேயம் அல்லது அனலம் | * முப்பதினாயிரம்<br>30,000 |
| 15. | வீரம் | † லக்ஷம்<br>100,000 |
| 16. | ரௌரவம் | ‡ பத்துக்கோடி<br>100,000,000 |
| 17. | மகுடம் | இலக்ஷம்<br>100,000 |
| 18. | விமலம் | மூன்றிலக்ஷம்<br>300,000 |
| 19. | சந்திரஞானம் | மூன்றுகோடி<br>30,000,000 |
| 20. | முகவிம்பம் | இலக்ஷம்<br>100,000 |
| 21. | புரோற்கீதம் | மூன்றிலக்ஷம்<br>300,000 |
| 22. | இலளிதம் | * எட்டுலக்ஷம்<br>800,000 |
| 23. | சித்தம் | † ஐம்பதுலக்ஷம்<br>5,000,000 |
| 24. | சந்தானம் | ‡ ஆறுலக்ஷம்<br>600,000 |
| 25. | சர்வோக்தம் | இரண்டிலக்ஷம்<br>200,000 |

§ மூன்றரைக்கோடி என்றும் கூறுப * மூன்று லக்ஷம் என்றும் கூறுப † நியுதம் என்றும் கூறுப † எட்டு அர்ப்புதம் என்றும் கூறுப * எண்ணாயிரம் என்றும் கூறுப † ஒன்றரைக்கோடி என்றும் கூறுப ‡ ஆறாயிரம் என்றும் கூறுப.

| | | |
|---|---|---|
| 26. | பாரமேசுவரம் | பன்னிரண்டிலக்ஷம் 1,200,000 |
| 27. | கிரணம் | ஐந்துகோடி 50,000,000 |
| 28. | வாதுளம் | இலக்ஷம் 100,000 |

காமிகமுதலிய இருபத்தெட்டும் சிவபேதம் உருத்திரபேதம் என இருவகைப்படும். இவ்வாகமம் இருபத்தெட்டையும் கேட்டவர் பிரணவர்முதல் அறுபத்தறுவராவர். சிவபேதம் பத்தையும் கேட்டவர் ஒருவரிடத்து ஒருவராக ஒவ்வொருஆகமத்துக்கும் மூன்றுபேராய் அணுசதாசிவருட்டலைவராகிய பிரணவர்முதல் முப்பதின்மராவர். உருத்திரபேதம் பதினெட்டையும் கேட்டவர் ஒவவோர் ஆகமத்துக்கு இவ்விரண்டுபேராய் அநாதிருத்திரர்முதல் முப்பத்தறுவராவர்.

## சிவபேதம் பத்தும் கேட்டவர்

---

| | | பெயர். |
|---|---|---|
| 1. | காமிகம் | பிரணவர்<br>திரிகலர்<br>அரர் |
| 2. | யோகஜம் | சுதாக்கியர்<br>பஸ்மர்<br>விபு |
| 3. | சிந்தியம் | சுதீப்தர்<br>கோபதி<br>அம்பிகை |
| 4. | காரணம் | காரணர்<br>சர்வருத்திரர்<br>பிரசேசர் |
| 5. | அசிதம் | சுசிவர்<br>சிவர்<br>அச்சுதர் |

| | | |
|---|---|---|
| 6. | தீப்தம் | ஈசர்<br>திரிமூர்த்தி<br>உதாசனர் |
| 7. | சூக்குமம் | சூக்குமர்<br>வைச்சிரவணர்<br>பிரபஞ்சனர் |
| 8. | சகசிரம் | காலர்<br>வீமர்<br>தருமர் |
| 9. | அஞ்சுமான் | அம்பு<br>உக்கிரர்<br>ஆதித்தியர் |
| 10. | சுப்பிரபேதம் | தேசேசர்<br>விக்கினேசர்<br>சசி |

உருத்திரபேதம் பதினெட்டும் கேட்டவர்

| | | |
|---|---|---|
| 1. | விஜயம் | அநாதிருத்திரர்<br>பரமேசர் |
| 2. | நிச்சுவாசம் | தசார்ணர்<br>பார்ப்பதி |
| 3. | சுவாயம்புவம் | நிதனேசர்<br>பத்மபூ |
| 4. | ஆக்கினேயம் | வியோமர்<br>உதாசனர் |
| 5. | வீரம் | தேசர்<br>பிரஜாபதி |
| 6. | ரௌரவம் | பிரமேசர்<br>நந்திகேசர் |
| 7. | மகுடம் | சிவர்<br>மகாதேவர் |
| 8. | விமலம் | சர்வாத்துமர்<br>வீரபத்திரர் |

| | | |
|---|---|---|
| 9. | சந்திரஞானம் | அனந்தர்<br>பிருகஸ்பதி |
| 10. | முகவிம்பம் | பிரசாந்தர்<br>ததீசி |
| 11. | புரோற்கீதம் | சூலி<br>கவசர் |
| 12. | இலளிதம் | ஆலயேசர்<br>இலளிதர் |
| 13. | சித்தம் | விந்து<br>சண்டேசர் |
| 14. | சந்தானம் | சிவநிஷ்டர்<br>அசம்பாதர் |
| 15. | சருவோத்தம் | சோமதேவர்<br>நிருசிங்கர் |
| 16. | பாரமேசுவரம் | சிதேவி<br>உசனர் |
| 17. | கிரணம் | தேவவிபு<br>சம்வர்த்தர் |
| 18. | வாதுளம் | சிவர்<br>மகாகாளர் |

## மூலாகமங்களுக்குரிய உபாகமங்கள்

| | | உபாகமம் |
|---|---|---|
| 1. | காமிகம் | 1. * வக்த்ராரம்<br>2. பைரவோத்தரம்<br>3. நாரசிம்ஹம் |

(மிருகேந்திரம்)

* உத்தாரம் என்றும் கூறுப.

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | யோகஜம் | 4. | வீணாசிகோத்தரம் | ௫ |
| | | 5. | தாரம் | |
| | | 6. | சந்தம் | |
| | | 7. | சந்ததி | |
| | | 8. | ஆத்மயோகம் | |
| 3. | சிந்தியம் | 9. | சுசிந்தியம் | ௬ |
| | | 10. | சுபகம் | |
| | | 11. | வாமம் | |
| | | 12. | பாவநாசம் | |
| | | 13. | பரோத்பவம் | |
| | | 14. | அம்ருதம் | |
| 4. | காரணம் | 15. | காரணம் | ௭ |
| | | 16. | பாவநம் | |
| | | 17. | தௌர்க்கம் | |
| | | 18. | மகேந்திரம் | |
| | | 19. | பீமம் | |
| | | 20. | மாரணம் | |
| | | 21. | துவேஷ்டம் | |
| 5. | அஜிதம் | 22. | பிரபூதம் | ௪ |
| | | 23. | பரோத்பூதம் | |
| | | 24. | பார்வதீசம்ஹிதை | |
| | | 25. | பதுமசம்ஹிதை | |
| 6. | தீப்தம் | 26. | அமேயம் | ௯ |
| | | 27. | சப்தம் | |
| | | 28. | ஆச்சாத்யம் | |
| | | 29. | அசங்கியம் | |
| | | 30. | அமிதௌஜசம் | |
| | | 31. | ஆனந்தம் | |
| | | 32. | மாதவோத்பூதம் | |
| | | 33. | அத்புதம் | |
| | | 34. | அக்ஷதம் | |
| 7. | சூட்சுமம் | | சூட்சுமசங்கிதை | ௧ |

| | | | |
|---|---|---|---|
| | | 35. அதீதம் | |
| | | 36. மங்களம் | |
| | | 37. சுத்தம் | |
| | | 38. அப்ரமேயம் | |
| 8. | சஹஸிரம் | 39. ஜாதிபாக் | |
| | | 40. பிரபுத்தம் | கo |
| | | 41. விபுதம் | |
| | | 42. ஹஸ்தம் | |
| | | 43. அலங்காரம் | |
| | | 44. சுபோதகம் | |
| | | 45. வித்தியாபுராணதந்திரம் | |
| | | 46. வாசவம் | |
| | | 47. நீலலோஹிதம் | |
| | | 48. பிரகாரணம் | |
| | | 49. பூததந்திரம் | |
| 9. | அம்சுமான் | 50. ஆத்மாலங்காரம் | கஉ |
| | | 51. காச்யபம் | |
| | | 52. கௌதமம் | |
| | | 53. ஐந்திரம் | |
| | | 54. பிராம்ஹ்யம் | |
| | | 55. வாசிஷ்டம் | |
| | | 56. ஈசானம் | |
| 10. | சுப்பிரபேதம் | சுப்பிரபேதம் | க |
| | | 57. விஜயம் | |
| | | 58. உத்பவம் | |
| | | 59. சௌம்யம் | |
| 11. | விஜயம் | 60. அகோரம் | அ |
| | | 51. மிருத்தியுநாசநம் | |
| | | 62. குபேரம் | |
| | | 63. மஹாகோரம் | |
| | | 64. விமலம் | |

| | | | |
|---|---|---|---|
| 12. நிச்சுவாசம் | 65. நிச்சுவாசம் | | அ |
| | 66. உத்தரநிச்சுவாசம் | | |
| | 67. நிச்சுவாசமுகோதயம் | | |
| | 68. நிச்சுவாசநயனம் | | |
| | 69. நிச்சுவாசகாரிகை | | |
| | 70. கோரசம்ஞம் | | |
| | 71. யமாக்யம் | | |
| | 72. குஹ்யம் | | |
| 13. சுவாயம்புவம் | 73. பிரஜாபதிமதம் | | ங |
| | 74. பத்மம் | | |
| | 75. சுவாயம்புவம் | | |
| 14. ஆக்நேயம் | அநலம் | | க |
| 15. வீரம் | 76. பிரஸ்தாரம் | | கங |
| | 77. புல்லமல்லம் | | |
| | 78. பிரபோதம் | | |
| | 79. போதம் | | |
| | 80. போதகம் | | |
| | 81. அமோஹம் | | |
| | 82. மோஹசமயம் | | |
| | 83. ஹாகடம் | | |
| | 84 சகடாதிகம் | | |
| | 85. ஹலம் | | |
| | 86. விலேகனம் | | |
| | 87. பத்திரம் | | |
| | 88. வீரம் | | |
| 16. ரௌரவம் | 89. காலக்நம் | | சு |
| | 90. கலாநீதம் | | |
| | 91. ரௌரவம் | | |
| | 92. ரௌரவோத்தரம் | | |
| | 93. மஹாகாளமதம் | | |
| | 94. ஐந்திரம் | | |
| 17. மகுடம் | 95. மகுடம் | | உ |
| | 96. மகுடோத்தரம் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 97. | அனந்தம் | |
| | | 98. | போகம் | |
| | | 99. | ஆக்ராந்தம் | |
| | | 100. | விருஷபிங்கம் | |
| | | 101. | விருஷோதரம் | |
| | | 102. | விருஷாத்புதம் | |
| | | 103. | சுதந்தம் | |
| 18. | விமலம் | 104. | ரௌத்திரம் | கசு |
| | | 105. | பத்திரவிதம் | |
| | | 106. | அரேவதம் | |
| | | 107. | அதிகிராந்தம் | |
| | | 108. | அட்டஹாசம் | |
| | | 109. | அலங்கிருதம் | |
| | | 110. | அர்ச்சிதம் | |
| | | 111. | தாரணம் | |
| | | 112. | தந்திரம் | |
| | | 113. | ஸ்திரம் | |
| | | 114. | ஸ்தாணு | |
| | | 115. | மஹாந்தம் | |
| | | 116. | வாருணம் | |
| | | 117. | நந்திகேசுவரம் | |
| | | 118. | ஏகபாதம் | |
| 19. | சந்திரஞானம், | 119. | சங்கரம் | கச |
| | | 120. | நீலருத்திரகம் | |
| | | 121. | சிவபத்திரம் | |
| | | 122. | கற்பபேதம் | |
| | | 123. | ஸ்ரீமுகம் | |
| | | 124. | சிவசாசநம் | |
| | | 125. | சிவசேகரம் | |
| | | 126. | தேவிமதம் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 127. | சதுர்முகம் | |
| | | 128. | மலயம் | |
| | | 129. | அயோகம் | |
| | | 130. | சமஸ்தோபம் | |
| | | 131. | பிரதிபிம்பகம் | |
| | | 132. | ஆத்துமாலங்காரம் | |
| | | 133. | வாயவ்யம் | |
| 20. | முகபிம்பம் | 134. | தௌடிகம் | கரு |
| | | 135. | துடிநீரகம் | |
| | | 136. | கலாத்யயம் | |
| | | 137. | துலாயோகம் | |
| | | 138. | குட்டிமம் | |
| | | 139. | பட்டசேகரம் | |
| | | 140. | மஹாவித்தை | |
| | | 141. | மஹாசௌரம் | |
| | | 142. | கவசம் | |
| | | 143. | வராஹம் | |
| | | 144. | பிங்களமதம் | |
| | | 145. | பாசபந்தம் | |
| | | 146. | தண்டதரம் | |
| | | 147. | அங்குசம் | |
| | | 148. | தநுர்த்தரம் | |
| | | 149. | சிவஞானம் | |
| 21. | புரோற்கிதம் | 150. | விஞ்ஞானம் | கசு |
| | | 151. | ஸ்ரீகாலஞானம் | |
| | | 152. | ஆயுர்வேதம் | |
| | | 153. | தநுர்வேதம் | |
| | | 154. | சர்ப்பதம்ஷ்ட்ரீவிபேதநம் | |
| | | 155. | கிதம் | |
| | | 156. | பரதம் | |
| | | 157. | ஆதோத்யம் | |
| | | 158. | லளிதம் | |
| 22. | லளிதம் | 159. | லளிதோத்தரம் | ௩ |
| | | 160. | கௌமாரம் | |

| | | | | |
|---|---|---|---|---|
| 23. | சித்தம் | 161. | சாரோத்தரம் | ௪ |
| | | 162. | ஔசநோத்தரம் | |
| | | 163. | சாலாபேதம் | |
| | | 164. | சசிகண்டம் | |
| 24. | சந்தானம் | 165. | இலிங்காத்யக்ஷம் | ௭ |
| | | 166. | சுராத்யக்ஷம் | |
| | | 167. | சங்கரம் | |
| | | 168. | அமலேச்வரம் | |
| | | 169. | அசங்கியம் | |
| | | 170. | அநிலம் | |
| | | 171. | துவந்துவம் | |
| 25. | சர்வோத்தம் | 172. | சிவதர்மோத்தரம் | ௫ |
| | | 173. | வாயுபுரோக்தம் | |
| | | 174. | திவ்யபுரோக்தம் | |
| | | 175. | ஈசானம் | |
| | | 176. | சர்வோத்கிதம் | |
| 26. | பாரமேசுவரம் | 177. | மதங்கம் | ௭ |
| | | 178. | யக்ஷிணிபத்மம் | |
| | | 179. | பாரமேசுவரம் | |
| | | 180. | புஷ்கரம் (பௌஷ்கரம்) | |
| | | 181. | சுப்பிரயோகம் | |
| | | 182. | ஹம்சம் | |
| | | 183. | சாமாந்யம் | |
| 27. | கிரணம் | 184. | காருடம் | ௯ |
| | | 185. | நைருதம் | |
| | | 186. | நீலம் | |
| | | 187. | ரூக்ஷம் | |
| | | 188. | பாநுகம் | |
| | | 189. | தேநுகம் | |
| | | 190. | பிரபுத்தம் | |
| | | 191. | புத்தம் | |
| | | 192. | காலம் | |

| | | | | |
|---|---|---|---|---|
| 28. | வாதுளம் | 193. | வாதுளம் | கஉ |
| | | 194. | உத்தரவாதுளம் | |
| | | 195. | காலஞானம் | |
| | | 196. | பிரரோஹிதம் | |
| | | 197. | சர்வம் | |
| | | 198. | தர்மாத்துமகம் | |
| | | 199. | சிரேஷ்டம் | |
| | | 200. | நித்தியம் | |
| | | 201. | சுத்தம் | |
| | | 202. | மஹாநநம் | |
| | | 203. | விச்வம் | |
| | | 204. | விச்வாத்மகம் | |

ஆ உபாகமம் உ௦எ

## சிவபெருமானுக்கு ஆகமங்கள் அங்கங்களாயமைந்தமை

---

காமிகம் பாத³யுக்³மம் ஸ்யாத்³யோக³ஜம் கு³ல்ப²மேவ ச|
சிந்த்யம் பாதா³ங்கு³லீ꞉ ப்ரோக்தா꞉ காரணம் ஜங்கி⁴கா த்³வே
பவேத்||

அஜிதம் ஜாநுதே³ஶம் ஸ்யாத்³தீ³ப்தமூருப்ரதே³ஶகம்|
ஸூக்ஷ்மம் கு³ஹ்யமேவம் ஸ்யாத்ஸஹஸ்ரம் கடிதே³ஶகம்||
அம்ஶுமாந்ஸ்யாத்ப்ருஷ்ட²தம் ஸுப்ரபே⁴த³ந்து நாபி⁴கம்
விஜயம் குக்ஷிதே³ஶம் ஸ்யாந்நிஶ்வாஸம் ஹ்ருத³யம் ப⁴வேத்||
ஸ்வாயம்பு⁴வஸ்தநௌ த்³வௌ து அநலம் நேத்ரமேவ ச|
வீரம் கண்ட²ப்ரதே³ஶஸ்து ரௌரவம் ஶ்ரோத்ரமேவ ச||
மகுடம் மாகுடம் தத்³ரூபம் ப்ரத்யங்க³மேவ ச|
பா³ஹுப்⁴யாம் விமலம் ப்ரோக்தம் சந்த்³ரஜ்ஞாநமுரஸ்ஸ்த²லம்||

[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥

(1) காமிகம் .... ... திருவடிகள்

(2) யோகஜம் ... ... கணைக்கால்கள்

(3) சிந்தியம் ... ... திருவடிவிரல்கள்

(4) காரணம் ... ... கெண்டைக்கால்கள்

(5) அசிதம் ... ... முழந்தாள்கள்

(6) தீப்தம் ... ... தொடைகள்

(7) சூக்குமம் ... ... குய்யத்தானம்

(8) சகச்சிரம் ... ... கடித்தானம்

(9) அம்சுமான் ... ... முதுகு

(10) சுப்பிரபேதம் ... ... கொப்பூழ்

(11) விஜயம் ... ... உதரம்

(12) நிச்சுவாசம் ... ... இருதயம்

(13) சுவாயம்புவம் ... ... முலைகள்

(14) ஆக்கினேயம் .... .... கண்கள்

(15) வீரம் ... ... கழுத்து

(16) ரௌரவம் ... ... செவிகள்

(17) மகுடம் .... ... திருமுடி

| | | | |
|---|---|---|---|
| (18) | விமலம் | ... ... | கைகள் |
| (19) | சந்திரஞானம் | ... ... | மார்பு |
| (20) | முகவிம்பம் | ... ... | திருமுகம் |
| (21) | புரோற்கீதம் | ... ... | திருநாக்கு |
| (22) | இலளிதம் | ... ... | கபோலங்கள் |
| (23) | சித்தம் | ... ... | திருநெற்றி |
| (24) | சந்தானம் | ... ... | குண்டலம் |
| (25) | சருவோக்தம் | ... ... | உபவீதம் |
| (26) | பாரமேசுவரம் | ... ... | ஆரம் |
| (27) | கிரணம் | ... ... | இரத்திஞபரணங்கள் |
| (28) | வாதுளம் | ... ... | திருப்பரிவட்டம் |
| | பிம்பம் | ... ... | புஷ்பமும் மாலையும் |
| | சைவசித்தாந்தம் | ... ... | நைவேத்தியம் |

இவ்வாகமங்கள் சதாசிவரால் அனந்தேசுவரர்க்கும், அனந்தேசுவரரால் ஸ்ரீகண்டருக்கும், ஸ்ரீகண்டரால் தேவர்களுக்கும், தேவர்களால் முனிவர்களுக்கும், முனிவர்களால் மனிதர்களுக்கும், மனிதர்களால் மனிதர்களுக்கும் உபதேசிக்கப்படும். இங்ஙனம் உபதேசிக்கப்படுங்கால் உளவாகிய சம்பந்தம் ஆறும் முறையே பரசம்பந்தம், மகாசம்பந்தம், அந்தராளசம்பந்தம், திவ்வியசம்பந்தம், திவ்யாதிவ்யசம்பந்தம், அதிவ்வியசம்பந்தம் எனப் பெயர் பெறும்.

மகாசங்காரமுடிவின்கண்ணே உலகங்களை மீளப் படைக்குமாறு (இருக்குவேதத்து க௦-ம் மண்டலத்து கஉக-ம் சூக்தத்து சு, எ-ம் மந்திரங்கள் கூறுமாறு பரமவியோமம் எனப்படும் திருச்சிற்றம்பலத்து அத்தியக்ஷராகிய மகாசதாசிவ, பரப்பிரமசிவனுருடைய (காமம் எனப்படும்) பராசத்தி குடிலையை நோக்கியவழி, வேதாகமங்

கள் குடிலையினின்று நாதவடிவாயும் அதன்பின் விந்துவடிவாயும், அதன்பின் அக்ஷரவடிவாயும் முறையே தோன்ற, பின் அவற்றைச் சொற்றொடர்ப்படுத்திப் பிறர்க்கு அருளுமாறு அச்சிவபிரான் சகளநிஷ்களத் திருமேனிகொண்டருளிச் சதாசிவமூர்த்தியாய் நின்று தற்புருடமுதலிய நான்கு முகங்களால் வேதங்களைத்தோற்றுவித்து, மேற்கண்ணதாகிய ஈசானமுகசம்பந்தமாகிய ஐந்து சுரோதசுகளாலும் காமிகாதி இருபத்தெட்டு * ஆகமங்களையும் தோற்றுவித்து வேதங்களை அனந்தேசுரவழியானே 'യോ ബ്രഹ്മാണം വിദധാതി പൂർവം യോ വൈ വേദാംശ്ച പ്രഹിണോതി തസ്മൈ' "எவர் முதற்கண்ணே பிரமாவைப் படைத்தாரோ, எவர் வேதங்களை முதன்முதற் பிரமாவுக்கு அருளிச்செய்தாரோ" என்று சுவேதாசுவதரங்கூறுமாறு, பிரமாவுக்கு அருளிச்செய்து சிவாகமங்களைப் பிரணவர்முதலிய பதின்மரும் மகாருத்திரர் முதலிய பதினெண்மருமாகிய இருபத்தெண்மருக்கும் சிவபேதம் உருத்திரபேதம் எனப்பகுத்து ஓரோவொன்று ஒவ்வொருவருக்கு அருளிச்செய்து, பின்னர் அவ்விருபத்தெட்டினையும் வித்தியேசுவரர் எண்மருட்டலைவராகிய அனந்ததேவர்க்கு அருளிச்செய்ய, அவற்றை அவர் நூற்றுப்பதினெட்டு உருத்திரர்களுக்குத் தலைவராகிய ஸ்ரீகண்டருத்திரர்க்கு அருளிச்செய்ய அவற்றை அவர் கணங்கட்கும் தேவர்க்கும் முனிவர்க்கும் மனிதர்க்கும் அளித்தற்பொருட்டு, முதற்கண் நந்திபெருமானுக்கு அருளினர் என்று தத்துவவுண்மை அறிந்தோர் கூறுவர்.

"தைத்திரீய ஆரணியகத்து ௧௦. ௨௧. ௫௯-ம் மந்திரத்திலே (வேதமுதலிய) சர்வவித்தைகளுக்கும் (கர்த்தா) ஈசானர்" என்று காணப்படுகின்றது.

അസ്യ മഹതോ ഭൂതസ്യ നിഃശ്വസിതം।

"இருக்குவேதம், யசுர்வேதம், சாமவேதம், அதர்வாங்கிரசு, இதிகாசம், புராணம், வித்தை, உபநிடதமுதலியன) பரம்பொருளினால் (லேசானே அருளிச்செய்யப்பட்டன என்பது தொனிக்கச்) சுவாசிக்கப்பட்டது" என்று கூறப்பட்டது.

---

* சைவாகமம் என்னும் பெயர் அன்னபூர்ணோபநிடதத்து ௫-ம் அத்தியாயத்து ௨௧-ம் மந்திரத்திற் காணப்படுகின்றது.

அஷ்டாத3ஶாநாம் வித்3யாநாமேதாஸாம் பி4ந்நவர்த்மநாம்
ஆதி3கர்த்தா கவிஸ்ஸாக்ஷாச்சூ2லபாணிரிதி ஶ்ருதி:॥

"பலமார்க்கமுடைய் (இந்த வேதமுதலிய) பதினெண் வித்தைகளுக்கும் நேரே முதற்கர்த்தாவாயுள்ளார் சூலபாணியாகிய சிவபெருமான் என்று சுருதி கூறுகின்றது" என்று சிவபுராண வாயுசங்கிதை பூருவபாகத்து க-ம் அத்தியாயத்து உச-ம் சுலோகம் கூறுகின்றது. இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களும், சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தசு, சோதிடம் என்னும் ஆறு அங்கங்களும், புராணம், நியாயம், மீமாஞ்சை தருமசாஸ்திரம் என்னும் நான்கு உபாங்கங்களும், ஆயுர்வேதம், தநுர்வேதம், கந்தருவவேதம், அர்த்தவேதம் என்னும் நான்கு உபவேதங்களுஞ் சேர்ந்து பதினெண் வித்தைகளாகும்.

இதிஹாஸபுராணாப்4யாம் க்ருச்2ச்2ரம் வேத3ஸ்ஸமுபப்3ரும்ஹித:।
ஶைவாக3மேஷு வேதா3ர்த2: ஸாங்கோ3பாங்க3ஸ்ஸவிஸ்தர:।
ஸம்ஸ்காராதி4காரஶ்ச ஶைவேஷ்வேவோபப்3ரும்ஹித:॥

"வேதம் இதிகாசபுராணங்கள்கொண்டு மிகவும் பிரயாசையோடு வியாக்கியானஞ் செய்யப்பட்டது; பின்னர் அவ்வேதம் சைவாகமங்களிலே சாங்கோபாங்கவிஸ்தாரமாக (உபப்பிருங்கணஞ் செய்யப்பட்டது; ஷடத்துவசுத்தி எனப்படும்) சம்ஸ்காராதிகாரமும் நன்கு உபப்பிருங்கணஞ்செய்யப்பட்டது" என்று சைவபுராணவாயுசங்கிதை பூருவபாகத்து உஅ-ம் அத்தியாயத்து கூ, கo-ம் சுலோகங்கள் கூறுகின்றன. அப்பயதீக்ஷிதயோகியார் சிவாகமங்கள் வேதத்துக்கு உபப்பிருங்கணங்களாதல்பற்றி வேதாந்தசூத்திரபாஷ்யமாகிய சிவார்க்கமணிதீபிகை க-ம் அத்தியாயத்து க-ம் பாதத்து ஈ-ம் சூத்திரத்திலே

[illegible]

"சைவாகமங்களும் புராணசப்தத்திலே தொகுக்கப்படும்" என்று கூறினர். அருணந்திசிவாசாரியர் வேதங்கள் சூத்திரம்போன்றிருத்தலிற் பொதுநூல் என்றும், அவ்வேதங்களுக்குப் பாஷ்யம் போன்றிருத்தலிற் சிவாகமங்கள் சிறப்புநூல் என்றும் பொருள் கொள்ளுமாறு சிவஞானசித்தியார் அ-ம் சூத்திரத்து கடு-ம் செய்யுளில் "ஆரணநூல் பொதுசைவமருஞ் சிறப்புநூலாம்" என்றருளிச்செய்தார். நீலகண்டசிவாசாரியர் பாசுபதாதிகரணத்தில் (உ. உ. ஙு-அ) பிரஹ்மம், பிரணவம், பஞ்சாக்ஷரம், பிராசாதாதிமந்திரம் பசு பதி பாசாதி வஸ்து வியவகாரம், பஸ்மோத்தூளண திரிபுண்டரதாரணம், லிங்கார்ச்சனம், உருத்திராக்ஷதாரண முதலிய பரதருமங்கள் வேதத்திலும் சிவாகமத்திலும் சமமாகக் காணப்படுகின்றன என்றும், வேதத்துக்கும் சிவாகமத்துக்கும் வேற்றுமை இல்லை என்றும், வேதம் மூவருணத்தார்க்குரியதாகச் சிவாகமம் எல்லா வருணத்தார்க்கும் உரியது என்றும் கூறியருளினர்.

சிவாகமங்கள் சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம் என நான்காக வகுக்கப்படும். சரியாபாதத்திலே பிராயச்சித்தவிதி, பவித்திரவிதி, சிவலிங்கலக்ஷணம், செபமாலை, யோகபட்டமுதலியவற்றின் இலக்ஷணமுதலிய கூறப்படும்; கிரியாபாதத்திலே மந்திரங்களின் உத்தாரணம், சந்தியாவந்தனம், பூசை செபஹோமங்கள், சமயவிசேஷ நிருவாண ஆசாரியாபிஷேகங்கள் கூறப்படும்; யோகபாதத்திலே முப்பத்தாறு தத்துவங்கள் தத்துவேசுவரர் இயமநியம ஆசனம் சமாதிமுறை முதலிய கூறப்படும்; ஞானபாதத்திற் பதிபசுபாச லக்ஷணங்கள் கூறப்படும்.

சரியாபாதமுதலிய நான்கு பாதமும் தனித்தனி நான்காகப் வகுக்கப்படும், இவற்றைச் சிவஞானபோதமாபாஷ்யத்திற்காண்க.

வடமொழியினுள்ள மூலாகமம் இருபத்தெட்டனுள்ளே ஞானபாதத்துள்ள ஒவ்வோர் ஆகமம் ஐக்கியவாதசைவம், பாடாணவாதசைவம், பேதவாதசைவம், சிவசமவாதசைவம், சங்கிராந்தவாதசைவம், ஈசுரவவிகாரவாதசைவம் என்னும் அகச்சமயமுதலியவைகளுக்கும் பொருள்கொள்ளுமாறு செய்து, சைவசித்தாந்த சமயத்துக்கு நேரே பொருள்கொள்ளவொட்டாது மயங்கவைப்பதுவேயாக, தமிழ்மொழியாற் செய்யப்பட்ட இத்தத்துவவிளக்கம் அவ்விருபத்தெட்டாகம ஞானபாதத்தின் சாரமாய்நின்று பதிபசுபாசங்களின் இலக்கணங்களை வழுவற மயக்கமின்றி உணர்த்திச் சிவாநுபவமுடைய ஞானசாரியர்வாயிலாகச் சைவசம்ஸ்காரப்பெற்றுத் தன்னை ஓதல் ஓதுவித்தல் கேட்டல் கேட்பித்தல் சிந்தித்தல் என்னும் ஐவகை ஞானபூசைவாயிலாகத் தொடர்ந்த பக்குவர்களாகிய சீடர்களை ஆணவமலமயக்கத்தினின்றொழித்துச் சிவாநுபோக நிலையிற் செலுத்திச் சந்தேகமின்றி உய்விக்கும் என்பது தொனிக்க "மையறீரவெழுதுவனே" என்று கூறப்பட்டது.

இந்நூலாசிரியர் தாம் அருளிய வேதாகமசாரமாகிய வைதிக சைவசித்தாந்த தத்துவவிளக்கம் தமது ஞானசாரியருடைய திருவருள்வலியினாற் சிதைந்துபோகாதுஎக்காலத்தும் நிலைபெறுவதொன்றுமென்பதும், தமிழிலே அருளிச்செய்யப்பட்ட மற்றைச்சாஸ்திரங்கள்போலச் சிலகாலத்தனவாம் என்று காலவளவைபற்றி எள்ளிக் கூறும் புன்மொழியினின்று நீங்கித் தூய்தாய் வச்சிரலேபம்போல நிலைத்து மெய்யன்பர்களை உய்விக்கும் என்பதும் புலப்படவே "கூறுவனே" என்று கூறாது "எழுதுவனே" என வரைந்தருளினர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருவாய்மலர்ந்தருளும் தேவாரப்பதிகங்களையெல்லாம் தமது திருக்கரத்தால் எழுதிவைத்தாற்போலவே, இத் தத்துவவிளக்கநூலையும் வரைவேனாயினேன் என்பாராய் "எழுதுவனே" எனக் கூறினர் எனலுமாம்.

## ஞானாசாரியர் துதி

---

(௪) எழுமென தாசை முடித்தற் குளவேழு தாமறையும்
வழுதிதன் கூனு நிமிரவந் தாண்டன வையமுய்யக்
கழுமல வாணருந் தேவியுங் கண்டுதங் கண்களிப்பச்
செழுமலர் வாவிக் கரையினின் றாடிய சிற்றடியே.

(இ-ள்) எழும் எனது ஆசை முடித்தற்கு உள = (சமுத்திரம்போன்று விரிந்துகிடந்த வடமொழிச் சிவாகமப்பொருளை என் சிறிய தமிழ்ப்பாவினாற் பக்குவான்மாக்களுக்கு உணர்த்தவேண்டுமென)எழுகின்ற என்ஆசையை முற்றுவித்தற்குத் துணையாயுள்ளன (யாவை எனின், அவை); எழுதாமறையும் வழுதிதன் கூனும் நிமிர வந்தாண்டன = சுருதியின் கூனும் பாண்டியன் கூனும் நிமிருமாறு வந்து ஆண்டனவாய்; வையம் உய்ய கழுமலவாணரும் தேவியும் கண்டு தம் கண் களிப்ப செழுமலர் வாவிக்கரையில் நின்றாடிய சிற்றடியே = உலகமுய்யுமாறு சீகாழித்தலைவராகிய பிரம்புரீசரும் திருநிலைநாயகியம்மையாரும் கண்டு தங்கள் கண்கள் களிக்குமாறு செழிய தாமரைமலர்கள் நிறைந்த பிரமதீர்த்த வாவிக்கரையின் கண்ணே நின்று ஆனந்தபாஷ்பம் பொழிய ஆனந்தக் கூத்தாடினவாயுள்ள ஸ்ரீஞானசம்பந்தப்பெருமானுடைய சிறிய திருவடிகளேயாம் எ-று.

(வி-ரை) திருப்பாண்டிநாட்டிலே "மன்னன் எப்படி மன்னுயிர் அப்படி" என்றவாறு அரசனைப்போலக் குடிகளும் க்ஷமணசமயத்தாராய்விட, மயிர்பறி தலைகளும், ஊத்தைவாயும், உறிபொதிகலனும், மயிற்பீலிக்கையும், பாயுடையும், மனம்போல் மாசுண்ட சரீரமும், வெற்றரையுமுடைய க்ஷமணப்பதிதர்களே எங்கும் பரந்துவிட, அதனால் க்ஷமணிருள் விருத்தியாய் ஓங்கினமையின் வைதிக சைவ ஒளி குன்றிவிட்டது. விடவே, வேதமான துதலையெடுத்தோங்கமாட்டாது ஒடுங்கி முடங்கிவிட, பாண்டியராஜசபையிலே அப்பாண்டியன் சுரத்தை விபூதிகொண்டு போக்கியும், க்ஷமணர்கள் எ

திரே தேவாரத்திருவேட்டை அக்கினியிலிட்டுப் பச்சையாக எடுத்தும், வைகைநதியிலே "வாழ்கவந்தணர்" என்னும் திருப்பாசுரயேட்டை இட்டு எதிரேறும்படி செய்தும், இங்ஙனம் க்ஷமணர்களை வாதிலே செயித்து, அவர்கள் கழுவேறுமாறு செய்து, வைதிகசைவத்தைத் தலையெடுக்கச் செய்தமையின், "மறையின் கூன் நிமிர" என்றும், "வேந்தனுமோங்குக" என்று திருப்பாசுரத்திலே அருளிப் பாண்டியன் முதுகின் கூனையும் நிமிர்த்தி, அதனால் அவனது கூன்பாண்டியன் என்னும் பெயரை நெடுமாறன் என மாற்றி அநுக்கிரகித்தன மதுரைக்கெழுந்தருளிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவடிகளேயாமாதலின் "எழுதாமறையும் வழுதிதன் கூனும் நிமிரவந்தாண்டன" என்று அவர் திருவடிகள் துதிக்கப்பட்டனவாம் என்க.

இங்ஙனம் க்ஷமணிருளை ஓட்டி, வைதிகசைவசமயஸ்தாபனஞ் செய்து புண்ணியபூமியெங்கும் நன்மைவிளைத்துத் தமிழ்வேதஞ் செய்த நன்றியை மறந்து, அத்தமிழ்வேதத்தைத்தூஷித்து அதனைக் காதினாலும் கேட்டல் கூடாதென்று நிந்திப்பவர்கள் கஞதமாச்சிரமத்திற்குப் போய்ப் பன்னிருவருஷம் அன்னம் அயின்றுவிட்டு அவர் செய்த நன்றியை மறந்து அவரைத் தூஷித்து அவராற் சபிக்கப்பட்டு வைதிகநெறியினின்று நீக்கப்பட்டகொடியோர்களேயாம்.

சிவபாதவிருதயர் பிரமதீர்த்தவாவியின்கண்ணே செயற்பாலனவாகிய ஸ்நாநாதி நியமங்களை முடித்துக் கரையிலேறித் தமது புதல்வராகிய பிள்ளையாருடைய திருவாயிலே பால் ஒழுகியிருப்பக் கண்டு, "நீ யார் தந்த பாலை உண்டனை? அவரைக் காட்டு என்று கோபித்து," ஓர் சிறு மாறுகொண்டு ஓச்ச, அப்பிள்ளையார் தமது திருக்கைவிரலால் அம்மையப்பர் இருவரையும் சுட்டித் "தோடுடைய செவியன்" என்னும் திருப்பதிகம் பாடி அச்சிறு மாற்றினால் எய்திய வருத்தந் தோன்றாது உமையம்மையார் அளித்த சிவஞானப்பாலை உண்டு சிவானந்தமேலிட்டுப் "பாடலினொடாடலிவையயின்றிடினும் பயில்வர்" என்றவாறு ஆனந்தபாஷ்பஞ் சொரிய

ஆனந்தக்கூத்தாடினர் என்று உணர்த்தற்கே "செழுமலர் வாவிக்க ரையினின்றாடிய சிற்றடியே" என்றும், இச் சிறுகுழந்தையார் அங் ஙனம் ஆனந்தாதீதத்தினின்று தம்மிருவரையும் பாடி ஆட அவ்வி ருவருங் கண்டு கண்களித்தார்கள் என்று விளக்குதற்கே "கழுமல வாணருந் தேவியுங்கண்டு தங்கண்களிப்ப" என்றும் கூறப்பட்டது.

வைதிக சைவசித்தாந்தத்தில் ஒழுகித் தம்மை அன்பினோடு வழுத்துகின்றவருடைய மலத்தைப் போக்கிச் சிவானந்தத்தை விளைவிக்குமியல்பினர் அப்பிரமபுரீசராமாதலின் அவர் எழுந்தருளி யிருக்கும் திருப்பதியின் பன்னிரு பெயர்களுட்போந்த மற்றோர் பெயராற் கூறாது நிருமலபதி எனப்படும் கழுமலப்பெயரால் அது ஈண்டுக் கூறப்பட்டது.

உரோமசமுனிவர் என்பார் திருக்கைலாச மலையின்கண்ணே ஓர் பாரிசத்திலிருந்து தவஞ் செய்துகொண்டிருந்தகாலத்திலே திரு வருளால் அவரது அந்தக்கரணங்கள் சிறிது பேதித்தபோது இ தற்குக் காரணம் என்னை என்று ஞானதிருஷ்டியினால் ஆராய்ந்தார்; அங்ஙனம் ஆராயுங்கால், கலியுகத்திலே உலகமெல்லாம் மெய்மொழி ஒழிந்துபோக, பொய்மொழி பெருகும் என்றும், அறம் குன்ற மறம் ஓங்கும் என்றும், ஆசாரம் குறைய அநாசாரம் மிகுக்கும் என்றும், வேதசிவாகமங்களின் உணர்ச்சி ஒடுங்க, சின்னூலுணர்ச்சி மலியும் என்றும், வைதிகநெறியும் சைவநெறியும் கோணிப்போக, பௌத்த ஆருகதசமயங்கள் பரந்தோங்கும் என்றும், அதனால் உல கிலுள்ளார் முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானை மறந்து நரகத் துக்கு ஆளாகப்போகின்றார்கள் என்றும் உணர்ந்து பரிதாபமுற்று, இவ்வுடலோடு தாம் வாழ்வதனால் எய்தும் பலன் யாது? என்று கூறி எழுந்து, உலகினர் ஏனைச்சமயங்களில் மயங்கி வீழாவண்ணம் தடுத்தற்கும், ஞானத்தினால் மோக்ஷம் எய்தும் என்று சாஸ்திரங் கள் கூறுகின்றமையால் தாம் மும்மலங்களினின்று நீங்கி முத்திய டைவதற்கும் வாய்ப்பாகிய புண்ணியஸ்தலம் யாது என்று நந்தி பெருமானை நணுகி நமஸ்கரித்து வினாவினார். அப்போது திருநந்தி தேவர் ரோமசமுனிவரை நோக்கி, முன்னாளிலே பிரமவிஷ்ணுக்

கள் வேண்டிய வேண்டுகோளுக்கிசைந்து, சிவபிரான் திருக்கைலாசத்தின் தக்ஷிணகொடுமுடியில் எழுந்தருளியிருந்துகொண்டு அதனை ஒவ்வொரு திக்கிலும் ஐந்து சக்கரவாகப்பக்ஷிகளாக, நான்கு திக்கினும் இருபது பக்ஷிகளால் ஏந்தி எழுந்தருளப்பண்ணிக்கொண்டு வந்து வீற்றிருக்கப்பெற்று, பிரமப்பிரளயகாலத்திலும் சலியாதிருக்கும் பூலோககைலாசமாகிய ஓர் திவ்யஸ்தானம் உண்டு; அங்கேபோய் உனது வேண்டுகோளை முற்றுவித்துக்கொள்க என்றார். அங்ஙனம் அந்தப் பூலோககைலாசமாகிய சீகாழியில் வந்து, முனிவர் சிவபெருமானையுற்றுத் தவஞ்செய்துகொண்டிருக்குங்கால், சிவபெருமான் அவர்க்குப் பிரசன்னராகி உனக்கு வேண்டிய வரம் யாது என்று கேட்க, அதற்கு முனிவர் சிவபெருமானை நமஸ்கரித்து எம்பெருமானே! கலியுகத்திலே தேவரீரை மறந்து உலகமெல்லாம் பௌத்த ஆருகத சமய இருட்டினுள்ளே வீழ்ந்து தடுமாறப்போகின்றார்களே! அச்சமயங்கள் பரவாவண்ணம் நிராகரணம் செய்யவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, அதற்கு அவர் அங்ஙனஞ் செய்கினறேம் என்று திருவாய்மலர்ந்தருளிவிட்டு, உலகினர்பொருட்டு நீ கேட்ட வரம் ஒன்றன்றி, உன்பொருட்டுளதாக நீ வேண்டும் வரம் மற்றிலதோ என, அதற்கு முனிவர் என்னை அநாதியேபற்றிய மலத்திரயங்களை நீக்கி, சிவசாயுச்சியம் தந்தருளல் வேண்டும் என்று பிரார்த்தித்தார். அப்போதே சிவபிரான் முனிவர்க்குச் சாட்சுஷிதீக்ஷை செய்து, சிவஞானோபதேசம்வாயிலாக அவரது மலத்திரயங்களையும் போக்கி, பரமுத்தியிற் செலுத்தி, நிர்மலமாக்கிவிட்டார். அவர் நிர்மலமாக்கப்பட்டமையால், அந்தப் பூலோக கைலாசத்துக்கு நிர்மலபதி என்னும் காரணப்பெயர் போந்தது. நிர்மலபதி எனினும் கழுமலநகர் எனினும் ஒக்கும், திருக்கைலாசத்தினின்று இருபது சக்கரவாகப்பக்ஷிகளால் தாங்கப்பட்டு வந்தது இந்தக் கழுமலம் என்பது,

பார்கொண்டுமூடிக்கடல்கொண்டஞான்றுநின்பாதமெல்லாம்
நாலஞ்சுபுள்ளினமேந்தினவென்பர்நளிர்மதியங்
கால்கொண்டவண்கைச்சடைவிரித்தாடுங்கழுமலவர்க்
காளன்றிமற்றுமுண்டோவந்தணாழியகலிடமே

என்னும் ஸ்ரீவாகிசர் திராவிடசுருதியானும், ரோமசமுனிவர் பரசமயங்களால் உலகம் பழிபெருகப்பெறும் என்று நினைந்தமையும், அவர் வரம்பெற்ற பிரகாரம் நிலவுலகிலே நிலவிய பரசமயமாசு கழுவப்பட்டமையும்

ஒழுகலரிதழிகலியிலுழியுலகுபழிபெருகுவழியைநினையா
முழுதுடலிலெழுமயிர்கடழுவுமுனிகுழுவினொடுகெழுவுசிவனைத்
தொழுதுலகிலிழுகுமலமழியும்வகைகழுவுமுரைகழுமலநகர்ப்
பழுதிலிறையெழுதுமொழிதமிழ்விரகன்வழிமொழிகண்மொழிதகை
யவே

என்னும் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருவாக்கினால் அறியப்படுகின்றன.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தமது தேவாரத் திருப்பதிகத்தினாலே அப்பிரமதீர்த்தமாகிய பொய்கையைச் சிறப்பித்து "அருநெறியமறைவல்ல முனியகன்பொய்கையலர்மேய" என்று அருளினாராக, நூலாசிரியரும் அதனைச் "செழுமலர்வாவி" என்று சிறப்பித்தருளினர்,

மறையின் கூனையும் பாண்டியன் கூனையும் ஒரே முறையில் விரைந்து நிமிர்த்துதலாகிய அரும்பெருஞ் செய்கைகள் செய்த திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருவடிகளுக்குத் தமது தத்துவ விளக்கநூலின்கண் நிகழும் சொற்பொருட் குற்றங்கள் என்னும் கூனையும் விரைந்து நிமிர்த்தியருளுதல் அரிதன்றென்னும் ஓர் பொருள் புலப்பட "எழுமெனதாசை முடித்தற்குள சிற்றடியே" என்று அருளப்பட்டது

வேண்டினுமன் டாகத் துறக்க துறந்தபி
னீண்டியற் பால பல

என்றுபொய்யாமொழிப்புலவரும், "காலமுண்டாகவே காதல்செய் துய்மின்" என்று ஸ்ரீ மாணிக்கவாசகசுவாமிகளும், "விண்ணுயகண் கூத்து வெட்டவெளியேதிளைத்துக் கண்ணாரமுதுண்டார் காலம்பெ றவழுதார்" என்றும், "காலமுற்பெறவழுதவர்" என்றும் ஸ்ரீசேக்கிழார் நாயனாரும் அருளியவாறு சிவானந்தத்தேனை மூன்றும் வய சாகிய சிறுவயசிலே சுவாநுபவத்திற் பருகிக் களித்தார் என்பது தொனிக்கவே "சிற்றடி" என்று கூறப்பட்டது.

## பதியியல்

பதிலக்ஷணம்

---

(ரு) சிற்கனன் றன்னிக ரின்றிப் பரந்தோன் சிதைவறியா
வோற்கமி ழேற்றத் துயர்ந்தோ னுறுதுக ளோன்றுமில்லோன்
சோற்கலை ஞாலத்து வித்தா யவன்றுற வெங்குமில்லோ
னற்கரு ணாலயன் வாழி தென்காழி நயந்தவனே.

(இ-ள்) சிற்கனன் = ஞானமே திருமேனியாகவுடையவரும்; தன்னிகரின்றிப் பரந்தோன் = தமக்கு ஒப்பாரும் மிக்காருமின்றி உயர்ந்தவரும்; சிதைவு அறியா ஒற்கமில் தோற்றத்து உயர்ந்தோன் = அழிவுறாது பரத்துக்குமேற் பரமாயினாரும்; உறுதுகள் ஒன்றும் இல்லோன் = (பிறிதொன்றற்குப்போல)எய்தும் மாசொன்றில்லாதவரும்; சொற்கலை ஞாலத்து வித்தாயவன் = சொற்பிரபஞ்சம் பொருட்பிரபஞ்சம் என்பவற்றிற்கு வித்தாயினவரும் (காரணமாயுள்ளவரும்); துறவு எங்கும் இல்லோன் = அவ்விருவகைப்பிரபஞ்சப்பொருளையும் எங்கும் வியாபித்து அவற்றினின்று நீங்காதவரும்; நற்கருணாலயன் = நல்ல அருளுக்கு ஆலயமாயுள்ளாரும் தென்காழி நயந்தவன் = தென்றிசைக்கணுள்ள சீகாழியைப் பதியாகக்

கொண்டு விரும்பிய பிரமபுரீசப்பெருமானேயாம் எ-று.

"ஒற்கமில் தோற்றம்" என்பது சுருங்குதலில்லாத தோற்ற முடைமையின் பரம் எனப்படும்.

ஜ்ஞாநாநந்தமஹாதேவஸ்ஸத்யாநந்தகுணைஸ்ஸ்மூர்த்தித:।
நாஸ்தி தஸ்ய ஶரீரம் து ஜ்ஞாநஶக்திம் விநாவ்யயாம்॥

"சிவபிரான் சத்தியஞானானந்தகுணமுடைய மூர்த்தியாகக்கொள்ளப்படுகின்றார்; அழியாத ஞானசத்தியை விடுத்து அவர்க்குச் சரீரமில்லை" என்று தக்ஷகாண்டமும்,

தஸ்மாஜ்ஜ்ஞாநமயோ தேஹஶ்ஶிவஸ்ய பரிகீர்த்தித:।

"சிவபெருமானுடைய தேகம் ஞானமயம் என்று சொல்லப்படுகின்றது" என்று காமிகாகமமும்,

அதீதோதாரகம்பீரோ ஜ்ஞாநோததி:।

"(அவர்) அதிதூய்தாய், உதாரமாய், கம்பீரமாயுள்ள ஞானசமுத்திரம்" என்று இரத்தினத்திரயமும் கூறுதலாற் "சிற்கனன்" எனப்பட்டார்.

ந தத்ஸமஶ்சாப்யதிகஶ்ச த்ருஶ்யதே।

"அவருக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை" என்று சுவேதாசுவதரோபநிடதமும்,

அசிந்த்யோ நௌபம்யோऽப்ரமேயோऽநாமய:।

"அவர் அசிந்திதராய் உவமையிறந்தோராய் அளவிறந்தவராய் அநாமயமாயுள்ளார்" என்று வாதுளாகமமும்,

நிரௌபம்யோ ஹ்யமேயஶ்ச பராத்மா பரிகீர்த்தித:।

"உவமையில்லாதவராய் பிரமாணரகிதராயுள்ளார் பரமான்மாவாகிய சிவபிரான்" என்று சர்வஞ்ஞானோத்தரமும் கூறுமாற்றால் "தன்னிகரின்றிப்பரந்தோன்" எனப்பட்டார்.

ஶிவ: பராத்பரம் ஸூக்ஷ்மம் நித்யம் ஸர்வகதாவ்யய:।

''சிவமாய், பரதத்துவத்துக்கு மேற்பரமாய், சூக்குமமாய், காரண சூனியராதலின்நித்தியராய்(எப்பொருளையும்) வியாபித்துப்பிரியாது அழிவிலராயிருப்பவரென்று கூறப்படலான் "ஒற்கமில் தோற்றத் தயர்ந்தோன்" என்றும், "சிதைவறியா" என்றும், "துறவெங்கு மில்லோன்" என்றும் உரைக்கப்பட்டார்.

அநாதிமலமுக்தத்வாத் ஸர்வஜ்ஞத்வாத் ஸௌ தத: ஶிவ:।

" ஆன்மாக்களைப்போல மலமாகிளுற்றொடக்குண்ணுது சிவபிரானர் அநாதிமலமுத்தராய்ச் சர்வஞ்ஞராயிருத்தலிற் "சிவன்" எனப்படு கின்றார்" என்று கிரணகமம் கூறுதலின் "உறுதுகளொன்றுமி லோன்" எனக் கூறப்பட்டார்.

மந்த்ராத்வா பதாத்வா வர்ணாத்வா சேதி ஶப்தக:।
புவநாத்வா தத்வாத்வா கலாத்வா சார்த்தக: ஸ்ம்ருத:॥

"மந்திராத்துவா, பதாத்துவா, வர்ணத்துவா என்னும் மூன்றும், சொற்பிரபஞ்சம் என்றும், புவனத்துவா தத்துவாத்துவா கலாத் துவா என்னும் மூன்றும் பொருட்பிரபஞ்சம் என்றும் கூறப்படும்." என்றும்,

அத்வநாமத்வபதிம் விதுரத்வவிதோ தஸ்மை நமஸ்ஸகலலோகவி லக்ஷணாய।

" எவரை அத்துவாக்களுக்கு அத்துவபதியாக அத்துவாவை அறிந்த பெரியோர் கூறுகின்றரோ, அவ்வியல்பினராகிய சிவபிரா னுக்கு நமஸ்காரம்" என்றும்,

ஷட்விதாத்வமயஸ்யாஸ்ய ஸர்வஸ்ய ஜகத: பதி:।

"அறுவித அத்துவாமயமாகிய இந்தச் சமஸ்தப்பிரபஞ்சத்துக்கும் (சிவபிரான்) பதி" என்றும்,

அத்⁴வநாமத்⁴வபதே|

"அத்துவாக்களுக்கு அத்துவபதியாயுள்ளவரே" என்றும்,

ருதுகாலோ யதா² வ்யாவ்ய காலோ ஸம்ஸ்ருதி நியோஜக:|
ஶிவஶக்தி ஸமாவேஶாத்தத்த்வஞ் ஜகது³த்³ப⁴வ:||

"இருதுகாலத்தைத் தொடர்ந்து காலமானது முளையைத் தோற்றுவித்தற்கு நியாமகமாயிருத்தல்போல, சிவசத்தி என்னும் இருவர் கூட்டத்தினாற் பிரபஞ்சம் உண்டாகின்றது" என்று ஞானாவரணவிளக்கமும் கூறுதலால், வித்துக்கு ஆதாரமாகிய நிலம் குளிர்ந்தவழி அதன்கண் வித்து உளதாக, அதினின்றும் அங்குரம் தோன்றுமாறுபோல, மாயை தனக்கு ஆதாரமாய்நின்று தோற்றுவிக்கும் சிவபிரானது சத்தியின்கண் நிலையுறுதலால், அச்சிவபிரானார் சத்திசங்கற்பித்தவிடத்து மாயையில் ஒடுங்கிய சொற்பிரபஞ்சம் பொருட்பிரபஞ்சம் இரண்டும் அதினின்று தோன்றுதலாற் "சொற்கலை ஞாலத்து வித்தாயவன்" என்று கூறப்பட்டார்.

ஆகாஶஶரீரம் ப்³ரஹ்ம|

"ஆகாசத்தைச் சரீரமாகவுடையது பரப்பிரமசிவம்" என்று தைத்திரீயோபநிடதமும்,

யஸ்ய ஸா பரமா தே³வீ ஶக்திராகாஶ ஸம்ஜ்ஞிதா|

"சிவபெருமானுடைய பரமதேவியாகிய சத்தியார் ஆகாசம் எனப்படுவார்" என்று கூர்மபுராணமும்,

ஸர்வானுக்³ராஹிகாஶக்தி: ஸௌஹார்த³வவஶாலினீ|

"பேரு வன்மைத் தொகுதியுடைய சர்வகாருண்ணிய சத்தியையுடையர்" என்று சுவாயம்புவாகமமும் கூறுதலால் அவர் நற்கருணையன் எனப்பட்டார்.

ஶிவம் பராத்பரம் ஸூக்ஷ்மம் நித்யம் ஸர்வகதாவ்யயம்।
அநிந்திதமநௌபம்யமப்ரமேயமநாமயம்।
ஶாந்தத்வாச்சிவமுத்திஷ்டம் பரதத்வாத்பராத்பரம்।
வ்யோமாதீதாத்பரம் ஸூக்ஷ்மம் நித்யம் காரணவர்ஜிதம்।
வ்யாப்ய ஸர்வகதம் வ்யாப்தக்ஷீணாதவ்யயம் பவேத்।
அமலத்வாதநிந்திதம் ஜ்ஞேயமௌபம்யஸ்ய நிர்வசம்।
ப்ரமாணாதீதத்வாச்சாப்ரமேயமிதி ஸ்ம்ருதம்
நிர்குணத்வாத்விஶேஷணாதநாமயமிதி ஸ்ம்ருதம்।
இத்யேதைர்லக்ஷணைர்ஜ்ஞேயம் ஶிவம் வேதவிதோ ஜகுஃ
தே॥

"சிவமாயும், பராற்பரமாயும், சூக்குமமாயும், நித்தியமாயும், அனைத்தையும் ஊடுருவியதாயும், சர்வவியாபகமாயும், அவ்வியயமாயும், அநிந்திதமாயும், உவமையில்லாததாயும், அப்பிரமேயமாயும், அநாமயமாயுமுள்ளார்; தூய்தாயிருத்தலாற் சிவம் எனவும், பர தத்துவத்துக்குமேற் பரமாயிருத்தலாற் பராற்பரம் எனவும், வியோமத்துக்கு மேலாயிருத்தலாற் சூக்குமம் எனவும், தம்மைத் தோற்றுவித்தற்குப் பிறிதுகாரணமின்மையில் நித்தியம் எனவும், எவற்றையும் நீக்கமற ஊடுருவி வியாபித்திருத்தலாற் சர்வகதம் எனவும், அழியாதிருத்தலின் அவ்வியயம் எனவும், அமலமாயிருத்தலில் அநிந்திதம் எனவும், ஒப்பிலாதிருத்தலில் அநௌபமம் எனவும், பிரமாணங்களைக் கடந்திருத்தலால் அப்பிரமேயம் எனவும், சாத்துவிகாதி குணமிலாது நிர்க்குணமாயித்தலால் அநாமயம் எனவும் கூறப்படும்" என்று சர்வஞ்ஞானோத்தராகமமும்,

விரஜம் விமலம் ஶாந்தம் ப்ரபஞ்சாதீதகோசரம்।
நிஷ்கலம் காரணாதீதம் ஸர்வஜ்ஞம் ஸர்வதோமுகம்॥

"துகளிலதாயும், விமலமாயும், சாந்தமாயும், பிரபஞ்சாதீதகோசரமாயும், சலிப்பற்றதாயும், காரணாதீதமாயும், முற்றறிவுடையதாயுமுள்ளது சிவம்" என்று சுவச்சந்தபைரவாகமமும்,

ஶிவஸ்து பரமத்வாந் மந்த்ராதீதோ நிரஞ்ஜந꞉।
நிராமயோ நிராதாரோ வர்ணாதிவிவர்ஜித꞉।
ஸர்வஜ்ஞஸ்ஸர்வக³ஶ்ஶாந்தஸ்ஸர்வாத்மா ஸர்வதோமுக²꞉।
அதீந்த்³ரியோ நிராலம்ப³ஸ்ஸுஸூக்ஷ்மஶ்ஶாஶ்வதோ த்⁴ருவ꞉
ஸ ஶைவ ஷாட்³கு³ண்யாட்⁴ய꞉ ஸ்வப்ரமேயோ ஹ்யநௌபம꞉।
ப³ஹிரந்தஸ்ஸ்தி²தஶ்சைவ திலே தைலவத் ஸ்தி²த꞉॥

" சிவபரம்பொருளானது பரமாயது; ஆகலின், (அது) மந்திராதீதமாயும், நிரஞ்சனமாயும், நிராமயமாயும், நிராதாரமாயும், நிறமிலதாயும்; சர்வஞ்ஞமாயும், சர்வவியாபகமாயும், சாந்தமாயும், சர்வான்மாவாயும், சர்வதோமுகமாயும், அதீந்திரியமாயும், நிராலம்பமாயும், அதிசூக்குமமாயும், சாசுவதமாயும், துருவமாயும், ஆறுகுணமுடையதாயும், அப்பிரமேயமாயும், உவமையிலாததாயும், எள்ளில்எண்ணெய்போல உள்ளும்வெளியுமாயும் உள்ளது" என்று சர்வஞ்ஞானோத்தராகமமும் பதிலக்ஷணத்தை விதந்து கூறுகின்றன.

### தத்துவப்பிரகாசம்

---

சித்³க⁴ந ஏகோ வ்யாபீ நித்யஸ்ஸததோதி³த꞉ ப்ரபு⁴꞉ ஶாந்த꞉।
ஜயதி ஜக³தே³கபீ³ஜம் ஸர்வாநுக்³ரஹக꞉ ஶம்பு⁴꞉।

(இ-ள்) சிற்கனராயும், ஏகராயும், வியாபியாயும், நித்தியராயும், நித்தியோதயராயும், பிரபுவாயும், சாந்தராயும், பிரபஞ்சத்துக்கு ஏககாரணராயும், சர்வாநுக்கிரகராயுமுள்ள சம்புவானவர் சர்வோத்கிருஷ்டராய் ஓங்குகின்றார்."

## சத்திலக்ஷணம்

(கூ) நயந்த பிறப்போடு நாசமில் லாதது நாடினர்தாம்
வியந்தரு வீடெய்த வீடோன் றில்லாதது மிக்கறிவா
லுயர்ந்த துலகங்க ளாக்குந் தொழில துயர்தரங்கக்
கயந்திகழ் காழிப் பிரானொளி யாகிய காரணமே.

(இ-ள்) *நயந்த பிறப்பொடு நாசம் இல்லாதது*—(அவாவினால் நமக்கு) எய்திய பிறப்பும் இறப்பும் இல்லாதது; *நாடினர் வியந்தரு வீடு எய்த ஈடு ஒன்று இல்லாதது*—முத்தியை நாடிய பக்குவான்மாக்கள் பெருமைபாலிக்கும் (சிவத்தோடு சூரியனும் கண்ணொளியும் போல இரண்டற அத்துவிதமாய்க் கலத்தலாம்) பரமுத்தியை எய்தத் (தான் துணையாயிருத்தலில்) தனக்கு ஒப்பாகப் பிறிதொன்றில்லாதது; *அறிவால் மிக்கு உயர்ந்தது*—ஞானத்தினால் மிக ஓங்கியது; *உலகங்கள் ஆக்கும் தொழிலது*—உலகங்களையெல்லாம் படைக்குந் தொழிலுடையது; அது யாதெனின் *உயர் தரங்க கயந்திகழ் காழிப்பிரான் ஒளியாகிய காரணம்*—உயர்ந்த அலைகளையுடைய வாவிகள் பிரகாசிக்கும் சீகாழிச்சிவபெருமானுடைய தேஜஸ் எனப்படும் சத்தியாகிய காரணமாம் எ-று.

அஜாத இத்யேவம் கஶ்சித்³ பீ⁴ரு: ப்ரபத்³யதே।

"(உருத்திர!) நீர் பிறவாதுள்ளீர் என்று கூறி, நடுங்கிக்கொண்டு ஒருவன் நும்மை நணுகுகின்றான்" என்று சுவேதாசுவதரோபநிடதமும்,

அநாதி³மத்⁴யாந்தம் ஏகம்

"முதல் நடு இறுதி இல்லாத ஒருவர்" என்று கைவல்லியோபநிடதமும்,

குண: ஸ்ம்ருதா பராஶக்திஸ்ததாஶ்ரயகுணீ ஶிவ:।

"பராசத்தியார் குணம்; அந்தக் குணத்துக்கு ஆசிரயமாயுள்ளார் குணியாகிய சிவன்" என்று காலோத்தராகமமும்,

பராஸ்ய ஶக்திர்விவிதைவ ஶ்ரூயதே।

"அவருடைய பராசத்தி (ஞானேச்சாக் கிரியை முதலியவாய்ப்) பலதிறப்படுவது" என்று சுவேதாசுவதரோபநிடதமும் கூறுமாற்றான், குணிப்பொருளாகிய சிவபெருமான் நித்தியரென்பது பெறப்படுவதேயாக, அவரது குணமாகிய பராசத்தியும் நித்தியமாதல் பெறப்படுதல்பற்றி "நயந்தபிறப்பொடு நாசமில்லாதது" என்று கூறப்பட்டது.

ஜ்ஞாநக்ரியாத்மிகா ஸாஹி நித்யா நித்யோதிதவபுஷா।

"ஞானக்கிரியா சொரூபமாயிருக்கின்ற அப்பராசத்தியார் நித்தியராயும், நித்தியோதயப்பிரகாசராயுமுள்ளார்" என்று பவுஷ்கராகமம் கூறுதலும் அக்கருத்துப்பற்றியேயாம்.

ஸூர்யவச்சிவோ ஜ்ஞேய: ஶக்திரஶ்மிரிவ ஸ்திதா।

"சிவன் ஆதித்தியன் போன்றும், அவர் சக்தி ஒளிபோன்றும் உளர்" என்று சுவச்சந்தபைரவாகமமும்,

வஹ்நேருஷ்ணவச்சக்திரவிநாபாவிநீ விபோ:।
ஶக்திஹீநே ந ஶிவோ நாஸ்தி ஶிவஹீநா ந ஶக்திகா।

"சிவபிரானுக்குத் தீயின் சூடுபோலச் சத்தியார் வேறுபடாதுள்ளார்; சத்தியின்றிச் சிவபிரான் இல்லை; சிவனையின்றிச் சத்தி இல்லை" என்று சுப்பிரபேதாகமமும்,

யதா ஶிவஸ்ததா தேவீ யதா தேவீ ததா ஶிவ:।
தநயோரந்தரம் வித்யாச்சந்த்ரசந்த்ரிகயோரிவ॥

"எங்ஙனம் சிவபிரானோ, அங்ஙனம் தேவியாரும், எங்ஙனம் தேவியாரோ அங்ஙனம் சிவபிரானும் உளர்; சந்திரனும் சந்திரிகையும் போல இவ்விருவர்க்கும் பேதம் இல்லை" என்று வாயுசங்கிதையும் கூறுமாற்றால் அம்மையார் "காழிப்பிரானொளி" என்று கூறப்பட்டார்.

ஶக்திதத்த்வாத் பரம் ஶிவதத்த்வம் ஸர்வதத்த்வோபரிஸ்திதம் |
ஶிவாதிப்ருதிவ்யந்தம் வ்யாபகம் தேன தேஜஸா ||

"சத்திதத்துவத்துக்கு மேற்பட்டது சிவதத்துவம், இது சமஸ்த தத்துவங்களுக்கும் மேலாயுள்ளது; சிவதத்துவமுதற் பிருதிவியந்தமாயுள்ளது; அந்தச் சிவனொளியினால் வியாபிக்கப்பட்டது" என்று சுப்பிரபேதாகமம் கூறுதலானும்,

பாஶஜ்ஞாநேந முக்திஸ்யாத் பஶுஜ்ஞாநாத்ததைவ ச |
ஸர்வத்ர வ்யாபகா முக்தி: பதிஜ்ஞாநேந ஸித்யதி ||

"பாசஞானத்தினாலும் முக்தி எய்தாது; அங்ஙனம் பசுஞானத்தினாலும் அது கிட்டாது; எங்குமாய முத்தி பதி ஞானம் எனப்படும் அருண்ஞானத்தினால் எய்துகின்றது" என்று பராக்கியாகமமும்

ஶிவஶக்தி ஸ்வரூபஞ்ச நிர்மலஜ்ஞானமேவ ச |

"சிவசத்தியின் சொரூபம் நிர்மலமாகிய ஞானமே" என்று காலோத்தராகமமும் கூறுதலின் "மிக்கறிவாலுயர்ந்தது" என்று கூறப்பட்டது.

ஜ்ஞப்திகாரணம் ஶுத்தம் தத்த்வம் ஸஹகாரணம் |
நித்யஸ்ய காரணோத்த ஶக்திஸ்த்ருஷ்டிஜ்ஞா ஸம்பவம் |

—ஞானசித்தியாகமம்.

ஸர்வத்ர ஸௌம்யரோசயா ஶுத்தத்வகாமாலயவ: |

—நிச்சுவாசகாரிகை.

ஸாமெஸ் கூர்ஜாமெந க்ரியதெ தஜ்ஞாநாவராத்

—ஞானசித்தியாகமம்.

"முதற்காரணம் மண்; துணைக்காரணம் சக்கரம்; நிமித்தகாரணம் குலாலன்; இம்மூன்று காரணத்தினலும் மட்பாண்டம் எய்துகின்றது; ஈசுவரன் குலாலனையும், சத்தி சக்கரத்தையும், மாயை மண்ணையும் நிகர்ப்பனவாம்; பரமேசுவரராகிய குலாலனால் இந்தச் சராசரம் இயற்றப்படுகின்றது" என்று ஞானசித்தியாகமமும் நிச்சுவாசகாரிகையும்,

தயொஸ்ஸகாஶாஜ்ஜநிதஶ்சேதநாசேதநாத்மக: |
ஸர்வேஷாம் ஜகதாம் மாதா ஶக்தி: பிதா ஶிவ: ||

"சத்தி சிவம் என்னும் இவரின் கூட்டத்தினற் சேதனசேதனமாகிய சமஸ்தப்பிரபஞ்சமும் உண்டாகின்றன; இந்தப் பிரபஞ்சமனைத்துக்கும் தாயார் சிவசத்தி; தந்தையார் சிவம்" என்று வாதுளோத்தரமும்,

ஸ இத்தம் விரூபாக்ஷோ மந்த்ரமூர்த்திரநாமய: |
கரோதி ஸர்வதா க்ருத்யம் யதாயதாவதத்யதெ ||

"இங்ஙனம் கூறிப்போந்த மந்திரசரீரியாகிய அந்தச் சிவபிரான் தடையிறந்த வன்மையுள்ள சத்தியாகிய காரணத்தைக்கொண்டு சிருஷ்டியாதி பஞ்சகிருத்தியத்தையும் எஞ்ஞான்றும் எவ்வெக்காலத்துக்கு எது இயைகின்றதோ, அவ்வாறே செய்கின்றார்" என்று மிருகேந்திரமும்

நிமித்தமீஶ்வரஸ்தேஷாமுபாதாநம் ஸ பிந்துமாந் |
தவந்தீயி திஸ்ரூமெது ஸம்ரக்ஷணீவாநவெ |
ஸர்வேதா பரமேஶஶக்தி: காரணம் ஸஹகாரணம் ||

"அவற்றுக்கு நிமித்தகாரணர் சிவபிரான்; உபதானகாரணம் சுத்தமாயை; சூரியனிற் கிரணமும், சந்திரனிற் சந்திரிகையும், அக்கி

னியில் உஷ்ணமும் போலச் சிவபெருமானிடத்திலே இருக்கும் சமவேதையாகிய சத்தி ஸஹகாரணமாயுள்ளது'' என்று சதரத்தினசங்கிரகவியானமும் கூறுகின்றன. இங்ஙனம் பஞ்சகிருத்தியஞ் செய்வாரேனும்

ஹரவாந் ப்ரஹ்மசார்யஸ்யாஸ்ய: கந்யகா ஶக்திருச்யதே।

"சிவபிரான் (நித்தியப்) பிரமசாரி; சத்தியார் (நித்திய) கன்னிகை'' என்று வாதுளோத்தரமும் கூற, அருணந்திசிவாசாரியர் "பவன்பிரமசாரியாகும் பான்மொழி கன்னியாகுந் தவந்தருஞானத்தோர்க்கித்தன்மைதான்றெரியுமன்றே'' என்றுங் கூறியதாகக் காணப்படலான் "உலகங்களாக்குந்தொழிலது'' என்று கூறப்பட்டது.

இருக்குயசுர்சாமவேதங்களினும் பிருகதாரணியகமுதலிய உபநிஷதங்களினும் பிரதிபாதிக்கப்படும்

தத்ஸவிதுர்வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி தியோ யோ ந: ப்ரசோதயாத்।

என்னும் சந்தியாகாயத்திரி மந்திரத்தின் பொருள்

தேவஸ்ய ஸவிது: பர்க:=(எந்தச்) சிவசூரியனுடைய (ஞானேச்சாக்கிரியா சொரூப) சத்தியொளியானது,

ந: தியம் ப்ரசோதயாத்=எங்கள் ஞான இச்சாக்கிரியைகளை உஞற்றுகின்றதோ,

தத் வரேண்யம்=அந்த முக்கியப்பொருளாகிய சிவசத்தியொளியை,

தீமஹி=தியானிப்போமாயினேம் என்பதேயாம்.

தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி

—கடோபநிடதம்.

—முண்டகோபநிடதம்

—சுவேதாசுவதரோபநிடதம்

"சிவப்பிரஹ்மத்தின் ஒளியினால் எல்லாம் பிரகாசிப்பனவாயின" என்று உபநிடதங்கள் கூறியவாறு, சூரியசந்திரர் முதலியவனைத் தம் தம்மிடத்தினின்று ஒளிபெற்றுப் பிரகாசிப்பனவேயாக, தமது பிரகாசம் அவ்வாறு பிறிதொன்றை அவாவாது நித்திய சுத்த சுயம்பிரகாசமாய் நிற்றலின், சிவபிரான் "தேவ" எனப்படுவர். ஆகலின், தேவசவிதா என்றதற்குச் சிவசூரியன் எனப் பொருள்கொள்ளப்பட்டது.

"உலகின்கண்ணே துன்னிய பெரிய புறவிருளைப் பருதியங் கடவுள் கெடுத்துக் கண்ணுக்குக் காட்சிகொடுத்தாற்போல, உடம்பகத்துள்ள உயிரின் அகவிருளாகிய ஆணவமலசத்தியைக் கெடுத்து மெய்ப்பொருளைத் தெரித்தல்பற்றிச் சிவபிரான் சூரியனாகக் கூறப்பட்டார்.

எவற்றையும் பிரகாசிப்பித்தலாற் பாஸயதி ([illegible]) பா ([illegible]) என்றும், எவற்றையும் விரும்பச்செய்தலால் ரம்யதி ([illegible]) ர ([illegible]) என்றும், யாவும் தோன்றி நின்றொடுங்குதலின் யஸ்மாத் கச்சதி ஆகச்சதி ([illegible]) க ([illegible]) என்றும் பொருள்படலான், பர்க்கஸ் என்னும் சப்தம் போந்தது, பர்க்கஸ் எனினும், தேஜஸ் எனினும், ஒளி எனினும் ஒக்கும்.

சூரியனுக்கு ஒளி உளதாதல்போல, சிவத்துக்குச் சத்தி உளதாமுண்மையைப் பர்க்கஸ் என்றது உணர்த்திற்று, இதனாற் சிவசூரியன் (தேவசவிதா) என்றது பதிப்பொருளின் மேற்று; சீவான்மாக்கள் பலவாதலின் அப்பன்மையை உணர்த்த "ந:" எங்களுடைய எனக்கூறப்பட்டது. பாசத்தை ஒட்டிய நல்வினை தீவினைகளிற் சிவசத்தி ஆன்மாக்களை உளுற்றுதலின் "ப்ரசோதயாத்" என்னுஞ் சொற்கொண்டு பாசமும் பெறப்பட்டது.

ஆன்மதத்துவம் இருபத்நினான்கையும் பூ: என்றும் வித்தியாதத்துவம் ஏழையும் புவ; என்றும் சிவதத்துவம் ஐந்தையும் ஸ்வ:

என்றும் உணர்த்த மூன்று வியாகிருதிகளும் வைதிகசைவசந்தி யாகாயத்திரி மந்திரத்துக்கு முன் நிறுத்திச் சுக்கில யசுர்வேதத்து ந௨சு—ம் அத்தியாயத்து ந௨—ம் மந்திரம் கூறுகின்றது. இம்முத்திறத்தத்துவவியாகிருதிக்குமேல் உள்ளது துரிய அருண் ஞான சிதம்பரவெல்லையாதலில் ஓங்காரப்பிரணவம் நிறுத்தி உரைக்கப்படும். சிவாகமங்களிற்போல, வைதிகசைவகாயத்திரி மந்திரத்தினும் பதிபசுபாசத்துண்மை மேலே காட்டப்பட்டவாறு கண்டு தெளிக. அச்சந்தியாமந்திரத்துக்கு உபப்பிருங்கணமாகச் சிவாகமம்

> ஶிவார்க்கஶக்திதீதித்யா ஸமர்த்தீக்ருத விக்ரஹா।
> ஶிவம் ஶக்த்யாதிபிஸ்ஸார்தம் பஶ்யத்யாத்மா ஹதாவ்ருதி꞉॥

“சிவசூரியனுடைய சத்தியொளியினாற் சமர்த்தமாக்கப்பட்ட (விளக்கப்பட்ட) அறிவுக்கண்ணினாற் சத்தியோடுகூடச் சிவத்தை ஆன்மா பார்க்கின்றான்; அதனாற் பாசம் நீங்கிப்போயிற்று” என்று நிச்சுவாசகாரிகையும்,

> தமாத்மஸ்தம் யே(அ)நுபஶ்யந்தி தீராஸ்தேஷாம் ஸுகம் ஶாஶ்வதம் நேதரேஷாம்।

—கடோபநிடதம்.

—சுவேதாசுவதரோபநிடதம்.

—அதர்வசிரோபநிடதம்.

“எந்தத் திண்ணிய அறிஞர் ஆன்மாவில் இருப்பவராக (அருட்சத்தியோடு அந்தச் சிவபிரானைக்காண்கின்றார்களோ, அவர்களுக்கு நித்தியமாகிய சுகம் ; பிறர்க்கு (அஃது) இன்று” என்று உபநிடதங்கள் கூற, இவற்றிற்கு உபப்பிருங்கணமாக

> தஸ்மாத்ஸஹதயா ஶக்த்யா ஸாக்ஷிவத்பஶ்யந்தி யே ஶிவம்।
> தேஷாம் ஶாஶ்வதிகீ ஶாந்திர்நேதரேஷாமிதி ஶ்ருதி꞉॥

“ஆகலின், எவர்கள் (சிந்தையின்கண்ணே சத்தியோடுகூடச் சிவனைக் காண்கின்றார்களோ, அவர்களுக்கு நித்தியமாகிய இன்பம் பிறர்க்கு (அஃது) இன்றாம் என்று சுருதி கூறிற்று” என்று வாயு சங்கிதையும்,

[illegible]
[illegible]

“(சூரியகிரணத்தினாற் சூரியன்) கண்ணுக்குத் (தோற்றுமாறு) போல, சிவசூரியனுடைய கிரணத்தினாற் பிரகாசிக்கப்பெற்ற கண்ணையுடைய முக்தான்மாவுக்குச் சிவசம்புவானவர் சிவவொளியாகிய சத்தியினால் அறியப்படுகின்றார்” என்று சித்தாந்தரகசியமும் கூறுதலான், இருக்காதி வேதங்களிற் கூறப்பட்ட காயத்திரிமந்திரத்தினாராகிய தேவசவிதாவைச் சிவாகமம் சிவார்க்கர் என்றும் பரமேசார்க்கர் என்றும், பர்க்கஸைச் சத்தியோளி என்றும், தேஜஸைக் கிரணம் என்றும் கூறிற்று. பர்க்கஸ் என்பது ஒளியையும், சத்தியையும் ஒருங்கு உணர்த்திநிற்கும் ஓர் மொழி.

சிவம், சத்தி, ஆன்மா என்னும் மூன்றுக்கும் முறையே உவமையாய்ப் போந்தன சூரியன், கிரணம், கண் என்பனவாம். இதுபற்றியே “முன்னெழுத்துப் பானு முதல்வியெழுத் தோளியாம் பின்னெழுத்துக் கண்ணாய்ப்பிறங்குமே” என்றார் பிறரும்.

காயத்திரியிற் கண்டவாறு ஆன்மாக்களுடைய ஞானேச்சாக்கிரியைகளை உண்ணின்று உணர்த்துவது சிவனாரது அதிசூக்கும நடன ஐந்தொழிலென்று சிவாகமங்கள் கூறுகின்றன. அது

உலகமே யுருவமாக யோனிக ளுறுப்ப தாக
விலதுபே ரிச்சா ஞானக் கிரியையுட் கரண மாக
வலகிலா வுயிர்ப்பு லன்கட் கறிவினை யாக்கி யைந்து
நலமிகு தொழில்க ளோடு நாடக நடிப்ப னுதன்.

என்னும் அருணந்திசிவாசாரியசுவாமிகள் திருவாக்கினுல் உணரப்படும். இந்தக் காயத்திரிப்பொருள் தொனிக்கவே சிவஞானபோதம்,

சக்ஷுஷோ தர்ஶயிதா சாத்மா தஸ்ய தர்ஶயிதா ஶிவ:।

"கண்ணுக்கு (உருவத்தைக்) காட்டுபவனும் அக்கண்ணேடொருங்கியைந்து நின்று அதனைக் காண்பவனும் ஆன்மாவேயாம்; (அதுபோல), அவ்வான்மாவுக்கு (விடயத்தைக்) காட்டுபவனும், (அவ்வான்மாவோடு ஒருங்கியைந்து நின்று அதனைக்) காண்பவனும் சிவபிரானேயாம் என்றது.

சூரியன் ஒளியினுற் கண் ஒளியானது சூரியனை உறைத்துப் பார்க்குங்கால் எங்கும் சூரியவிம்பமே தோன்றும்; ஆகலின் ஆண்டுச் சூரியகிரணமும் கண்ணும் இலவாய்ப்போயின என்றும் சூரியவிம்பமாத்திரம் ஆண்டு உண்டென்றும் கூறல் பொருந்தாது; அதுபோல ஞாதிரு ஞான ஞேயம் என்னும் மூன்றும் பகுப்பிறவாதிறந்து நின்றன என்றே பொருள் கொள்ளப்படும்.

ஜ்ஞாநேந ஜ்ஞேயமாலோக்ய பஶ்சாஜ்ஜ்ஞாநம் பரித்யஜேத்।

"சிவனருண்ஞானத்தினுல் ஞேயப்பொருளாகிய சிவத்தை அடைந்த பின்னர்ச் சிவஞானநினைவையும் விடுக்க" என்று காரணகமும், "வீயவிட்டோட்டிவெளியேபுறப்பட்டு மெய்யருளாந் தாயுடன் சென்று பின் தாதையைக் கூடிப் பின்றுயைமறந் தேயுமதேகிட்டை யென்றுனெழிற் கச்சியே கம்பனே" என்று பட்டினத்தடிகளும்,

ஞானமுஞேயப்பொருளும்—பற்றும்
ஞாதாவுமில்லையென்பார்க்கரியாராம்
ஞானமுஞேயப்பொருளும்—பற்றும்
ஞாதாவுமாய்ப்பகுப்பார்க்குமெட்டாராம்

என்று சிவஞானசுவாமிகளும் கூறினமை காண்க. ஈண்டு காயத்திரிக்கு ஞானத்து ஞானபாதத்துச் சைவசித்தாந்தப்பொருள் கூறப்பட்டவாறு நோக்க. இந்தச் சைவசித்தாந்தப்பொருளைக் காயத்திரிமந்திரம் புலப்பட விளக்காது பர்க்கஸாகிய சிவசத்தியையே தியானித்தல்வேண்டுமென்று கூறினமை,

𑌪𑌰𑍋 𑌹𑌿 𑌯𑍋𑌗𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑍋 𑌧𑌰𑍍𑌮𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌶𑌿𑌰𑍋𑌗𑌤𑌃।

"பரதருமமானது யோகபரியந்தமே சுருதிசிரசில் (உபநிடதங்களில்) அமைந்தது" என்றும்,

[illegible]

"சிவபெருமானுக்கு ஸ்தூலவடிவம், சூக்குமவடிவம், பரவடிவம் என மூன்று வடிவங்கள் உள்ளன; (பிரம விஷ்ணு முதலிய தேவர்களாகிய) எங்களாற் காணப்படுவது (அவரது) ஸ்தூலவடிவம்; (சிவஞான) யோகிகளாற் காணப்படுவது சூக்குமவடிவம்; அவரது நித்தியமாய (அகண்டாகார) நித்தவியாபக சச்சிதானந்த பரவடிவம் (பாசுபத) விரதமுடைய (சிவஞான) நிஷ்ட அன்பர்களாற் காணற்பாலது" என்றும்

[illegible]

"வைதிக சிவாகமங்களிற் கூறப்பட்ட பரதருமமானது சரியை கிரியை யோகம் ஞானம் என நான்கு வகைப்படும்; இந்நான்கு பாதங்களுள்ளே சிவயோகம் சிவத்தை உறுதியாய்ப் பிரத்தியக்ஷமாக்கும்" என்றும் வாயுசங்கிதை உரைத்தலானுமாம்.

காயத்திரிமந்திரமானது தனது தேவசவிதாவாகிய ஞேயப் பொருள் விஷயத்தைச் சிவஞானபோதமானது ("சிவஞானபோதவசனாலங்காரதீப" த்து கக-ம் சூத்திரத்து க௦க-ம் பிரிவிற்கண்டவாறு) வேதசாரமாகிய ஞானத்து ஞானபாதத் துற்றார்க்குப் பொருள்செய்வதாக இடங்கொடுத்தும், தியானயோகங்கூறும் மற்றைய உபநிடதமுடிவுகளுக்கிசையப் பர்க்கலாகிய சிவசத்தியைத் தியானிக்குமாறும் விதித்தது. தியானிக்குமாறு எங்ஙனமெனின், அச்சிவசத்தி சிவனார் திருவடியாம் என்று மேலே நிரூபிக்கப்பட்டதன்றோ.

𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑌰𑌮𑌂𑌪𑌦𑌂 𑌸𑌦𑌾 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌸𑍂𑌰𑌯𑌃।

"அந்தச் சிவனாது பரமாகாசமாகிய திருவடியைப் பெரியோர் எக்காலமும் பார்க்கின்றார்" என்று இருக்குவேதம் கூறிற்று. ஈண்டு விஷ்ணுசப்தம் சிவபிரான் மேலதென்றும், இது அத்துவாவின் அரைக்கண்ணதென்றும் "வைதிகசுத்தாத்துவித சைவசித்தாந்த தத்துவப்படவிளைவிடை" யின் கஎ-ம் பக்கத்திற் காட்டியிருக்கின்றேம். இத்திருவடி சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவமென்னும் இரு திருவடிகளாகக் கூறப்படுகின்றதென்றும், இத்திருவடிகளின் பகுதியவாயுள்ளன சர்வஞ்ஞதை, திருப்தி, அநாதிபோதம், அலுப்தசக்தி, அனந்தசக்தி, சுவதந்திரத்துவம், விசுத்ததேகம், நிராமயாத்துமா என்னும் எண் குணங்களாமென்றும் மேலே கூறப்பட்டது.

𑌤𑌦𑌾 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 𑌪𑍁𑌣𑍍𑌯𑌪𑌾𑌪𑍇 𑌵𑌿𑌧𑍂𑌯 𑌨𑌿𑌰𑌂𑌜𑌨𑌃 𑌪𑌰𑌮𑌂𑌸𑌾𑌮𑍍𑌯𑌮𑍁𑌪𑍈𑌤𑌿

"அப்போது அறிஞன் புண்ணியபாவங்களை உதறிச் சர்வஞ்ஞதாதி (எண் குணங்களைச்) பரம சாமியமாக அடைகின்றான்" என்று முண்டகோபநிடதம் கூறுகின்றது. சர்வஞ்ஞதாதி எண் குணங்க

ளும் தன்மாட்டுவிளங்குமாறு (நீலகண்ட சைவபாஷ்யத்து ரு. உ. உச-ஞ் சூத்திரபாஷ்யத்தினும், ச. க. ரு-ஞ் சூத்திரபாஷ்யத்தினும் கூறப்பட்டவாறு) பரமாஹம்பாவனையாகிய சிவோஹம்பாவனை செய்யவேண்டும் என்க. ஒளிரூபமாகிய சிவசத்தியாம் பர்க்கசுடைய ஸ்தானம் (நீலகண்ட சைவபாஷ்யத்து உபநிடத உபக்கிரமணிகையின் ருஉ-ம் பக்க முதலியவற்றிற் காணப்படும் இருக்குவேதம், சுவேதாசுவதரோபநிடதம், தைத்திரீயோபநிடதம், கடோபநிடதம், பிருகதாரணியோபநிடதம், சாந்தோக்கியோபநிடதம், கைவல்லியோபநிடதம், தைத்திரிய ஆரணியகம் எனப்படும் மகாநாராயணோபநிடதம், பிரசினோபநிடதம், முண்டகோபநிடதம், அதர்வசிகோபநிடதம் என்பவைகளாற் பிரதிபாதிக்கப்பட்ட திருச்சிற்றம்பலத்தில்லை எல்லையேயாம். இது ஞானயோகஸ்தானமென்பது "உறைந்திடுந்தில்லை ஞானயோகமார்தானமாமாற், செறிந்தடி காணச் சிவன்முத்தராய்த் திரிபலாமே" என்னும் கோயிற்புராணச்செய்யுட்பாகத்தாற் றுணியப்படும்.

"சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாந் திருப்பெருந்துறையுறை சிவன்" எனவும், "பந்தமும் பிரிவுந் தெரிபொருட்பனுவற் படிவழி சென்று சென்றேறிச், சிந்தையுந்தானுங்கலந்ததோர் கலவி தெரியினுந் தெரிவுறாவண்ணம் வந்தணுகாது நுணுகியுள்கலந்தோன்" எனவும், "சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாய், மென்றிறையியற்கையியம்புதறகும்" எனவும், "துரியப்பரியிலிருந்தவச்சிவனைப்பெரிய வியாக்கிரத்துள்ளே புகவிட்டு" எனவும் கூறப்பட்டவாறு, "சிவஞானபோத" த்து கூ, கo-ஞ் சூத்திரங்களில் ஓதப்பட்டவாறே, "திருவைந்தெழுத்தி னுய்த்துணர்ந்து ஏகனாகி நிற்கும் ஸ்தானமும் அந்தச் சிவபிரானது திருவருளிரக்கத்தின் துரிய எல்லையாகிய சிதம்பர பர்க்கஸ் ஒளியேயாம். இந்தச் சிவசத்தியானது ஞேயபப்

பொருளாகிய, சிவத்தைக் காணுதற்குவாய்ந்தது என்பது தோன்ற "நாடினர்தாம் வியந்தருவீடெய்தவிடொன்றிலாதது காழிப்பிரானொளியாகிய காரணம்" என்றும் கூறப்பட்டது.

[illegible]
[illegible]
[illegible]

"பதியாகிய சிவபிரானுக்கு அதிஷ்டானமாயுள்ளது அவர் சத்தியாகிய ஒளியாம்; அந்த ஆகாசசத்தியில் நிச்சலராகிய சிவபிரான் நிஷ்கம்பராய் நன்குவிளங்குவாராயினர்; அந்தச் சத்தியே எல்லையாயும், பரையாயும், சூக்குமமாயும், நிக்கெங்கும் செறிந்ததாயும், அமிர்தமாயுமுள்ளார்" என்று மதங்காகமமும்,

[illegible]
[illegible]

"ஏகராகிய, சிவபிரானுக்கு யாதொரு சிவசம்பந்தமாய் நிர்மலமாகிய பராசத்தி உண்டோ, அந்தச் சத்தி சம்புவாகிய பிரபுவுக்கு அக்கினிக்கு உஷ்ணம்போல வேறுபடாததாயுள்ளது" என்று நிச்சுவாசகாரிகையும் கூறுகின்றன.

தத்துவப்பிரகாசம்

[illegible]
[illegible]

(இ-ள்) சிவசத்தி உதிப்பதுமில்லை, அஸ்தமிப்பதுமில்லை, சலிப்பதுமில்லை, நிவிர்த்தியை அடைவதுமில்லை, ஞானக்கிரியாசொரூபமாயுள்ள சிவனுக்குரிய ஒளியானது உற்கிருஷ்டமாய் ஓங்குகின்றது.

இருவுமதி

(எ) காரண ணுகிய காழிப் பிரான்கக ஞதியிந்தப்
பாரள வாகப் பரக்கும் புவஞதி கள்படைப்பச்
பேரள வாகுந் தோழிலிற் பிறழாக் கருவியதாய்ச்
சீரள வாமைநின் ருள்செய்ய தாளென் சிரத்தனவே.

(இ-ள்) காரணஞகிய காழிப்பிரான் — பிரபஞ்சத்துக்கு நிமித்தகாரணராகிய சீகாழிச் சிவபிரான்; ககஞதியிந்தப் பாரள வாகப் பரக்கும் புவஞதிகள் படைப்ப — சாந்தியதீதகலைமுதல் இந்த நிவிர்த்திகலை இறுதியாயுள்ள, ஐங்கலைகளினும் விரிந்துள்ள அநாசிருதபுவனமுதற் காலாக்கினிருத்திரபுவனமிறுதியாகிய இருநூற்றிருபத்துநான்கு புவனங்களையும் சிருஷ்டித்தற்கு; பேரளவாகும் தொழிலிற் பிரழாக்கருவியதாய் — அளவுபடாப்பெருமையையே தமக்கு அளவாகக்கொண்டு பஞ்சகிருத்தியஞ் செய்தற்கண்ணே பிறழாத் துணைக்காரணமாகி; சீரளவாமை நின்ருள் செய்ய தாள் என் சிரத்தன — தன் ஞானப்பெருமையை அறிதற்கரிதாகிநின்ற பராசத்தியாரின் சிவந்த திருவடிகள் என் தலையின்மேலனவாம் எ-று.

[illegible]
[illegible]
[illegible]

"பிரமாண்டத்தை நிவிர்த்திகலை என்றும், அப்புமுதற் பிரகிருதி இறுதியாயுள்ளன பிரதிஷ்டாகலை என்றும், இராகதத்துவமுதல் மாயாதத்துவம் இறுதியாகிய வித்தியாதத்துவம் ஏழும் வித்தியாகலை என்றும், சுத்தவித்தைமுதற் சாதாக்கிய தத்துவம் இறுதியாயுள்ள மூன்றும் சாந்திகலை என்றும், சத்திதத்துவமும் அதன்

முடிவிலுள்ள சிவதத்துவமும் சாந்தியதீதகலை என்னும், இந்தப் பார் எனப்படும் நிவிர்த்திகலைமுதற் ககனம் எனப்படும் சாந்திய தீதகலை இறுதியாயுள்ள ஐந்து தத்துவகலைகளிலும் முப்பத்தாறு தத்துவங்களும் நிலையுற்றன.

(க) சாந்தியதீதகலையின் பாலதாகிய

(க) சிவதத்துவத்தில் அநாசிருதை, அநாதை, அனந்தை, வியோமரூபிணி, வியாபினி, ஊர்த்துவகை, மோசிகை, ரோசிகை, தீபிகை, இந்திகை என்னும் பத்தும்,

(உ) சத்திதத்துவத்திற் சாந்தியதீதை, சாந்தி, வித்தை, பிரதிஷ்டை, நிவிர்த்தி என்னும் ஐந்துமாகப் புவனங்கள் பதினைந்து உள்ளன.

(உ) சாந்திகலையின் பாலதாகிய

(க) சாதாக்கியதத்துவத்திற் சதாசிவம் என ஒன்றும்,

(உ) ஈசுரதத்துவத்திற் சிகண்டி, ஸ்ரீகண்ட, திரிமூர்த்தி, ஏகருத்திர, ஏகநேத்திர, சிவோத்தம, சூட்சும, அனந்த என்னும் எட்டும்,

(ங) சுத்தவித்தியாதத்துவத்தில் மனோன்மனி, சர்வபூததமனி, பலப்பிரமதனி, பலவிகரணி, கலவிகரணி, காளி, இரௌத்திரி ஜ்யேஷ்டை, வாமை என்னும் ஒன்பதுமாகப் புவனங்கள் பதினெட்டுஉள்ளன.

(ங) வித்தியாகலையின் பாலதாகிய

(க) மாயாதத்துவத்தில் அங்குஷ்டமாத்திர, ஈசான, ஏகேக்ஷண, ஏகபிங்கள, உத்பவ, பவ, வாமதேவ, மகாதியுதி என்னும் எட்டும்,

(உ) காலதத்துவத்திற் சிகேத, ஏகவீர என்னும் இரண்டும்,

(ங) கலாதத்துவத்திற் பஞ்சாந்தக, சூரக என்னும் இரண்டும்

(ச) வித்தியாதத்துவத்திற் பிங்க, நியோதி என்னும் இரண்டும்,

(ரு) நியதிதத்துவத்திற் சம்வர்த்த; குரோத என்னும் இரண்டும்,

(சா) இராகதத்துவத்தில் ஏகசிவ, அனந்த, அஜ, உமாபதி, பிரசண்ட என்னும் ஐந்தும்,

(எ) புருஷதத்துவத்தில் ஏகவீர, ஈசான, பவேச, உக்கிர, பீமேச, வாம என்னும் ஆறுமாக இருபத்தேழு புவனங்கள் உள்ளன.

(ங) பிரதிஷ்டாகலையின் பாலதாகிய

(க) பிரகிருதிதத்துவத்தில் ஸ்ரீகண்ட, ஔம, கௌமார, வைஷ்ணவ, பிராஹ்ம, பைரவ, கிருத, அகிர்த என்னும் எட்டும்,

(உ) புத்திதத்துவத்திற் பிராஹ்ம, பிராஜேசச, சௌமிய, ஐந்திரக, காந்தருவ, யாக்ஷ, ராக்ஷச, பைசாச என்னும் எட்டும்,

(ங) அகங்காரதத்துவத்திற் சிலேசுவர என்னும் ஒன்றும்,

(ச) மனாதி கிராணபரியந்தமுள்ள ஆறு தத்துவங்களினும் ஸ்துலேசுவர என்னும் ஒன்றும்,

(ரு) கர்மேந்திரியத்திற் சங்குகர்ண என ஒன்றும்,

(சா) சப்தாதியிற் காலஞ்சர, மண்டலேசுவர, மாகோட, துவிரண்ட, சகலண்ட என்னும் ஐந்தும,

(எ) ஆகாயதத்துவத்தில் ஸ்தாணு, சுவர்ணாக்ஷ, பத்திரகர்ண, கோகர்ண, மகாலய, அவிமுக்த, உருத்திரகோடி, வஸ்திராபதக என்னும் எட்டும்,

(அ) வாயுதத்துவத்திற் பீமேசுவர, மகேந்திர, அட்டகாச, விமலேச, நகல, நாகல, குருக்ஷேத்திர, கயா என்னும் எட்டும்,

(௯) தேயுதத்துவத்திற் பைரவ, கேதார, மகாகாளா, மத்திய மேச, ஆம்ராதக, ஜல்ப்பேச, ஸ்ரீசைல, ஹரிச்சந்திர என்னும் எட்டும்,

(௰) அப்புதத்துவத்தில் லகுளீச, பாரபூதி, ஷண்டிமுண்டி, ஆஷாடி, புஷ்கர, நைமிசி, பிரபாச, அமரேச என்னும் எட்டுமாகப் புவனங்கள் ஐம்பத்தாறு உள்ளன.

(௫) நிவிர்த்திகலையின்பாலதாகிய பிருதிவிதத்துவத்தில்

(௧) அண்டகடாகத்துக்கு மேலே உள்ள திரிலோசனர்க்கு மேல் வீரபத்திர, பத்திரகாளி என்னும் இரண்டும்,

(௨) அண்டகடாக ஒட்டுக்கு மேலே திரிலோசன, விப்சு, நப, விவாக, சம்வாஹ, திரிதசேச, திரியக்ஷ, கணத்தியக்ஷ, விபு, சம்பு என்னும் பத்தும்,

(௩) அண்ட கடாகத்துக்குக் கீழே தம்ஷ்டிரி, வஜ்ரக, பணீந்திர, உதும்பரீச, கிரசன, மாருதாசன, குரோதன, அனந்த, விருஷாதார, விருஷ என்னும் பத்தும்,

வடகிழக்கிலே (ஈசானதிசையிலே) பலப்பிரிய, பூதபால, ஜ்யேஷ்ட, சர்வ, சுரேச, வேதபாரக, ஞானபுக், சாவஞ்ஞ, ஈச, வித்தியாதிப என்னும் பத்தும்,

வடக்கிலே (குபேரதிசையிலே) பிரகாமத, பிரசாதக, ஸ்ரீதிருக், ரத்தினதிருக், லட்சுமீதிருக், ஜடாதர, சௌம்யதேக, தந்ய, ரூபவான், நிதீச என்னும் பத்தும்,

வடமேற்கிலே (வாயுதிசையிலே) மேகவாகன, கபர்த்தி, பஞ்சசிக, பஞ்சாந்தக, க்ஷயாந்தக, தீக்ஷண, சூட்சும, வாயுவேக, லகு, சீக்கிர என்னும் பத்தும்,

மேற்கிலே (வருண திசையிலே) சுநாத, மேகநாத, ஜலாந்தக தீர்க்கபாகு, ஜயபத்திர, சுவேத, மகாபல, பாசஹஸ்த, அதிபல, பல என்னும் பத்தும்,

தென்மேற்கிலே (நிருதி திசையிலே) தம்ஷ்டிரா, லோகித, தாம்ரக, விரூபாக்ஷ, ஊர்த்துவகேசப, பயாநக, குரூரதிருஷ்டி, ஹந்தா, மாரண, நிருதி என்னும் பத்தும்,

தெற்கிலே (யமதிசையிலே) தருமபதி, அதர்மபதி, வியோக்தா, சம்யோக்திரு. கர்த்திரு, விதாதா, தாதா, ஹர, மிருத்யு, யாம்ய என்னும் பத்தும்,

தென் கிழக்கிலே (அக்கினிதிசையிலே) க்ஷபாந்தக, பஸ்மாந்தக, பப்ரு, தகந, ஜ்வலந, காதக, ஹர, பிங்கல, குதாசன, அக்கினிருத்திர என்னும் பத்தும்,

கிழக்கிலே (இந்திர திசையிலே) திரிதசாதிப, பிநாகி, சாஸ்தா, அவ்யய, விபூதி, பிரமர்த்தன, வஜ்ரதேக, புத்த, அஜ, கபாலீச என்னும் பத்தும்,

அடியண்ட கடாகத்திலே ரௌத்திர, வைஷ்ணவ, பிராஹ்ம, ஹாடக, கூஷ்மாண்ட, காலாக்கினிருத்திர என்னும் ஆறுமாக நூற்றெட்டுப்புவனங்கள் உள்ளன.

இந்த ஐந்து கலைகளினும் புவனங்கள் இருநூற்றிருபத்தி நான்காமாறு தெளியப்படும்.

ஆதி என்றமையாற் புவனங்கள் மாத்திரமன்றித் தத்துவங்களும், கலைகளும், வர்னங்களும், பதங்களும், மந்திரங்களும் பெறப்பட்டன.

கரோதி ஸம்ஸ்ருதிம் பும்ஸா மாஜ்ஞயா சமவேதயா।

"(தம்மை) விட்டு நீங்காத (சமவேதமர்கிய) ஆணையினுல் (சிற்சத்தியினுல்) ஆன்மாக்களுக்குச் சிருஷ்டி முதலிய பஞ்சகிருத்தியங்களைச் செய்கின்றுர்" என்று **சிவஞானபோதம்** கூறுகின்றமையின், சிவபெருமானது சங்கற்ப ரூபமாகிய சத்திகரணமானது "பேரளவாகுந் தொழிலிற் பிறழாக்கருவி" எனக் கூறப்பட்டது.

---

## காரணத்திரயம்

(அ) *தனதுயர் தத்துவந் தான்பரஞ் சத்தி கருவியிப்பால்*
*வினைதரு வையம் பிறந்தும் விரிந்து மொடுங்குமிந்தச்*
*சினமலி தத்துவந் தன்னிற் சிரபுர நாதனுமக்*
*கனமலி பூண்முலை யுங்கருத் தாவுங் கருவியுமே.*

(இ-ள்) உயர் தனது தத்துவம் தான் பரம் சத்தி கருவி - (எத்தத்துவங்களினும்) உயர்ந்த சிவதத்துவம் ஐந்தினும் சிவபெருமானுகிய தாமே (சிருஷ்டியாதி கிருத்தியஞ்செய்யும் நிமித்தகாரணராகிய) பரமாவர், அவர்க்குத் (துணைக்) கருவியாயுள்ளார் சத்தியார்; (இந்தச் சிவபெருமானது ஆஞ்ஞாசத்தியை வகித்த அனந்தேசுவரநாயனுரால் அச்சிவதத்துவம் ஐந்தையும் அடக்கிய சுத்தமாயைக்கு) இப்பால் சினமலி தத்துவம் தன்னில் வினைதரு வையம் பிறந்தும் விரிந்தும் ஒடுங்கும்-அதோபாகத்திலுள்ள முதற்காரணமாகிய கோரரூபமாயுள்ள அசுத்தமாயையினின்றும் கன்மாநுசாரமாகச் சரீராதிகளைப் பிறப்பிக்கும் காலதத்துவமுதற் பிருதிவி தத்துவமீருகிய தத்துவங்களும் தோன்றி விரிந்துநின்று ஒடுங்கும்; சிரபுரநாதனும் அக்கனமலி பூண்முலையும் கர்த்தாவும் கருவியும் - (ஆகலின்) சீகாழிச் சிவபெருமானும் அப்பெருமை வாய்ந்த ஆபரணமணிந்த சிவசத்தியாகிய இருவருமே முறையே நிமித்தகாரணரும் துணைக்காரணமுமாயுள்ளார் எ-று.

*சுத்தேத்வநி சிவ: கர்த்தா ப்ரோக்தோநந்தோசிதே ப்ரபு:।*
*யதா பூமண்டலேசேந நியுக்த: ஸ்வசமப்ரபு:।*
*ததாசௌ குருதே சர்வம் தச்சக்திப்ரதிபோதித:॥*

"(சுத்தவித்தைமுதற் சிவதத்துவம் ஈருகிய ஐந்து தத்துவங்கள் அடங்கிய) சுத்தாத்துவாவிலே சிவபெருமான் (சிருஷ்டியாதி கிருத்திய) கர்த்தா; (சுத்தமாயைக்கு இப்பாலுள்ள) அசுத்தமாயையிலே அனந்தேசுவரர் (சிருஷ்டியாதி கிருத்திய) கர்த்தாவாயுள்ளார்; பூமண்டலாதிபதியாகிய அரசனால் தனக்குச் சமானமாகிய பிரபுவானவன் நியோகிக்கப்பட்டாற்போல, அந்தச் சிவபெருமானது சத்தியினாலே உணர்த்தப்பட்ட இந்த அனந்தேசுவரர் (அனைத்தையுஞ்) செய்கின்றார்" என்று கிரணாகமம் கூறுகின்றது.

---

## தத்துவப்பிரகாசம்

மாயாபி நாத்ரோபாதாநம் மோஹகத்வாத் ஸ்வதேஜஸா1

"இவற்றிற் (சுத்தாத்துவகாரியங்களில்) அசுத்தமாயை உபாதானகாரணமன்று; (இந்த அசுத்தமாயை) தன் தேஜசினால் (எவரையும்) மோகிப்பித்தலின்."

---

## சிவனுஞ் சத்தியாரும் பந்தமோக்ஷகாரணர்.

(௧) *கருமல பாசம சேதனங் கட்டுண்பர் சேதனரென்
றிருமையில் வைய மடங்குமென் றெண்ணு கவித்துணையே
திருமலி யாகமஞ் செப்பிய வான்பொருள் முற்சிறந்த
விருவரு மேகட்டு வார்விடு வாருமென் றெய்துமினே.

(இ-ள்) கருமல பாசம் அசேதனம்-கரிய மலமாகிய பாசம் ஜடம்; சேதனர் கட்டுண்பர்-பசுக்கள் பாசத்தினாற் கட்டுண்பர்; என்று இருமையில் வையம் அடங்கும் என்று எண்ணுக-(அசேதனம் சேதனர்) என்று கூறும் இரண்டினுள்ளே பிரபஞ்சம் அடங்கும் என்று உணர்க; முற்சிறந்த இருவருமே கட்டுவார் விடுவாருமென்று எய்துமின்-(பசு பாசம் என்னும் இரண்டுக்கும்) முற்பட்டு ஓங்கிய சிவபெருமான் சத்தியார் என்னும் இருவருமே பசுக்களை மாயேய

---

* இச்செய்யுள் சிவப்பிரகாசத்துக்கு மதுரைச் சிவப்பிரகாசர் எழுதிய பொது ௬௩ செய்யுளுரையினும், உண்மை ௧௬-ம் செய்யுளுரையினும் உதகரிக்கப்பட்டுள்ளது.

மலமாகிய பாசத்திநற் பிணிப்பவரும், அப்பசுக்களைப் பாசத்தி னின்று நீக்கி அருளுபவருமாவர் என்று ஓர்க; இத்துணையே திருமலி ஆகமம் செப்பிய வான்பொருள் - (பதி பசு பாசம் என்னும்) இவ்வளவே அருள்வளம் நிறைந்த சிவாகமங்கள் கூறிய பெரிய முப்பொருள்களுமாம் எ-று.

> வித்யேதி சேதநாம் ப்ராஹு ஸ்ததாவித்யாமசேதநாம்।
> வித்யா வித்யாத்மகஞ்சைவ விச்வம் விச்வகுரோர் விபோ:॥

"சேதனத்தைப் (பசுவை) வித்தை என்றும், அசேனத்தைப் (பாசத்தை) அவித்தை என்றும் கூறுப; வியாபகராய் விசுவகுருவாயுள்ள சிவனாது பிரபஞ்சம் சேதன, அசேதன இயற்கையது" என்று வாயுசங்கிதை கூறுமாற்றாற் பாசம் அசேதனம் என்றும், பசுக்கள் சேதனர் என்றும் கூறப்பட்டது.

> அநாதிமல சம்பந்தாத் கிஞ்சிஜ்ஞோணுர் மயோதித:।
> அநாதிமல முக்தத்வாத் சர்வஜ்ஞோசௌ தத:சிவ:।
> விசுத்தம் ஸ்படிகம் கஸ்மாத் தஸ்மாத் தாம்ரம் சகாலிகம்।
> யதாதத்ர நிமித்தம் நோ ததாநைவ சிவாத்மநோ:॥

"அநாதிமல சம்பந்தத்தினால் அணுவாகிய பசு கிஞ்சிஞ்ஞனாயினன் எனவும், அநாதிமலத்தினின்றும் நீங்கினமையிற் சிவபிரான் சர்வஞ்ஞராயுள்ளார் எனவும் என்றாற் கூறப்பட்டது; யாதொரு காரணமுமின்றி ஸ்படிகமானது தூய்மையாயும் செம்பானது களிம்புடையதாயும் இருக்கின்றனவோ, அங்ஙனமே (அநாதிமலமுக்ததுவம்) சிவபிரானுக்கும், (அநாதிமலபத்ததுவம்) பசுவுக்கும் (இயல்பாய்) உள்ளன" என்றும்,

> முக்த்யர்த்தம் சபசுர்பத்தோ நாந்யதா சோஸ்ய ஜாயதே।
> யாவச் சரீரசம்ஸ்லேஷோ ந ஸம்ஜாதோ ந போகபுக்।
> மாயேயம் தத்வபுஸ்தஸ்ய ததபாவாந் ந முக்திபாக்।
> தேந தேந ஸ்வதந்த்ரத்வாந் மலிநோ மலிநீக்ருத:।
> யதா வஸ்த்ரம் ஸதோஷத்வாந் மலாதஸ் தம் விசுத்யதி॥

"மோக்ஷத்தின் பொருட்டே அப்பசு கட்டப்படுகின்றான்; மற்றொன்றினால் அவனுக்கு முக்தி உண்டாகாது; சரீரசம்பந்தம் எதுவரையுமில்லையோ, அதுவரையும் போகம் புசிக்க இயலான்; அந்தச் சரீரம் மாயேயம்; அந்தச் சரீரமின்றி முக்தி எய்தான்;

அந்த மலத்தோடு கூடிய அந்த மாயேயத்தினாற் பரதந்திரனைமையால் மலினனாகிய பசு மலினமாக்கப்பட்டான் (அழுக்கினோடு பின்னரும் அழுக்காக்கப்பட்டான் என்பது); எங்ஙனம் அழுக்குள்ள வஸ்திரம் அழுக்கானமைபற்றி அழுக்காக்கப்பட்டுத் தூய்மை அடைகின்றதோ, அங்ஙனம் பசுவுமாம்" என்றும் **கிரணாகமம்** கூறுகின்றது.

---

## பதி பசு பாசம்

---

(௪0) எய்தும் பொருளொரு மூன்று பதிபசு பாசமென்றே
மெய்தந்த வாகமங் கூறு மவற்றினுள் வெங்குருவாழ்
மைதங்கு கண்டன் பதிபசு வென்ப தணுக்கண்மற்றுக்
கைதந்த பாசங்க ளாணவ மாயையுங் கன்மமுமே.

(இ-ள்) எய்தும் ஒருபொருள் பதி பசு பாசம் மூன்று என்று மெய் தந்த ஆகமம் கூறும் - அநாதியாய் எய்திய ஒப்பில்லாத பொருள்கள் பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களாம் என்று மெய்ப்பொருள் பொதிந்த சிவாகமங்கள் கூறுவனவாம்; அவற்றினுள் வெங்குருவாழ் மைதங்கு கண்டன் பதி - அம்முப்பொருள்களுள்ளே சீகாழிப்பதியில் எழுந்தருளிய கரிய கண்டத்தினராகிய சிவபெருமானே பதியாவர்; பசு என்பது அணுக்கள் - பசு எனப் படுவது ஆன்மாக்களாம்; கைதந்த பாசங்கள் ஆணவம் மாயையும் கன்மமுமே - (பிறவியிற் செலுத்திச்) சிறுமையுறுத்தும் பாசங்களாவன ஆணவமும் மாயையும் கன்மமுமாம் எ-று.

> பதி: பசுச்ச பாசச்ச பதார்த்தாஸ்த்ரிவிதோ மதா:।
> பதிஸ்தத்ர சிவ: ப்ரோக்தோ நிஷ்களோ நிர்மல: ச்ருத:।
> ஆத்மானோ வ்யாபினோ நந்தா : சித்ரூபா: பசவஸ்திரிதா।
> மாயாகர்மமலச்சந்நஸ் ஸகலஸ்ஸோபிதீயதே॥

"பதிபசுபாசங்கள் எனப் பதார்த்தங்கள் மூவகைப்படும்; பதியாவார் நிஷ்களரும் நிர்மலருமாகிய சிவன் என்று கூறப்படுகின்றார்; ஆன்மாக்கள் வியாபகமாய் எண்ணில்லாதனவாய் அறிவுருபங்களாயுள்ளன; அவை மூவகைப்படும்; மலம் மாயை கன்மங்களோடு கூடினவர் சகலர் எனப்படுவர்" என்று **சித்தாந்தவிவேகமும்**,

மலமாயா ச கர்மாக்யம் பசூநாம் பந்த உச்யதே ।

"மலம் மாயை கர்மம் என்பன பசுக்களின் பந்தம் எனப்படும்" என்று இரௌரவாகமமும் கூறுமாற்றால் பதிபசுபாசமென்னும் முப்பொருள்களைப் பிரதிபாதிப்பன சிவாகமங்கள் என்றும், பதியாவார் சிவபெருமான் என்றும், பசுக்கள் பல என்றும், பாசங்கள் ஆணவம் மாயை கன்மம் என்றும் உணர்க.

---

## தத்துவப்பிரகாசம்

---

சைவாகமேஷு முக்யம் பதிபசுபாசா இதி க்ரமாத் த்ரிதயம்

"கிரமமாகப் பதி பசு பாசம் என்னும் மூன்றும் சைவாகமங்களில் முக்கியமாகக் (கூறப்படுகின்றன.)"

---

## பஞ்சகிருத்தியம்

---

(கக) கன்மனந் தன்னைக் கனிவிக்குங் காழிப் பிரான்கருணைப்
பன்மைப் படுந்தொழி லைந்து படைப்பு நிலைதொகுத்த
லின்மை நிகழ்ந்த வொளிப்புத் துயர்நின் றெடுத்தலென்ப
வன்மைப் படாநிலை மைபெரி யோனுக் கமைந்தனவே.

(இ-ள்) கன்மனந்தன்னைக் கனிவிக்கும் காழிப்பிரான் - கற்போலும் காடின்னியமாகிய மனதை உருக்கிக் கனிவிக்கும் சீகாழிப் பெருமான்; கருணைப் பன்மைப் படுந்தொழில் ஐந்து-காருண்ணிய சத்தியினாற் பன்மைப் படச்செய்யும் கிருத்தியங்கள் ஐந்தாம்; படைப்பு நிலை தொகுத்தலின்மை நிகழ்ந்த ஒளிப்பு துயர் நின்றெடுத்தல் என்ப - அவை சிருஷ்டியும் ஸ்திதியும் சங்காரமும் திரோபவமும் அநுக்கிரகமுமாம் என்பர்; அன்மைப்படா நிலைமை பெரியோனுக்கு அமைந்தன - நித்தியமாகிய பஞ்சகிருத்திய நிலைமை அப்பெரியோர்க்கு அமைந்தனவாம் எ-று.

யதோவா இமாநி பூதாநி ஜாயந்தே யேந ஜாதாநி ஜீவந்தி யத்ப்ரயந்த்யபிஸம்விசந்தி தத்விஜிஜ்ஞாஸஸ்வ தத்ப்ரஹ்ம ।

"எதிலிருந்து இந்தச் (சேதனு சேதனப்) பிரபஞ்சங்கள் பிறக்கின்றனவோ, எதனுற் பிறந்தவை ஜீவிக்கின்றனவோ, (இறுதியில்) எதனைப்போயடைகின்றனவோ, அதனை அறிக; அது பிரஹ்மம்" எனச் சிருஷ்டி ஸ்திதி சங்காரங்களைத் **தைத்திரீயோபநிடதம்** கூறுகின்றது.

---

## தத்துவப்பிரகாசம்

பஞ்சவிதம் தத்க்ருத்யம் ஸ்ருஷ்டி ஸ்திதிஸம்ஹ்ருதிதிரோபாவா:।
தத்வதநுக்ரஹகாரணம் ப்ரோக்தம் ஸததோதிதஸ்யாஸ்ய॥

"சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகமாகிய ஐந்துவித கிருத்தியங்களும் எஞ்ஞான்றும் அவர்க்கு இயைந்தனவாம்."

பதியியல் முற்றிற்று.

## பசுவியல்

(கஉ) அமையா நிலைமை யணுக்களோர் மூன்று வகையவைதாங்
கமையா னிறைந்தவிஞ் ஞான கலர்ப்பிரள யாகலர்மற்
றிமையா ரிமைப்ப வராகுஞ் சகல ரிவரின் முன்னோர்
தமையா ரெனின்மல மேயவை சேடித்த தன்மையரே.

(இ-ள்) அமையா நிலைமை அணுக்களோர் மூன்று வகை - கணிக்கப்படாத நிலைமையினையுடைய பசுக்கள் முத்திறப்படும்; அவை தாம் கமையானிறைந்த விஞ்ஞானகலர் பிரளயாகலர் இமையா ரிமைப்பவராகுஞ் சகலர் - அந்தப் பசுக்கள் பொறையானிறைந்த விஞ்ஞானகலரும் பிரளயாகலரும் தேவர் மனிதராகிய சகலருமாம்; இவரின் முன்னோர்தமை யாரெனின் மலமேயவை சேடித்த தன்மையர் - (சகலர் பிரளயாகலர் என்னும்) இவர்க்கு முற்பட்ட விஞ்ஞானகலரை யாரென்று ஆராயின், அவர் ஆணவமலமொன்றுமே (உடையராய், முற்செனனத்திற் பிரளயாகலராயிருந்து மாயை கன்மம் என்னும்) அவை இரண்டையும் நீக்கிய பெற்றியராம் எ-று.

ய ஈசேஸ்ய த்பவிதஸ் சதுஷ்பத:।

"எவர் இருகாலும் நாற்காலுமுடைய பசுக்களை ஆளுகின்றாரோ" என்று இருக்குவேதமும் (௧௦. ௧௨௧. ௩),

யேஷாமீசே பசுபதி: பசூநாம் சதுஷ்பதா முதச த்விபதாம்।

"நாற்காலும் இருகாலுமுடைய பசுக்களைப் பசுக்களுக்குப் பதியாயுள்ளார் (சிவபெருமான்) ஆளுகின்றார்" என்று தைத்திரீய யசுர்வேதமும் (௩. ௧. ௪),

பசவஸ்து சதுஷ்பாதா த்விபாதாச்சேதி சுசுரும:।

"பசுக்கள் நாற்காலும் இருகாலுமுடைய எனக் கேள்வியுறுகின்றேம்" என்று காமிகாகமமும் கூறுகின்றன.

---

## தத்துவப்பிரகாசம்

பசவஸ்திரிவிதா ஜ்ஞேயா விஜ்ஞாநப்ரளயகேவலௌ ஸகல:।

"பசுக்கள் விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என மூத்திறப்படுவர்."

---

## மூத்திற ஆன்மாக்களின் இலக்ஷணம்

(௧௩) தன்மை யொழிக்குமப் பாசமுங் கன்மமுஞ் சார்ந்துமற்றைப்
பின்னொரு பாச மிலார்பிரள யாகலர் பேசியவக்
கன்மமு மாயையு மாணவ முங்கலந் தார்சகல
ரென்னு மிவரின்முன் னோரிரு பான்மைய ரென்றறியே.

(இ - ள்) தன்மை ஒழிக்கும் அப்பாசமும் கன்மமுஞ் சார்ந்து பின்னொரு பாசமிலார் பிரளயாகலர் - ஆன்மாவின் இச்சாஞானக் கிரியையினியல்பை ஒழிக்கும் அவ்வாணவமலமும் கன்மமலமும் கலந்து மற்றோர் மாயாமல பாசமில்லாதவரே பிரளயாகலர்; பேசிய அக்கன்மமும் மாயையும் ஆணவமும் கலந்தார் சகலர்-மேலே கூறப்பட்ட அந்தக் கன்மமும் மாயையும் ஆணவமுமாகிய மூன்றும் சார்ந்தவர் சகலர்; என்னும் இவரின் முன்னோர் இருபான்மை

யர் என்றறியே-பிரளயாகலர் சகலர் என்னும் இவர்க்கு முற்பட்டோர் ஆணவமல மாத்திரமுடையராகிய விஞ்ஞானகலர் இருதிறப்படுவர் என்று அறிதி எ-று.

மலகர்மயுதோ விப்ரா: ப்ரளயாகல இஷ்யதே।
மாயாகர்மமலைர்யுக்தஸ் ஸகலஸ்தத்ர கத்யதே॥

"மலகன்மங்களோடு கூடினவர் பிரளயாகலர்; மாயா கன்ம மலங்களோடியைந்தவர் சகலர்" என்று **காமிகாகமம்** கூறுகின்றது.

---

## தத்துவப்பிரகாசம்

மலயுக்தஸ்தத்ராத்யோ மலகர்மயுதோ த்விதீய: ஸ்யாத்।
மலமாயாகர்மயுதஸ்சகலஸ்தேஷு த்விதாபவேதாத்ய:॥

"முதலாவதாகிய விஞ்ஞானகலர் மலமாத்திரமுடையர்; இரண்டாவதாகிய பிரளயாகலர் மலகர்ம மிரண்டுமுடையர்; சகலர் மலம் மாயை கன்மம் என்னும் மூன்றுமுடையர்; இம்மூவருள்ளே முதலாவதாகிய விஞ்ஞானகலர் இருதிறப்படுவர்."

---

## விஞ்ஞானகலர் இருதிறத்தராதல்

(கச) §அறிந்தவர் தீர்ந்த துகளினர் தீராத் துகளர் முன்னர்ச்
செறிந்தவர் விஞ்சைக்கு நாயக ரெண்ம ரெனச்சிறந்தோர்
பிறிந்தவர் மந்திர ராமெழு கோடியர் யேரொலியான்
மறிந்த திரைப்புனல் வெங்குரு வாணன் வகுத்தவரே.

(இ-ள்) அறிந்தவர் - விஞ்ஞானகலர்; தீர்ந்த துகளினர் தீராத்துகளர்-மிகுந்த பரிபக்குவமலமுடையரென்றும் குறைந்த பக்குவ மலமுடையரென்றும் (இருவகைப்படுவர்); முன்னர்ச் செறிந்த எண்மர் விஞ்சைக்கு நாயகர் எனச் சிறந்தோர்-முன்னர்க் கூறப்பட்டவர் அனந்தாதி அஷ்டவித்தியேசுவரர் எனப்பட்ட உயர்வு

§ இச்செய்யுள் சிவப்பிரகாசத்துக்கு மதுரைச் சிவப்பிரகாசர் எழுதிய பாயிரம் அ-ஞ் செய்யுளுரையினும், பொது கச-ஞ் செய்யுளுரையினும் உதகரிக்கப்பட்டுள்ளது.

டையோராம்; பிறிந்தவர் மந்திரராம் எழுகோடியர் - அவரிற் பிரித்துக் கூறப்பட்டோர் சப்தகோடி மகாமந்திரராம்; வகுத்தவர் பேரொலியான் மலிந்த திரைப்புனல் வெங்குருவாணன் - இங்ஙனம் வகுத்தவர் மிகுந்த ஒலியினால் மடங்கும் அலைநீராற் சூழ்ந்த வெங்குரு எனப்படும் சீகாழிக்கு நாயகராகிய சிவபெருமானேயாம் எ-று.

"விஞ்ஞானகலருள்ளே பக்குவமல முடையார் இருபிரகாரத்தினர்; அத்தியந்த பரிபக்குவமுள்ள விஞ்ஞானகலர் ஈசுவர தத்துவத்தில் வசிப்பவர்களாகிய அனந்தாதி எண்மர்; அனந்தாதியரை அபேக்ஷித்துச் சிறிது அபக்குவமுடையாராயுள்ளோர் சுத்தவித்தையில் வசிப்பவர்களாகிய சப்தகோடி மகாமந்திரர்களாம்" என்று சித்தாந்தசாராவளி வியாக்கியானம் கூறுகின்றது.

## தத்துவப்பிரகாசம்

ஆத்யஸ் சமாப்தகலுஷோ ஸமாப்த கலுஷோத்விதீயஸ் ஸ்யாத்।
ஆத்யாநநுக்ருஹ்ய சிவோ வித்யேசத்வே நியோஜயத்யஷ்டௌ।
மந்த்ராச்ச கரோத்யபராந் தேசோக்தா: கோடயஸ் சப்த॥

"முற்பட்டவராகிய விஞ்ஞானகலர் தீர்ந்தமலமுடையர் எனவும், தீராமலமுடையர் எனவும் இருவகைப்படுவர்; இவருள் முற்கூறப்பட்ட தீர்ந்தமலமுடையார் ஈசுவரதத்துவத்திலுள்ள சிவோத்தமர் முதலிய அஷ்டவித்தியேசுவரரேயாம்; தீராமலமுடைய மற்றையோரைச் சுத்தவித்தியாதத்துவத்தில் மந்திரர்களாக்கினார்; அவர்கள் சப்தகோடியினர்."

## அபக்குவ விஞ்ஞானகலர்
## பக்குவ அபக்குவப் பிரளயாகலர்

(கரு) *வகுத்தவ ரிற்புவ னாதிப ரேனைய மற்றவர்பின்
றொகுத்தவ ரிற்பந்த முற்றினர் தூநெறிச் செல்வர்பின்பான்
மிகுத்தவர் தாம்புரி யட்டகத் தோடும் வினைவழியாற்
பகுத்த பிறப்பிற் சகலர்முப் பாசமும் பற்றினரே.

* இச்செய்யுள் சிவப்பிரகாசத்துக்கு மதுரைச் சிவப்பிரகாசர் எழுதிய பாயிரம் அ-ஞ் செய்யுளுரையில் உதகரிக்கப்பட்டுள்ளது.

(இ-ள்) வகுத்தவரில் ஏனைய மற்றவர் புவனாதிபர் - இங்ஙனம் வகுக்கப்பட்ட விஞ்ஞானகலரினின்றும் (மிகுதியும் அபக்குவமலமுடைய) எஞ்சிய விஞ்ஞானகலர் (அசுத்த மாயாதத்துவத்துக்கும் சுத்தவித்தியா தத்துவத்துக்கும் இடைக்கணுள்ள) புவனாதிபர்களாயிருப்பர்; பின் தொகுத்தவரிற் பந்தமுற்றினர் தூநெறிச் செல்வர் - (விஞ்ஞானகலர்க்குப்) பின் தொகுக்கப்பட்ட பிரளயாகலருள்ளே பந்தத்தினின்று நீங்கினவராகிய மிக்க பக்குவமுடையார் முத்திநெறியிற் றலைப்படுவர்; பின்பான் மிகுத்தவர் தாம் புரியட்டகத்தோடும் வினைவழியாற் பகுத்த பிறப்பிற் சகலர் முப்பாசமும் பற்றினர் - பின்னுள்ள அபக்குவராகிய பிரளயாகலர் புரியட்டகதேகத்தோடும் இருவினைக்கீடாக வகுக்கப்பட்ட பிறவியின்கண்ணே சகலராய் ஆணவம் மாயை கன்மம் என்னும் முப்பாசமும் பற்றினோராவர் எ-று.

## தத்துவப்பிரகாசம்

ப்ரளயாகலேஷு யேஷாம் பக்வே மலகர்மணீ வ்ரஜந்த்யங்யே।
புர்யஷ்டகதேஹயுதா யோநிஷ்வகிலாசு கர்மவசாத்॥

"பிரளயாகலருள்ளே மலம் பரிபாகமுற்று, அதனாற் கன்மமும் பக்குவத்தை அடையப்பெற்றவர்கள் மோக்ஷத்தை அடைகின்றார்கள்; அபக்குவராயுள்ள ஏனையோர் புரியட்டக தேகமுடையாராய்க் கன்மவசத்தினாலே போகத்தின்பொருட்டுச் சமஸ்த யோனிகளையுடைய புவன சரீரங்களிற் செல்லுகின்றார்கள்."

## புரியட்டகம்

(கசு) பற்றிய சத்தம் பரிச முருப மிரதகந்த
மற்ற மனம்புத்தி யாங்கார மென்றிவை வல்வினையாற்
சுற்றி யமைந்த புரியட் டகமென்று சொல்லுவர்வான்
பெற்றி யமைந்த பிரமா புரந்தொழப் பெற்றவரே.

(இ-ள்) பற்றிய சத்தம் பரிசம் உருபம் இரதம் கந்தம் மற்றை மனம் புத்தி ஆங்காரம் என்று இவை வல்வினையாற் சுற்றி அமைந்த புரியட்டகம் என்று சொல்லுவர் - விஷயங்களைப்பற்றிய சத்தம் பரி

சம் ரூபம் இரசம் கந்தம் என்னும் தன்மாத்திரை ஐந்தும் மனம் புத்தி அகங்காரம் என்னும் மூன்றுமாகிய இவை வலிய வினை காரணமாக ஆன்மாவைப்பற்றியுற்ற புரியட்டக தேகமென்று கூறுவர் (யாரெனில்); வான்பெற்றி அமைந்த பிரமாபுரம் தொழப்பெற்றவர் - ஆகாயம் வரையும் உயர்ந்தமைந்த தன்மையோடுகூடிய பிரமாபுரம் எனப்படும் சீகாழியை வணங்கப்பெறும் பேறு பெற்ற அறிஞர்களாம் எ-று.

## பிரளயாகலரிற் சிலர் விஞ்ஞானகலராதல்

(கஎ) *பெற்ற தவப்பய ஞற்பிரள யாகல ரிற்சிலரைக்
குற்றமின் மந்திர நாயக ராக்குமெங் கொச்சையர்கோன்
மற்றவர் மண்டலர் க்ரோதா திபர்வீரர் சீகண்டசீ[ வர்க்கே.
ருற்ற வுருத்திர ரெட்டெட்டொன் றொன்றுநூ றெண்ணி

(இ-ள்) எம் கொச்சையர்கோன் - எமது கொச்சை எனப் பெயரிய சீகாழிக்குத் தலைவராகிய சிவபிரான்; பெற்ற தவப்பயனாற் பிரளயாகலரிற் சிலரை - அடைந்துகொண்ட புண்ணிய தவப்பிரயோசனத்தினாற் பிரளயாகலரிற் சிலரை; குற்றமில் மந்திரநாயகராக்கும் - குற்றமில்லாத (விஞ்ஞானகல) மந்திரநாயகராக்குவர்; அவர் மண்டலர் எட்டு குரோதாதிபர் எட்டு வீரரொன்று சீகண்டரொன்று சீருற்ற உருத்திரர் நூறு இவர்க்கு எண் - அவர்கள் மண்டலாதிபர் எண்மர், குரோதாதிபர் எண்மர், வீரர் ஒருவர், சீகண்டருத்திரர் ஒருவர், உருத்திரர் நூற்றுவருமாக, இவர்களின் தொகை நூற்றுப்பதினெட்டாம் எ-று.

"வித்தியாமண்டலிகளாகிய எண்மரும், குரோதாதிபராகிய எண்மரும், ஸ்ரீகண்டருத்திரர் ஒருவரும், வீரபத்திரர் ஒருவரும், உருத்திரர் நூற்றுவருமாகிய அந்த நூற்றுப்பதினெண்மரையும் சிவபெருமான்சிருஷ்டிகாலத்திலே நிரதிகரணதீக்ஷையால் அநுக்கிரகித்து அந்த (விஞ்ஞானகலமந்திரேசுவர) அதிகாரத்தில் ஆஞ்ஞாபிப்பர்" எனப் பவுட்கராகமம் கூறுகின்றது.

இந்த நூற்றுப்பதினெண்மரும் பிரளயாகலரைச் சார்ந்தவரென்க.

---

* இச்செய்யுள் சிவப்பிரகாசத்துக்கு மதுரைச் சிவப்பிரகாசர் எழுதிய பாயிரம் அ-ஞ செய்யுளுரையில் உதகரிக்கப்பட்டுள்ளது.

## தத்துவப்பிரகாசம்

சதமஷ்டாதச தேஷாம் குருதே ஸ்வயமேவ மந்த்ரேசாந் ।
ததாஷ்டௌ மண்டலிந: க்ரோதாத்யாஸ்தத்சமாச்ச வீரேச: ।
ஸ்ரீகண்டச்சதருத்ரா: சதமித்யஷ்டா தசாப்யதிகம் ॥

"(ககனேசர் முதலிய) மண்டலாதிபர் எண்மரும், குரோதாதிபர் எண்மரும், ஸ்ரீகண்டரும், வீரபத்திரரும், சதருத்திரருமாகிய நூற்றுப் பதினெட்டுப் (பிரமாண்ட ஆதாரர்களாகிய அந்நூற்றுப் பதினெட்டுப் பிரளயாகல) ருத்திரர்களுடைய மலங்களைச் (சிவ பெருமான்) தாமே நீக்கி மந்திரேசுவரபதத்தில் யோஜிக்கின்றார்."

## சகலர்க்கு அருளுதல்

(கஅ) எண்ணும் வினைப்பய னாற்புவ னந்தொறும் போகமென்று
நண்ணி வருஞ்சக லர்க்கொரு கால நயந்தங்ஙனே
பண்ணிய கன்மந் தொலையொத் தழிச்சத்தி பாதமுறக்
கண்ணிய னுங்குரு வாய்க்காழி வேந்தன் கதிதருமே.

(இ - ள்) எண்ணும் வினைப்பயனாற் புவனந்தொறும் போகம் என்றும் நண்ணிவருஞ் சகலர்க்கு - கணிக்கப்படும் கன்மப்பயனினாற் புவனங்கடோறும் போகத்தை எஞ்ஞான்றும் பொருந்தித் துய்த்து வரும் சகலராயினார்க்கு; அங்ஙனே ஒருகால் நயந்து பண்ணிய கன்மம் தொலை ஒத்தழி சத்திபாதமுற - ஈண்டு ஒருகால் மிகுத்துச் செய்த புண்ணிய பாவங்கள் சமப்படுமிடத்து அதனாற் சத்திநி பாதம் தலைக்கூடுங்கால்; காழிவேந்தன் கண்ணியனும் குருவாய்க் கதிதரும் - சீகாழித் தலைவராகிய சிவபிரான் கண்போற் சிறந்த குருநாதராக எழுந்தருளிவந்து முத்தியைப் பாலித்தருள்வார் எ-று.

யேஷாம் போதே ந ஸம்ஜாதம் காலஜ்ஞாநம் (வராநநே) ।
ந தேஷாம் ஜாயதே போத: சாஸ்த்ரகோடிசதைரபி ॥

"எவர்களுடைய அறிவிலே மலபரிபாககாலமாகிய சத்திநிபாதத்தில் ஞானம் பிறக்கவில்லையோ, அவர்களுக்கு நூறுகோடி சாஸ்திரங்களாலும் சிவசாக்ஷாத்கார ஞானம் உண்டாகாது" என்று **தேவிகாலோத்தரம்** கூறுகின்றது.

சிவபுண்ணியத்தால் வருவது இருவினையொப்பு என்றும், அது வரவே முதன்மையும் போகப்பற்றும் கழியும் என்றும், மலபரிபாகத்தால் வருவது சத்திநிபாதம் என்றும், அது வரவே போகபோக்கியக் கருவிகளிற் செறிதல் கழியும் என்றும், இவை நான்கும் வந்து அவை நான்கும் கழிந்தால் உணர்வாய்நின்ற ஞானக்கூத்தன் ஒரு மூர்த்திகொடு குறுகும் என்றும், அந்தக் குருவருளால் ஷடத்துவசுத்தியாகிய உருக்கழியும் என்றும், அது கழிந்தாற் கேவலசகலம் நீங்கும் என்றும், அது நீங்கினால் அறிதற்றொழில் உண்டாதல் ஒடுங்கிக் கழியும் என்றும், அது கழிந்தால் ஞானப்பெருக்கம் உளதாம் என்றும், அது பெருகினால் இச்சை ஞானம் கிரியை மூன்றும் கழியும் என்றும், அது கழிந்தால் மலநீக்கம் வாதனைமல நீக்கம் வரும் என்றும், அது வந்தால் ஆன்மாவுக்கு வியாபக அறிவு விளங்கி ஏகதேசக்காட்சிப்படும் சுட்டுணர்வு கழிந்து சிவானந்தம் எய்தும் என்றும் சித்தாந்தசாஸ்திரம் கூறுகின்றது.

---

### தத்துவப்பிரகாசம்

பரிபக்வமலாநேதாநுத்சாதநஹேதுசக்திபாதேந।
யோஜயதி பரே தத்வே ஸ தீக்ஷயாசார்யமூர்த்திஸ்தித:॥

"(சிவபெருமான்) ஆசாரியமூர்த்தியை அதிஷ்டித்துநின்று (திரோதான சத்தியை) ஒழித்தல்வாயிலாக எய்தும் சத்திநிபாதத்தினாற் பரிபக்குவமுற்ற மலத்தையுடைய இந்த ஆன்மாக்களைச் (சிவானந்த) பரதத்துவத்திற் சேர்ப்பிக்கின்றார்."

---

## பாசவியல்

### ஆணவமுதலிய மூன்று

(கக) *கதிதரு காழிமன் கட்டுமப் பாசங்கண் மூன்றவைதாம்
பொதிதரு மாணவம் போகஞ்செய் கன்மமு மாயையுமா
முதியது தானென்று முன்னரில் லாதது சேதனன்கண்
ணதிக மறைப்பன வாயிர கோடி விருத்திகளே.

---

* இச்செய்யுள் சிவஞானசித்தியார்க்கு மறைஞானசம்பந்தசிகர் எழுதிய உ-ஞ் சூத்திரத்து அ0, அஎ-ஞ் செய்யுளுரைகளினும், சிவப்பிரகாசத்துக்கு மதுரைச் சிவப்பிரகாசர் எழுதிய பொது அ-ம், உக-ஞ் செய்யுளுரைகளினும் உதகரிக்கப்பட்டுள்ளது.

(இ-ள்) கதிதரு காழிமன் கட்டும் அப்பாசங்கள் மூன்று - முத்திபாலிக்கும் சீகாழிப்பெருமான் (அநாதியே ஆன்மாவைப் பந்தித்த ஆணவ முதலியவற்றைத் திரோதானசத்தியினாற் சேட்டித்துப்) பந்திக்கும் அப்பாசங்கள் மூன்று வகைப்படும்; அவை தாம் பொதிதருமாணவம் போகஞ் செய் கன்மமும் மாயையுமாம் - அப்பாசங்கள் ஆன்மாவின் அறிவை மறைத்துநிற்கும் ஆணவமலமும், போகம் கொடுக்கும் கன்மமலமும், மாயாமலமுமாம்; முதியது தான் ஒன்று - முதற்கண்ணே கூறப்பட்ட ஆணவமலமானது ஒன்றே; முன்னர் நில்லாதது - (இது ஆன்மாவினின்று பிரிக்குமாறு புலப்பட) முற்பட்டு நில்லாதது; சேதனன் கண் அதிகம் மறைப்பன ஆயிரகோடி விருத்திகள் - (அநேக) ஆன்மாக்களின் (ஞானக்கிரியா) சத்திகளை மிகுதியும் மறைப்பனவாகிய அநேக சத்திகளை (உடையது) எ-று.

> ஸஹஜம் மலமித்யுக்தமாகந்துகமலம் (ச்ருணு)I
> மாயேயம் கர்மஜஞ்சைவ த்விவிதம் (சிவசாசநே)II

"ஆணவமலம் சகஜமலம் எனவும், மாயாகன்மகாரியம் இரண்டும் ஆகந்துகமலம் எனவும்" சுப்பிரபேதாகமம் கூறுகின்றது.

---

## தத்துவப்பிரகாசம்

> பாசா:சதுர்விதாஸ்ஸ்யு:பும்சோமலகர்மஜௌ மதௌ ப்ரதமதௌI
> மாயேய திரோதாயகௌ (சிவசக்திஸமுத்பவௌ) சாந்யௌII

"ஆன்மாவுக்கு நால்வகைப் பாசங்கள் உண்டு; அவை முதற்கண்ணேயுள்ள மலமும், கன்மமும் மற்றைய மாயேயமும், திரோதாயியுமாம்."

---

### ஆணவம்

(உ0) விருத்திக ளான்மறைக் கின்றவவ் வாணவம் வெங்குருமன்
கருத்திய னூன்முறை தேரிற் கலந்துட னுயனுவை
யருத்திய நஞ்சென மோகஞ்செய் தாசை யனுபவத்திற்
பெருத்திடச் செம்பினிற் காளிதம் போலப் பிணைந்துளதே.

(இ-ள்) விருத்திகளான் மறைக்கின்ற அவ்வாணவம் - (அளவிறந்த) சத்திகள்கொண்டு ஆன்மாவை மறைக்கின்ற அந்த ஆணவமலலக்ஷணத்தை; வெங்குருமன் கருத்து இயல் நூன்முறை

தேரில் - ஸ்ரீகாழிநாதர் திருவுளத்துக்கியைந்த வேதசிவாகமநெறி யானே ஆராயின்; கலந்து உடனாய் அணுவை அருத்திய நஞ்செனமோகஞ் செய்து-ஆன்மாக்களுடனே அவ்வாணவம் (அபேதமாய்க்) கலந்து நிற்றலால் ஒன்றாயும், (பொருட்டன்மையால் வேறாயும்), செயற்றன்மையால், உடனாயுமாகி, அவற்றுக்கு ஊட்டிய நஞ்சு போல மயக்கஞ் செய்து; ஆசை அனுபவத்தில் பெருத்திடச் செம்பினிற் காளிதம் போலப் பிணைந்துளது - (புகழ்பொருள்) ஆசையானது (விஷய) அநுபவத்திலே கதிக்குமாறு செம்பிற் களிம்பு போல (அவ்வான்மாக்களில்) இசைந்துளது எ-று.

தாம்ரகாளிகவத்யோகாத்ஸஹஜ: பரிகீர்த்தித:।

"(ஆன்மாவோடு ஆணவமானது இயைந்து நிற்பது) தாம்மிரத்திற் களிம்பு சகஜமாய் இசைந்திருப்பது போலாம் என்று சொல்லப்படும்" என்று மதங்காகமங் கூறுகின்றது.

## தத்துவப்பிரகாசம்

ஏகோஹ்யநேகசக்தித்ருக் க்ரியயோச்சாதகோமல: பும்ஸ:।
துஷகம்புகவஜ்ஜ்ஞேயஸ் தாம்ராச்ரிதகாளிகாவத்வா॥

"ஆணவமலம் ஒன்றனன்றே; இது அநேக சத்திகளையுடையதாய் ஆன்மாவின் ஞானக்கிரியைகளை மறைப்பதாயுள்ளது; இது நெல்லின் உமிபோன்றேனும், தாம்மிரத்திற் களிம்புபோன்றேனும் உள்ளது என அறியற்பாற்று."

## கன்மம்

(உக)*பிணைந்தவப் பாசம் பெருக்கியவ் வாசை யணுநுகர்தற்
கணைந்தன கன்ம மிருவகைத் தாமறம் பாவமென்ப [யா
தணைந்தும் பிணைந்துந் தஞ் சார்பினிற் றேன்றுமன் சன்னிதி
துணர்ந்தவர் வித்தும் விளைவுமொப் பாமென வோதுவரே.

(இ-ள்) பிணைந்த அப்பாசம் அவ்வாசை பெருக்கி அணு நுகர்தற்கு அணைந்தன கன்மம் இருவகைத்தாம்-ஆன்மாவை அநாதியே பற்றிய அவ்வாணவமலம் அவ்வாசையைப் பெருக்க, அவ்வான்மா

* இச்செய்யுள் சிவப்பிரகாசத்துக்கு மதுரைச் சிவப்பிரகாசர் எழுதிய பொது உ0-ஞ் செய்யுளுரையில் உதகரிக்கப்பட்டுள்ளது.

வானது போகந் துய்த்தற்குச் சேர்ந்தனவாகிய வினைகள் இரு வகையாம்; அறம் பாவம் என்ப - அவ்வினைகள் புண்ணியமும் பாவமுமாம் என்பர்; மன் சந்நிதியால் தணந்தும் பிணைந்தும் தம் சார்பினிற்றோன்றும் - சீகாழிநாயகருடைய சன்னிதியினால் அவை (இருவினைகள்) அவ்வான்மாக்களை (இதாகிதமாகப்) பிரிந்தும் கூடியும் தத்தஞ்சார்பிலே தோன்றுவனவாம்; உணர்ந்தவர் வித்தும் விளைவும் ஒப்பாம் என ஓதுவர் - அறிஞர்கள் அவ்வினையை (மறு சனனத்துக்குரியதாய) வித்துக்கும் (இந்தச் சனனத்துக்குரிய தாய) விளைவுக்கும் ஒப்பாமென்று கூறுவர் எ-று.

---

## தத்துவப்பிரகாசம்

கர்மாநாதி ப்ரோக்தம் தர்மாதர்மாத்மகம் விசித்ரஞ்ச1

"கன்மமானது அநாதிக்கண்ணதாய்ப் புண்ணியபாவம் எனப் பல திறப்பட்டிருக்கும்."

---

## மாயை

(உஉ) *ஓதிய வல்வினை யூட்டக் கருவி யுடம்புலக
மாதிமைப் போகமு மாய்நின்ற மாயை மயக்குவித்தே
போதந் தரும்பொரு ளாய்நிற்கு மிப்புவ னாதிகளுக்
காதியு மாய்விரிந் தந்தமு மாகி யொடுங்கியதே.

(இ-ள்) ஓதிய வல்வினை ஊட்ட உடம்பு கருவி உலகம் மாது இமைப் போகமுமாய் நின்ற மாயை - மேலே கூறப்பட்ட வலிய வினையை ஊட்டுமாறு தனுவாயும் கரணமாயும், புவனமாயும் மாதர் முதலிய சிறுபோகமாயும் நின்ற மாயையானது; மயக்குவித்தே போதம் தரும் பொருளாய் நிற்கும் - அறிவை மயக்குவித்துக் (கலாதிகளால் ஏகதேசக்) காட்சிதரும் பொருளாகிநிற்கும்; இப் புவனாதிகளுக்கு ஆதியுமாய் விரிந்து அந்தமுமாகி ஒடுங்கியது - இப்புவனாதிகள் தோற்றுதற்கு முதற்காரணமாய் விரிந்தும், அவற்றுக்கு அந்தமுமாகி ஒடுங்கியும் இருக்கும் எ-று.

---

* இச்செய்யுள் சிவப்பிரகாசத்துக்கு மதுரைச் சிவப்பிரகாசர் எழுதிய பொது உ0-ஞ் செய்யுளுரையில் உதகரிக்கப்பட்டுள்ளது.

மயத்யஸ்'ராஜ் ஜகத்விச்வம் மாயா தேந ஸமீரிதா।

"(சுத்தமாயையிலே இருத்தலொழிந்த) பசுக்களையெல்லாம் மயக்குகின்றமையின் (அசுத்த) மாயை எனப்பட்டது" என்று பவுட்கராகமமும்,

தத்தேக'' சிவம் பீஜம் ஜகத: சித்ரசக்திமத்।
ஸஹகார்யதிகாராந்தஸம்ரோதிவ்யாப்யநச்வரம்॥

"அம்மாயையானது ஒன்றாயும், மயக்குதலால் அசிவமாயும், பிரபஞ்சத்துக்கு உபாதானமாயும் பல்வேறு வகைப்பட்ட சத்தியுள்ளதாயும், சககாரிகளாகிய கன்மங்களின் அதிகாரம் இருக்கும்வரையில் ஆன்மாக்களை மறைப்பதாயும் வியாபகமாயும் நித்தியமாயும் இருக்கின்றது" என்று மிருகேந்திராகமமும் கூறுமாற்றால், ஈண்டு "மாயை மயக்குவித்தே" எனக் கூறப்பட்டது.

---

## தத்துவப்பிரகாசம்

மாயாச வஸ்துரூபா மூலம் விச்வஸ்ய நித்யா சா।

"மாயையானது வஸ்துரூபமாய் உலகத்துக்கு மூலகாரணமாய் நித்தியமாய் உள்ளது."

---

## திரோதானசத்தி

(உ௬) ஒடுங்கிய பாசத் தொகையொரு மூன்று முறுந்தொழிலிற்
றுடங்கிய போதிற் றுணைமையிற் றோணி புரத்துறையும்
விடங்கெழு கண்டர்தஞ் சத்தியி னேவலின் மற்றதுவும்
படர்ந்தெழு பாசமென் றாவை யூக்கஞ்செய் பான்மையரே.

(இ-ள்) ஒடுங்கிய பாசத் தொகையொரு மூன்றும் - சர்வசங்காரகாலத்தில் (ஆன்மாவோடு) ஒடுங்கிநின்ற பாசம் மூன்றும்; உறுந் தொழிலில் துடங்கிய போதில் துணைமையில் தோணிபுரத்து உறையும் விடம் கெழு கண்டர் தஞ்சத்தியின் - தத்தமக்குரிய தொழில்களில் தொடங்கியபோது ஒப்பில்லாத தோணிபுரத்தின் கண்ணே எழுந்தருளியிருக்கும் காளகண்டராகிய சிவபெருமானுடைய (அவிநாபூத) சிவசத்தியினது; ஏவலில் அதுவும் படர்ந்து எழுபாசம் என்றார் அவை ஊக்கஞ் செய் பான்மையர் - (ஆன்மாக்

களைப்பற்றிய அந்த மும்மலங்களுக்கு அநுகூலமாய்நின்று அவற்றை) ஏவுதலினால், (உபசாரம்பற்றி) அதனை முதிர்ந்து எழும் திரோதாயி மலம் என்று கூறினர் அப்பாசங்களினின்று நீங்கும் பெரியோர் எ-று.

தாஸாம் மாஹேச்வரீ சக்திஸ்சர்வாநுக்ராஹிகாசிவா।
தர்மாநுவர்த்தநாதேவ பாச இத்யுபசர்யதே॥

"(இயல்பாகவே)சர்வான்மாக்களையும் அநுக்கிரகிக்கும் சிவையாகிய திரோதான சத்தியானது மறைக்கும் மலசத்திகளை அதிஷ்டித்துத் தொடர்ந்திருத்தலாற் பாசம் என உபசாரமாகக் கூறப்படும்" என்றது மிருகேந்திராகமம்.

## தத்துவப்பிரகாசம்

பாசாநுக்ராஹித்வாத் புருஷதிரோதாயிகா விபோ: சக்தி:।
பாசத்வேநாபிஹிதா: கதிதா: பாசாச் சதுர்விதாஸ்த்வேவம்॥

"(சிவத்தைத் தெரியவொட்டாது) ஆன்மாவை மறைக்குந் (திரோதானஞ்செய்யும்) சிவனாது சத்தியானது (ஆணவாதி) பாசங்களைச் செலுத்தியருளுகின்றமையின், அத்திரோதானசத்தியானது பாசமாக உபசரித்துக் கூறப்படும்; இங்ஙனம் பாசம் நால்வகைப் பட்டதாயிற்று."

## சிவதத்துவம்

(உச) பான்மையிற் றத்துவ மைந்தென்பர் சுத்தம் பரமவற்றுட்
சீர்மலி தெய்வச் சிரபுரங் காண்சிவ தத்துவமென்
றேர்மலி கூந்த லிறைவியுங் கோனு மிருந்திலரேற்
கூர்மலி சிந்தையி னார்சிவ மாமென்று கூறுவரே.

(இ-ள்) பான்மையில் சுத்தம் தத்துவம் ஐந்து என்பர் - கூறும் பான்மையிற் சுத்ததத்துவம் ஐந்து என்று அறிஞர் கூறுவர்; அவற்றுள் பரம் சீர்மலி தெய்வச் சிரபுரம் காண் சிவதத்துவம் - அவ்வைந்தனுள்ளே மேலாயது சிறப்புவாய்ந்த திவ்ய சிரபுரமாகிய அந்தச் சிவதத்துவமாம்; என்று ஏர்மலி கூந்தல் இறைவியும் கோனும் இருந்திலரேல் - என்று இங்ஙனம் கூறப்படும் சிவதத்து

வமே இடமாக அழகுவாய்ந்த கேசத்தையுடைய இறைவியும் இறைவரும் இருந்திலரேல்; கூர்மலி சிந்தையினர் சிவமாமென்று கூறுவரே-நுண்ணறிவாளர் அத்தத்துவத்தைச் சிவதத்துவமென்று சொல்வாரோ? சொல்லார் எ-று. ஏகரம் எதிர்மறைப்பொருட்கண் வந்தது.

சிவம் சக்திஞ்ச சாதாக்யமீசம் வித்யாக்யமேவச।

"சிவதத்துவம், சத்திதத்துவம், சாதாக்கியதத்துவம், ஈசுவரதத்துவம், சுத்தவித்தியாதத்துவம் (எனச் சிவதத்துவங்கள் ஐந்து)" என்று பிருகச்சாபாலோபநிடதமும்,

சிவம் சக்திச்ச ஸாதாக்யமீச்வரந்ததநந்தரம்।
சுத்தவித்யாச பஞ்சைதே சுத்ததத்வம் ப்ரகீர்த்திதம்॥

"சிவம், சத்தி, சாதாக்கியம், ஈசுவரம், சுத்தவித்தை என்னும் ஐந்தும் சுத்ததத்துவம்எனப்படும்" என்று காலோத்தராகமமும் கூறுகின்றன.

## தத்துவப்பிரகாசம்

சுத்தாநி பஞ்சதத்வாந்யாத்யந்தேசு ஸ்மரந்தி சிவதத்வம்।

"சுத்த தத்துவங்கள் ஐந்தாகும்; அவற்றுள்ளே தலையாயது சிவதத்துவம் எனக் கூறுவர்."

## அத்துவா

(உரு) கூறிய வங்கியுங் கோலு மெனக்கொச்சை வேந்தனெங்கு
மாறில னுகி மகிழ்ந்துட னிற்றலின் மற்றதுவும்
வேறின்மை சால விளம்பத் தருமதன் பால்வினையு
மாறியல் பாமத்து வாதத்து வாகமத் தாய்ந்தனவே.

(இ-ள்) கூறிய அங்கியும் கோலும் எனக் கொச்சைவேந்தன் எங்கும் மாறிலனுகி மகிழ்ந்து உடனிற்றலின் - கூறப்பட்ட அக்கினியும் காட்டமும் போலக் கொச்சை நகர்க்கு இறைவராகிய சிவபிரான் யாண்டும் வேறுபாடின்றி மகிழ்ந்து இயைந்து நிற்றலினால்; அதுவும் வேறின்மை சால விளம்பத்தரும் - சிவபெருமானின்று வேறற்று நிற்றலால் அந்தச் சிவதத்துவமும் சிவனென்று மிருதியும் கூறற்பாலதாகும்; அதன்பால் வினையும் ஆறு இயல்பாம் அத்துவா தத்துவாகமத்து ஆய்ந்தன - (குடிலையினின்றும் வேறாகாத) அந்தச்

சிவதத்துவத்திலே நின்றும் தோன்றும் இயல்பாகிய ஆறு அத்து வாக்களும் சத்தியமாகிய வேதாகமத்தில் ஆராயப்பட்டனவாம் எ-று.

அத்வாநம் ஷட்விதம் ப்ரோக்தம் தத்வாத்வாதி விநாயக।
தத்வாத்வா ப்ரதமம் வித்தி புவநாத்வா த்விதீயகம்।
மந்த்ராத்வா வை த்ருதீயந்து வர்ணாத்வாவை சதுர்த்தகம்।
பதாத்துவா பஞ்சமம் ஜ்ஞேயம் கலாத்வா ஷஷ்டமம் ஸ்ம்ருதம்॥

"ஏ விநாயக! (சிவதத்துவமுதலிய) தத்துவாத்துவாமுதலாக அத்துவா அறுவகைப்படும்; முதலாவது தத்துவாத்துவா எனவும், இரண்டாவது புவனாத்துவா எனவும், மூன்றாவது மந்திராத்துவா எனவும், நான்காவது வர்ணாத்துவா எனவும், ஐந்தாவது பதாத்துவா எனவும், ஆறாவது கலாத்துவா எனவும் அறிதி" என்று சிவபிரான் கூறியதாகச் சுப்பிரபேதாகமம் கூறுகின்றது.

---

## சிவதத்துவமைந்தின்றோழில்

(உசு)‡ ஆய்ந்தவத் தத்துவ மைந்தா வனசிவ தத்துவத்தோ
டேய்ந்தவச் சத்தி சதாசிவ மீசனும் வித்தையுமென்
றோர்ந்தறி வித்தினுக் குண்ணெகிழ்ப் பானது சத்தியதிற்
போந்தெழு மங்குர மைம்முகக் கோனென்று போற்றுவரே.

(இ-ள்) ஆய்ந்த அத்தத்துவம் ஐந்தாவன சிவதத்துவத்தோடு ஏய்ந்த அச்சத்தி சதாசிவம் ஈசனும் வித்தையும் என்று ஓர்ந்தறி - ஆராயப்பட்ட அச்சிவதத்துவங்கள் ஐந்தாவன சிவதத்துவத்தோடு சத்திதத்துவமும், சதாசிவதத்துவமும், ஈசுவரதத்துவமும், சுத்த வித்தியாதத்துவமுமாம் என்று ஓர்ந்து அறிக; வித்தினுக்கு உள் நெகிழ்ப்பானது சத்தி - சிவதத்துவமாகிய வித்தின் உள் நெகிழ்ச்சியாயுள்ளது சத்திதத்துவம்; அதிற் போந்து எழும் அங்குரம் ஐம்முகக்கோன் என்று போற்றுவர் - (அந்த வித்தும் நெகிழ்ச்சியும் கூடினவிடத்தில்) உண்டாகும் முளையாயுள்ளார் (ஈசானுதி) ஐம்முகமுடைய (தாண்டவேசுவர சமஷ்டிரூப) சதாசிவப்பெருமான் என்று துதிப்பர் எ-று.

---

‡ இச்செய்யுள் சிவப்பிரகாசத்துக்கு மதுரைச் சிவப்பிரகாசர் எழுதிய பொது கூ-ஞ் செய்யுளுரையில் உதகரிக்கப்பட்டுள்ளது.

## தத்துவப்பிரகாசம்

சக்திசதாசிவதத்வே ஈச்வாவித்யாக்யதத்வேச॥

"(மேலே கூறப்பட்ட சிவதத்துவத்தோடு) சத்திதத்துவம், சதாசிவதத்துவம், ஈசுவரதத்துவம், சுத்தவித்தியாதத்துவம் எனத் தத்துவம் ஐந்தாம்."

---

## இதுவுமது

(உஎ) போற்றும் பரத்திற் பொதிகின்ற ஞானங் கிரியையொத்துத்
தோற்றுஞ் சதாசிவ ஞானஞ் சுருங்கித் தொழின்மிகுத்தல்
சாற்றும் மகேசமெய்ஞ் ஞானந் தழைத்துத் தொழில்குறைதன்
மாற்றரும் வித்தை சிரபுர நாதன் வகுத்தனவே.

(இ-ள்) போற்றும் பரத்தில் பொதிகின்ற ஞானம் கிரியை ஒத்துத் தோற்றும் சதாசிவம் - (அறிஞர்) போற்றும் சிவதத்துவ சத்தி தத்துவங்களிற் பொதிந்த ஞானமும் கிரியையும் சமப்பட்டவிடத்துச் சதாசிவதத்துவம் உண்டாம்; ஞானம் சுருங்கித் தொழின் மிகுத்தல் சாற்றும் மகேசம் - ஞானம் குறைந்து கிரியை மிகுத்துத் தோற்றப் பெறுதல் ஈசுவரதத்துவமாம்; மெய்ஞ்ஞானம் தழைத்துத் தொழில் குறைதல் மாற்றரும் வித்தை-சத்தியஞானமோங்கிக் கிரியை குறைதல் மாற்றுதற்கரிய சுத்தவித்தியாதத்துவமாம்; சிரபுநாதன் வகுத்தனவே -(இவை) சீகாழிநாயகராகிய சிவபிரானால் வகுக்கப்பட்டனவாம் எ-று.

---

## தத்துவப்பிரகாசம்

*ஜ்ஞாநகிரியாக்யசக்த்யோரபகர்ஷோத்கர்ஷயோரபாவேக॥
ய: ப்ரசரஸ்தம் ப்ராஹுஸ் ஸதாசிவாக்யம் புதாஸ்தத்வம்॥
ந்யக்பவதி யத்ரசக்திர் ஜ்ஞாநாக்யோத்ரிக்ததாம் க்ரியா பஜதே॥

---

* இந்தச் சுலோகங்களாற் சத்திதத்துவசிவதத்துவம் இரண்டும் நிஷ்களசிவனுர்க்கும், சாதாக்கியதத்துவம் நிஷ்களசகளசதாசிவனுர்க்கும், சுத்தவித்தை ஈசுவரம் இரண்டும் சகளமகேசுவரர்க்கும் ஸ்தானங்களாம் என அறியப்படுகின்றது.

ஈச்வரதத்வம் ததிஹ ப்ரோக்தம் சர்வார்த்தகர்த்ருசதா।
வ்யக்பவதி கர்த்ருசக்திர் ஜ்ஞாநாக்யோத்ரேகமச்நுதே யத்ர।
தத் தத்வம் வித்யாக்யம் ப்ரகாசகம் ஜ்ஞாநரூபத்வாத்॥

## கலாதத்துவம்

(உ௮) வகுத்த வினைப்பயன் றுய்த்தற் கணுக்கட்கு மாயையெனத்
தொகுத்ததி னின்றும் கலைவருந் தோணிப் பிரானருளான்
மிகுத்துட ஞகி மறைக்கு மலத்தின் விருத்திதன்னைப்
பகுத்தெழு விக்குங் கிரியையை நுண்ணிதிற் பையநின்றே.

(இ-ள்) தோணிப்பிரான் அருளால் வகுத்த வினைப்பயன் துய்த்தற்கு அணுக்கட்கு மாயை எனத் தொகுத்ததினின்றும் கலைவரும்—சீகாழிச் சிவபெருமான் திருவருளால் வகுக்கப்பட்ட வினைப்போக (பிராரத்தம்) துய்க்குமாறு ஆன்மாக்கள்பொருட்டுச் (சஞ்சிதவினை புத்திதத்துவம் பற்றுக்கோடாகக் கிடக்கப்பெறும்) மாயை எனத் தொகுக்கப்பட்டதினின்றும் கலாதத்துவம் தோன்றும்; மிகுத்து உடஞகி மறைக்கும் மலத்தின் விருத்திதனைப் பகுத்துப் பைய நின்று நுண்ணிதிற் கிரியையை எழுவிக்கும் - அக்கலாதத்துவம் கதித்து உடஞகி (ஆன்மாவின் ஞானேச்சாக்கிரியைகளை) மறைக்கும் மலசத்திகளை ஒதுக்கி மெதுவாகநின்று நுண்ணிதாக (ஆன்மாவின்) கிரியையை எழுப்பும் எ-று.

## தத்துவப்பிரகாசம்

பும்சோஜ்ஞகர்த்ருதார்த்தம் மாயாததஸ்தத்வபஞ்சகம் பவதி।
காலோ நியதிச்ச ததா கலாச வித்யாசராகச்ச।
மாயாதஸ்தத நுகலாமலம் ந்ருணுமேகஸ்து கலயித்வா।
வ்யம்ஜயதி கர்த்ருசக்திம் கலேதி தேநேஹ கதிதேயம்॥

"ஆன்மாவுக்கு அறிதற்ருெழில் எய்தும்பொருட்டு (அசுத்த) மாயையினின்றும் ஐந்து தத்துவங்கள் உண்டாகின்றன; அவை காலம், நியதி, கலை, வித்தை, இராகம் என்பனவாம்; மாயையினின்றும் அதன் கலையானது ஆன்மாக்களின் மலத்தை நீக்கிக் கர்த்திருசக்தியை விளக்குகின்றது; ஆகலின், அது கலை எனப் படும்."

## கலாதிமாயாவிகாரங்கள்

(உகூ) பையரா வின்விடம் பாலடி சிற்பெய்து பாத்திரத்திட்
டையமில் லாரயில் விப்பது போல வணுக்கடம்மை
வெய்ய வினைப்பய னின்னமு தாய்விழை வித்தயிற்று
மையுறு சிந்தை மயக்கிய மாயா விகாரங்களே.

(இ-ள்) பையரவின் விடம் பால் அடிசிற் பெய்து பாத்திரத்து இட்டு ஐயமிலார் அயில்விப்பது போல - படத்தையுடைய பாம்பின் விஷத்தை க்ஷீரான்னத்திற் கலந்து அதனைப் பாத்திரத்தில் இட்டுச் சந்தேகமுறமாட்டாத உறவினர் (ஒருவர்க்கு) ஊட்டுவது போல; அணுக்கள் தம்மை வெய்ய வினைப்பயன் இன் அமுதாய் விழைவித்து அயிற்றும் - ஆன்மாக்களுக்குக் கொடிய வினைப்பயன்களாகிய சுகதுக்கங்களை இனிய அமிர்தமாக ஆசையுறச்செய்து துய்ப்பிக்கும்; (அவை யாவை எனின்); மையுறு சிந்தை மயக்கிய மாயாவிகாரங்களே - ஆணவத்தினுற் (பந்திக்கப்பட்ட) ஆன்மாவை மோகிக்கச் செய்த (கலாதி) மாயாவிகாரகாரியங்களாம் எ-று.

மாயாயாஸ் சாக்ஷாந்ந மோஹகத்வம் கிந்துகார்யத்வாரேண I

"(அனந்தசிவாசாரியர்) மாயைக்கு நேரே மோகஞ் செய்யும் தன்மை இல்லை; பின் அதன் காரியமாகிய (கலைவித்தை இராகமுதலிய) காரியத்துவாரத்தினாலே மயக்கஞ் செய்வதாகும்" என்று கூறிய நூலும் அக்கருத்துப்பற்றியேயாம்.

---

## தத்துவப்பிரகாசம்

சாதாரணீ நராணும் காரணமபிசேயமகிலபுவநாநாம் I
நிகிலஜநகர்மகசிதாஸ்வபாவதோ மோஹஸம்ஜநநீ II

"இந்த மாயையானது சாதாரணமாய்ச் சமஸ்த புவனங்களிலுள்ள மனிதர்க்கும் காரணமாயிருந்தாலும், சமஸ்த மனிதருடைய கர்மங்களோடு இயல்பாகவே இசைந்து மோகத்தைத் (தனது காரியங்களாகிய கலாதிதத்துவங்களாற்) பிறப்பிப்பதாயுள்ளது"

## வித்தியாதத்துவம்

(கூ0) கார்மரு வும்பொழிற் காழிப் பிரான்கண் ணொழியவொன்றும்
வாரல மாயா விகாரமென் றேயறி வான்கலைப்பாற்
பேரலர் கூர்புந்தி நோக்கப் பிறங்கிருட் செல்சுடர்போ
லேரொளி வித்தைவந் தெய்துங் கலைபோ லிசைந்துநின்றே.

(இ-ள்) கார்மருவும் பொழில் காழிப்பிரான்கண் ஒழிய மாயா விகாரம் ஒன்றும் வாரல என்றே அறி - மேகம் படியும் சோலை சூழ்ந்த சீகாழிப்பெருமானையன்றி மாயாவிகாரகாரியம் ஒன்றும் சேட்டியாது என்று அறிதி; பேரலர் கூர் புந்தி நோக்க - மிகுதியும் பரந்த ஆன்மாவின் கூரிய புத்தியானது அறியுமாறு; கலை இசைந்து நின்று போல் - கலாதத்துவமானது (மாயையினின்று தோன்றி ஆன்மாவின் கிரியையை எழுப்பி) இயைந்து நின்றாற்போல; வான் கலைப்பால் - பெரிய கலாதத்துவத்தினின்று; பிறங்கு இருள் செல் சுடர்போல் ஏர் ஒளி வித்தை வந்தெய்தும் - மிகுந்த அந்தகாரத்திலே (வந்து சிறிது இருளைத் துரக்குமாறு) தோன்றும் தீபம் போலப் (பேரந்தகாரமாகிய ஆணவமலவிருளைச் சிறிது நீக்குமாறு) மிகுந்த பிரகாசம்பொருந்திய வித்தியாதத்துவம் வந்து தோன்றும் எ-று.

## காலதத்துவம்

(கூக) நின்று மிறந்து மெதிர்வதுமாய் நிகழ் பல்பொருளோ
டொன்றிய காலமு மாயைதன் பால்வரு முற்றதனா
னன்று மெதிர்வது மாகிய போக நயந்தணுக்கட்
கென்றுஞ் செலக்கட் டலிற்கா லமாமென் றியம்புவரே.

(இ-ள்) நின்றும் இறந்தும் எதிர்வந்தும் மாய் நிகழ் பல்பொருள் ஒன்றிய காலமும் மாயை தன்பால் வரும் - நிகழ்காலமாய் நிற்றதும், இறந்தகாலமாய்ச் சென்றதையும், எதிர்காலமாய் வருவதுமாக நிகழும் பலபொருள்களோடு இயைந்துநிற்கும் காலமும் மாயையினின்றே தோற்றும்; உற்றதனால் நன்றும் எதிர்வதுமாகிய போகம் நயந்து அணுக்கட்கு என்றும் செலக் கட்டலில் காலமாம் என்று இயம்புவரே - (பொருள்களை எக்காலமும்) நீங்காமற் கூட்டி, அதனால் மிகுதியும் எதிர்காலத்துப்போகங்களை விரும்பி ஆன்மாக்களை அப்போகத்திற் செல்லுமாறு பந்தித்து வருதலாற காலம் என்று பெரியோர் கூறுவர் எ-று.

## தத்துவப்பிரகாசம்

நாநாவிதசக்திமயீ ஸா ஜநயதி காலதத்வமேவாதௌ l
பாவிபவத்பூதமயம் கலயதி ஜகதேஷ காலோத: ll

"நாநாவிதசக்திமயமாகிய அந்த மாயை காலதத்துவத்தை முதற்கண்ணே பிறப்பிக்கின்றது; இந்தக் காலமும் பின்னர் எதிர்கால நிகழ்கால இறந்தகாலத்துள்ள இந்த ஜகத்தைச் செலுத்துகின்றது."

## வித்தியா தத்துவம்

(கூஉ) இயம்புஞ் சுகதுக்க மோகமென் றின்னே யெழுமதியை
வயம்பெற நோக்குழி வாய்க்கும் கருவிய தாகும்வித்தை
பயம்பெறு முக்குணப் பான்மையி னால்வந்த பல்பொருளை
நயம்பெற நோக்குமப் புந்தியி னாலென்று நாட்டுவரே.

(இ - ள்) இயம்பும் சுகம் துக்கம் மோகம் என்று இன்னே எழுமதியை - சொல்லப்படுகின்ற இன்பம் என்றும், துன்பம் என்றும், மயக்கம் என்றும் இங்ஙனம் (அதுவதுவாக) எழுகின்ற புத்தியை; வயம்பெற நோக்குழி வாய்க்கும் கருவியதாகும் வித்தை - ஆன்மாவானது வெற்றிபெறும்வண்ணம் நோக்கும்போது, அதற்கு உதவியாய் அறிவை விளக்கும் கருவியாக எய்துவது வித்தியாதத்துவம்; பயம் பெறு முக்குணப்பான்மையினால் வந்த பல்பொருளை நயம் பெற அப்புந்தியினால் நோக்கும் என்று நாட்டுவர் - பயன்படும் முக்குணங்களினால் எய்தித் தோன்றும் பல விஷயங்களை இதம்பட அந்த அறிவினால் (என்றும் வித்தியாதத்துவம்) நோக்கும் என்று ஸ்தாபிப்பர் பெரியோர் எ-று.

## தத்துவப்பிரகாசம்

புத்திர் யதாஸ்ய போக்யா சுகாதிரூபா ததாபவேத்கரணம் l
வித்யேயம் கரணம் ஸ்யாத் விஷயக்ரஹணே புநர்புத்தி: l

"எப்போது ஆன்மாவுக்கு விஷயம் சுக(துக்கமோக) போக்கியரூபமாய் இருக்குமோ, அப்போது புத்தியானது கரணமாயிருக்கும்; விஷயத்தைப் பற்றுதற்கு வித்தியாதத்துவம் கரணமாயிருந்த பின்னர்த்தான் புத்தி (கரணமாயிருந்தது)."

## நியதிதத்துவம்

(௫௫) நாட்டிய மாயையி னின்றுநற் காலத் தொடுநியதி
யீட்டிய வல்வினைக் கெய்தும் பயனியல் பாயவற்றிற்
கூட்டியு மல்லன நீத்துங் குறிப்பால் வரைந்து நிற்குங்
காட்டிய மாயைக் கிரண்டுமல் லால்வழி காண்பரிதே.

(இ-ள்) நாட்டிய மாயையில் நின்று நற்காலத்தொடு நியதி ஈட்டிய வல்வினைக்கெய்தும்-மேலே நாட்டப்பட்ட மாயையிலே நின்று தோன்றிய நல்ல காலதத்துவத்தோடு நியதிதத்துவமும் ஆன்மாக்கள் ஆர்ச்சித்த கன்மங்களைப் (புசிப்பிக்குமாறு) அதன்பால் நின்று தோன்றும்; பயனியல்பாயவற்றிற் கூட்டியும் அல்லன நீத்தும் குறிப்பால் வரைந்துநிற்கும் - கன்மபலமாயவற்றுள்ளே ஆன்மாக்கள் ஆர்ச்சித்த கன்மத்துக்கு வாய்ந்தவற்றை (அவற்றுக்குக்) கூட்டியும் அல்லாதவற்றை ஒழித்தும் (அரசனாணைபோல) குறிப்பினோடு வரைவு செய்துநிற்கும்; காட்டிய மாயைக்கு இரண்டுமல்லால் வழி காண்பு அரிது-(அரூபமாய்ச் சூக்குமமாயுள்ளதென்று) நிரூபித்த மாயைக்குக் காலம் நியதி என்னும் இரண்டுமின்றி அதனை அநுமானித்தற்கு வழி (மற்றொன்று) இல்லை எ-று.

## தத்துவப்பிரகாசம்

நியதிர்நியமநரூபா மாயாதஸ் ஸாப்யநந்தரம் பவதி।
நியமயதி யேந நிகிலம் தேநேயம் நியதிரித்யுக்தா॥

"நியதிதத்துவமானது நியமனரூபமாயுள்ளது; அது மாயையினின்றும் பின்னர் உண்டாகின்றது; சமஸ்தமும் நியதிதத்துவத்தினால் நியமிக்கப்படுகின்றமையின், இது நியதி என்று கூறப்பட்டது."

## இராகதத்துவம்

(௫௬) காணப் படுவன வித்தையிற் கண்டுழிக் கண்டதெல்லாம்
பேணித் தனதெனும் பின்றூழ் விழைவு வரைவின்றியே
பூணப் புணர்ப்ப தராகம் பொதுமையிற் றோன்றுமென்ப
சேணிற் புணர்கஞ் சுகமஞ் சதாமென் றியைந்தனவே.

(இ-ள்) காணப்படுவன வித்தையிற் கண்டிழி - காணப்படும் விஷயங்களையெல்லாம் வித்தியாதத்துவம் வாயிலாகக் கண்டவிடத்து; கண்டதெல்லாம் பேணித் தனது எனும் பின்றாழ் விழைவு - அங்ஙனம் காணப்பட்டவற்றையெல்லாம் விரும்பித் தனது என்று கூறத்தகும் பின்றங்கும் ஆசையானது; வரைவு இன்றியே பூணப் புணர்ப்பது அராகம் - அளவுபடாது ஆன்மாக்களுக்கு எய்துமாறு சேர்ப்பிப்பது அராகதத்துவம்; பொதுமையில் தோற்றும் என்பர் - இத்தத்துவமானது கலாதத்துவத்திற் கிரியையும் வித்தியாதத்துவத்தினால் ஞானமுமாகிய இரண்டும் சமமானவிடத்து உதயமாகாநிற்கும் என்பர்; ஏணில் புணர் கஞ்சுகம் அஞ்சதாம் என்று இயைந்தன - வலிமையோடு புணர்க்கப்பட்ட கஞ்சுகம் ஐந்தாம் என்று கூறத்தக்கனவாகக் (கலை, வித்தை, காலம், நியதி, இராகம் என்னும் தத்துவங்கள் ஆன்மாக்களுக்கு) இயைந்தனவாம் எ-று.

---

## தத்துவப்பிரகாசம்

ராகோபிஷ்வங்காத்மா விஷயச்சேதம் விநைவ ஸாமாந்ய:]
"சாமானியமாய் விஷயப்பற்று நீங்காதுள்ள ஆன்மாவின் ஆசையே இராகம் எனப்படும்."

---

## புருஷதத்துவம்; மூலப்பிரகிருதி.

(௫௫)* இயைந்தவத் தத்துவ மைந்தினு மெஞ்சா வகைப்பிணிப்புண்
டயர்ந்துழிப் பின்னைப் புருட னெனப்பெய ராமனுவென்
றுயர்ந்தவ ரோதுவ ரோதுங் கலையினின் றற்பவிக்குங்
குயந்தரு மூலப் பகுதிய தாமென்று கூறுவரே.

(இ-ள்) இயைந்த அத்தத்துவம் அஞ்சினும் எஞ்சாவகை பிணிப்புண்டு அனு அயர்ந்துழி பின்னைப் புருடன் எனப்பெயராம் என்று உயர்ந்தவர் ஓதுவர் - பஞ்சகஞ்சுகமாக இயைந்த காலம் நியதி கலை வித்தை இராகம் என்னும் ஐந்து தத்துவங்களினாலும் குறைவின்றிப் பிணிப்புண்டு விஷயபோகத்தில் ஆன்மாவானது

---

* இச்செய்யுள் சிவஞானசித்தியார்க்கு நிரமவழகியர் எழுதிய உரையில் சூத்திரத்து ௪-ஞ் செய்யுளுரையில் உதகரிக்கப்பட்டுள்ளது.

மயங்குமிடத்து அதற்குப் (பின்) புருடனெனப் பெயராமென்று பெரியோர் கூறுவர்; ஓதும் கலையில் நின்று குயந்திரும் மூலப் பகுதியது உற்பவிக்குமாம் என்று கூறுவர் - மேலே கூறிய கலா தத்துவத்தினின்று (மயக்கத்தைத் தருகின்ற) சூக்குமமாகிய மூலப் பகுதியானது உற்பவிக்குமாம் என்றும் (அவர்) கூறுவர் எ-று.

---

## தத்துவப்பிரகாசம்

தத்வைரேபி: கலிதோ போக்த்ருத்வதசாயாம் யதா பசுர்நீத:।
புருஷாக்யதாம் ததாயம் லபதே தத்வேஷு கணநாஞ்ச॥

"ஆன்மாவானவன் இந்தக் கலாதிதத்துவங்களோடு கூடி எப்போது போக்தாதசையிற் செலுத்தப்பட்டானோ, அப்போது புருஷன் என்றும் தத்துவங்களுள்ளே புருஷதத்துவம் என்றும் கணிக்கப் படுகின்றான்"

---

## முக்குணம்; புத்தி.

(௩௬) கூறிய மூலப் பகுதியிற் றோன்றுங் குணமவைதாந்
தேறிய சாத்வித ராசத தாமத மென்றுசெப்பு
மூறிய முக்குண மொத்தவை மூன்று முயர்விழிவுற்
றேறியக் காற்புத்தி தத்துவ மாகுமென் றெண்ணுவரே.

(இ-ள்) கூறிய மூலப்பகுதியிற் குணம் தோன்றும் அவைதாம் தேறிய சாத்துவித ராசத தாமதம் என்று செப்பும் - மேலே கூறிய மூலப்பகுதியிற் குணங்கள் தோன்றும், அவை தெளிந்த சாத்துவிக இராசத தாமச குணங்களென்று (சிவசாஸ்திரங்கள்) கூறும்; ஊறிய முக்குணம் ஒத்து - இங்ஙனம் தோற்றிய முக்குணங்களும் ஒத்து; அவை மூன்றும் உயர்வு இழிவு உற்று-(பின்) அம்முக்குணங் களும் வைஷம்மியமுற்று; ஏறியக்கால் புத்திதத்துவம் ஆகும் என்று எண்ணுவர் -சாத்துவிககுணம் மேலிடுமிடத்துப் புத்தி தத் துவம் ஆம் என்று கொள்வர் எ-று.

---

## தத்துவப்பிரகாசம்

அவ்யக்தாத் குணதத்வம் ப்ரக்யாவ்யாபாரநியமரூபமிஹ।
ஸத்வம்ரஜஸ்தமோபிச சுகது:கமோஹ இத்யபி॥

"அவ்வியக்தத்தினின்று வியாபார நியமரூபமாய் வெளிப்பட்ட குணதத்துவம் உண்டாகின்றது; இது சுகதுக்க மோகரூபமாகிய சத்துவம், ரஜஸ், தமஸ் என மூத்திறப்படும்."

---

## அகங்காரதத்துவம்

(கஎ) எண்ணிய புத்தியின் முக்குணஞ் சீரியல் பாய்வகுத்து
நண்ணிய வாங்கா ரமூன் றுரு வாமவை நாட்டியபோ
தண்ணிய தைசத வைகா ரியந்திகழ் பூதாதியென்
றண்ணல் வகுத்த முதனூ னெறிவழி யாய்ந்துகொள்ளே.

(இ-ள்) எண்ணிய புத்தியின் முக்குணம் சீர் இயல்பாய் வகுத்து நண்ணிய அகங்காரம் மூன்று உருவாம் - மேலே எய்திய புத்தி தத்துவத்தில் அடங்கிய முக்குணங்களை அழகுற வகுத்து அதனால் எய்திய அகங்காரதத்துவமானது மூன்று சொரூபமாம்; அவை நாட்டியபோது அண்ணிய தைசத வைகாரியம் திகழ் பூதாதி என்று அண்ணல் வகுத்த முதனூல் நெறி வழி ஆய்ந்துகொள்ளே - அவை எவை என்று ஸ்தாபிக்குங்கால், அவை (ஆன்மாக்களைச்) சார்ந்த தைசதாகங்காரமும், வைகாரிகாகங்காரமும், விளங்கும் பூதாதியகங்காரமுமாம் என்று சிவபிரானருளிய ஆகமநெறி முறையானே ஆராய்ந்துகொள்க எ-று.

---

## தத்துவப்பிரகாசம்

சாபி த்ரிவிதா குணத: ப்ரோக்தா கர்மாநுஸாரேண।
ஸ்யாத் த்ரிவிதோஹங்காரோ ஜீவந ஸம்ரம்பகர்வரூபோயம்।
ஸாத்விகராஜஸதாமஸ பேதேந ஸ ஜாயதே புநஸ்த்ரேதா।
ஸசதைஜஸ வைகாரிக பூதாதிகநாமபிஸ் ஸமுச்வஸதி॥

'கர்மாநுசாரமாக அந்தப் புத்திதத்துவம் முக்குணமுடையதாகக் கூறப்பட்டது; (அதினின்றும் தோன்றிய) அகங்காரம் நான் என்னும் விருத்திரூபமுடையதாய் மூவகைப்படும்; அவை சாத்துவிக ராசத தாமதம் என்னும் முப்பிரகாரமாகித் தைசதாகங்காரம் வைகாரிகாகங்காரம் பூதாதியகங்காரம் என்னும் பெயர்களாற் கூறப்படும்."

---

## ஞானேந்திரியம்; கன்மேந்திரியம்; தன்மாத்திரை; பூதாதி.

(௯௮) கொள்ளுமித் தத்துவ முற்கூ றதிற்செவி யாதிமன
மெள்ளிய கன்மேந் திரியம்பின் னீறு மிரண்டினிற்பின்
றெள்ளிய தன்மாத் திரைவருஞ் சேர்ந்ததன் மாத்திரையி
லொள்ளிய பூதங்க ளைந்துக்கு மாமென்ப ருற்பவமே.

(இ - ள்) கொள்ளும் இத்தத்துவ முற்கூறு இதிற் செவியாதி மனம் - (மேலே முக்கூறாகப்) பகுக்கப்பட்ட இந்த அகங்காரதத்துவத்தின் முற்கூறாகிய தைசதவகங்காரத்திலே சுரோத்திராதியும் மனசும் தோன்றும்; பின் எள்ளிய கன்மேந்திரியம் ஈறும் - பின்னுள்ள வைகாரிகாகங்காரமானது நிந்திக்கப்படும் வாக்காதிகளைப் பிறப்பிக்கும்; இரண்டினிற் பின் தெள்ளிய தன்மாத்திரை வரும் - இருவகை அகங்காரத்துக்குப் பின் (பூதாதி அகங்காரத்தினின்று) அநுபவிக்கப்படும் சத்தாதிதன்மாத்திரைகள் தோன்றும்; சேர்ந்த தன்மாத்திரையில் ஒள்ளிய பூதங்கள் ஐந்துக்கும் உற்பவம் ஆம் என்பர் - சேர்ந்து நின்ற சப்தாதி தன்மாத்திரை ஐந்திலேதான் மாசில்லாத ஆகாசாதி பூதங்கள் ஐந்தும் உற்பத்தியாம் என்பர் எ - று.

## மனம், ஞானேந்திரியம், கன்மேந்திரியம் யாவை என்பது.

(௯௯) பவந்தரு மம்மனப் பண்பிச்சை பாரிப்ப தாம்விகற்பங்
கவர்ந்தெழு மிந்திரி யங்கள்கண் டோல்செவி மூக்கொடுநா
வியந்தரு ஞானேந் திரியங்கன் மேந்திரி யங்கள்கைகால்
வயந்தரு வாக்கொடு பாயுரு பத்தமென் றுங்கவையே.

(இ - ள்) பவந்தரும் அம்மனப் பண்பு இச்சை விகற்பம் பாரிப்ப தாம் - செனனத்தைக் கொடுக்கும் அம்மனத்தின் குணம் விரும்பிய பொருளிலே விகற்பத்தை உண்டாக்குவதாம்; கவர்ந்து எழும் இந்திரியங்கள் இயந்தரும் செவி தோல் கண் நா மூக்கு ஞானேந்திரியம் - விடயங்களைக் கவர்ந்தெழாநின்ற இந்திரியங்களாகிய ஒலி கேட்கும் சோத்திரம், துவக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம் என்னும் ஐந்தும் ஞானேந்திரியமாம்; வயந்தரு கன்மேந்திரியங்கள்

வாக்கொடு கால் கை பாயுரு உபத்தம் என்றங்கவையைய - ஐவி யுடைய கன்மேந்திரியங்கள் வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ் தம் என்பனவைகளாம் எ-று.

### தத்துவப்பிரகாசம்

இச்சாரூபம்ஹி மநோவ்யாபாரஸ்தஸ்ய பவதி ஸங்கல்ப:।
புத்யக்ஷாணிச ச்ரோத்ரம்த்வக்த்ருக்ஜிஹ்வாச நாஸாச।
வாக்பாணிபாதபாயூபஸ்தா: கர்மேந்த்ரியாணி ஸ்யு:॥

"இச்சாரூபமாயுள்ளது மனம்; அதின் வியாபாரம் சங்கற்பம்; ஞானேந்திரியங்கள் சுரோத்திரம் துவக்கு சட்சு ஜிஹ்வா ஆக்கிராணம் என்பனவாம்; வாக்கு பாதம் பாணி பாயுரு உபஸ்தம் என்பன கன்மேந்திரியங்களாம்"

---

### அந்தக்கரணம் நான்கு; புறக்கரணம் பத்து

(௪௦) ஆங்கவை தம்மின் மனம்புத்தி யாங்காரஞ் சித்தமென்றே
யீங்கிவை யுட்கர ணம்மொரு நான்குமற் றேனையவாந்
தீங்கிவை யின்றன வீரைந்துந் தேரிற் புறக்கரண
மோங்கிய போகத் திவையாங் கருவியென் றுன்னினரே.

(இ-ள்) ஆங்கவை தம்மில் மனம் புத்தி அகங்காரம் சித்தம் என் கிவை ஒரு நான்கும் உட்கரணம் - மேலே போந்த தத்துவங்களுள்ளே கணிக்கப்பட்ட மனம் புத்தி அகங்காரம் சித்தம் என்று கூறப்படும் இவையோர் நான்கும் உட்கரணமாம்; ஏனையவாம் தீங்கு இவையின்றன ஈரைந்தும் தேரிற் புறக்கரணம்-ஏனையவாகிய (உட்கரணத்துக்கு) மாறுபட்ட ஞானேந்திரியம் ஐந்தும் கன்மேந்திரியம் ஐந்துமாகிய பத்தும் புறக்கரணம்; ஓங்கிய போகத்து இவையாங்கருவி என்று உன்னினர் -மிகுந்த போகத்தை (ஆன்மா) துய்த்தற்கு இந்தப் பதினான்கு தத்துவங்களே கருவியாம் என்று (மேலோர்) எண்ணினர் எ-று.

---

### தத்துவப்பிரகாசம்

அந்த:கரணம் த்ரேதாபுத்திரஹங்காரசேதசீசேதி।
புத்தீந்த்ரிய கர்மேந்த்ரியபேதாத்பாஹ்யம் புனர்பவேத்தசதா॥

"அந்தக்கரணமானது புத்தி அகங்காரம் * சித்தமும் என மூன்றும்; ஞானேந்திரிய கன்மேந்திரிய பேதத்தினாற் புறக்கரணம் பின்னர்ப் பத்துவகை ஆகும்."

## ஞானேந்திரிய கன்மேந்திரியங்கட்கு விஷயம்

(சக) உன்னிய சொல்லுச் செவிக்குக்கண் ணுக்குரு வம்பரிச
மன்னிய தோலுக்கு மூக்குக்கு நாற்ற மிரதமென்ப
வின்னிய நாவுக் கியம்ப னடத்தல் கொடைவிடுத்தல்
பன்னிய வானந்தங் கன்மேந் திரியம் பயின்றனவே.

(இ-ள்) செவிக்கு உன்னிய சொல்லு கண்ணுக்கு உருவம் மன்னிய தோலுக்கு பரிசம் மூக்குக்கு நாற்றம் இன்னிய நாவுக்கு இரதம் என்பர்-சோத்திரத்துக்குச் சப்தமும், சட்சுவுக்கு ரூபமும், தோலுக்குப் பரிசமும், ஆக்கிராணத்துக்குக் கந்தமும், சிங்ஙுவைக்கு இரதமும் விஷயங்களாம் என்பர்; கன்மேந்திரியம் இயம்பல் நடத்தல் கொடை விடுத்தல் பன்னிய ஆனந்தம் பயின்றன-கன்மேந்திரியங்களுள்ளே வாக்குக்கு வசனமும், பாதத்துக்குக் கமனமும், பாணிக்குக் கொடுத்தலும், பாயுருவிற்கு விசர்க்கமும், உபஸ்தத்துக்கு ஆனந்தமும் விஷயங்களாக இயைந்தனவாம் எ-று.

## தத்துவப்பிரகாசம்

க்ராஹ்யாஸ் தேஷாம் சப்தஸ்பர்சௌ ரூபம் ரஸச்ச கந்தச்ச।
இத்யேதேஷாம் விஷயா: க்ரமேண பஞ்சாபி பஞ்சாநாம்।
வசநதாந விஹரணோத்ஸர்க்கா நந்தாச்ச கர்மைஷாம்॥

"ஞானேந்திரியம் ஐந்துக்கும் முறையே விஷயம் சப்த பரிச ரூப ரச கந்தம் ஐந்துமாம்; கர்மேந்திரியங்கள் ஐந்துக்கும் விஷயம் வசன தான விகரண உற்சர்க்க ஆனந்தம் என்னும் ஐந்துமாம்."

## தன்மாத்திரையினின்று பூதோற்பத்தி

(சஉ) பயில்வுறு சத்த பரிச முருவ மிரதகந்த
மியல்வுறு தன்மாத் திரையைந்து மாவன மீங்கிவற்றிற்
புயலுறு வான்வளி பொன்று வனல்பொரு நீரொடுமண்
வியலுறு பூதங்க ளைந்து முறையா விளைந்தனவே.

* சித்தமும் என்னும் உம்மையினால் மனசும் கொள்ளப்படும்.

(இ - ள்) இயல்புறு தன்மாத்திரை பயில்வுறு சத்தம் பரிசம் உருவம் இரதம் கந்தம் ஐந்து ஆவன - இயல்பைப் பொருந்திய தன்மாத்திரைகள் பயிலப்படும் சத்தம் பரிசம் உருவம் இரதம் கந்தம் என்னும் ஐந்தாவனவாம்; ஈங்கு இவற்றில் முறையாகப் புயலுறு வான் வளி பொன்று அனல் பொரு நீரொடு மண் வியலுறு பூதம் ஐந்தும் விளைந்தன - ஈண்டு சத்த முதலிய தன்மாத்திரைகளினின்று முறையானே மேகங்கள் சஞ்சரிக்கும் ஆகாயம் வாயு தேயு அப்பு பிருதிவி என்னும் பெரிய பூதங்கள் ஐந்தும் பிறந்தனவாம் எ - று.

---

## தத்துவப்பிரகாசம்

தந்மாத்ரேப்ய: கபவந தேஜோம்ப: க்ஷ்மேதி பஞ்சபூதாநி

"தன்மாத்திரைகளினின்று ஆகாயம், வாயு, தேயு, அப்பு, பிருதிவி என்னும் ஐந்து பூதங்களும் (பிறந்தன)."

---

## ஆகாயாதிகளின் குணமும் தொழிலும்

(௬௫) விளையுங் குணமொன் றுக் கோரொன்று மேற்படும் விண்முதலா
விளையுந் தனையு மிடங்கொடுக் குங்கூட்டும் வெம்மைதரு [ய்
மிளகும் பொறுக்கு மடைவே யிவையுயர் வான்முதலாய்
வளையுங் கடற்புவி தோறுமெஞ் சாமல் வருந்தொழிலே.

(இ - ள்) விளையும் குணம் ஒன்றுக்கு ஓரொன்று விண்முதலாய் மேற்படும் - உண்டாகும் *சத்தமுதலாகிய குணங்கள் ஒன்றுக் கொன்று ஆகாய முதலியவற்றுக்கு மேற்பட்டுவரும்; உயர் வான் முதலாய் இவை அடைவே விளையுந்தனையும் இடங்கொடுக்கும் கூட்டும் வெம்மைதரும் இளகும் பொறுக்கும்-விரிந்த ஆகாய முதலியவாய இவைகளுள் ஆகாயமானது முறையானே வாயு முதலிய நான்குக்கும் அவையுள்ள வரையும் இடம் கொடுக்கும், வாயு அனைத்தையுஞ் சேர்க்கும், தேயு வெம்மைதரும், அப்பு நெகிழ்ச்சி

---

* ஆகாயத்துக்குச் சத்தகுணம் ஒன்றாகவும், வாயுவுக்குச் சத்தம், பரிசம் என இரண்டாகவும், தேயுவுக்குச் சத்தம், பரிசம், ரூபம் என மூன்றாகவும், அப்புவுக்குச சத்தம், பரிசம், ரூபம், ரசம் என நான்காகவும், பிருதிவிக்குச் சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என ஐந்தாகவும் குணங்கள் மேற்பட்டு வரும்.

தரும், பிருதிவி அனைத்தையும் தாங்கும்; கடல்வளையும் புவிதோறும் எஞ்சாமல் வருந்தொழில்-கடல் சூழ்ந்த பூமியெங்கும் குறைவுபடாது அவ்வாகாய முதலிய பூதங்களுக் கெய்தும் தொழில்களாம் எ-று.

## தத்துவப்பிரகாசம்

பூதாநி பஞ்ச தேப்யோ பவந்தி தாந்யேக குணவ்ருத்யா l
அவகாச வ்யூஹந பாக சம்க்ரஹண தாரணம் க்ரமாதேஷாம் l
வ்யாபாரா: பூதாநாம் வ்யோமாதீநாம் சமுத்திஷ்டா: ll

"ஐந்து பூதங்களுள்ளே ஆகாயமுதலாக ஒன்றுக்கொன்று குணம் அதிகமாகும்; ஆகாய முதலிய ஐந்துக்கும் இடங்கொடுத்தன்முதலிய தொழில்கள் ஐந்து உள்ளன."

## ஆன்மாக்களின் சுகதுக்கம்

(சச) தொழிலுறு மாயைத் தொடக்குண்ட சீவனைத் தொக்குநின்றங்
கெழிலுறு மேனி யிருபாற் கரணங் குணமொருமூன்
றொழிவில வாகிச் சுகதுக்க மோக முடன்கொடுத்துக்
கழிபடு துன்பங் களின்பய னாகக் கவர்விக்குமே.

(இ-ள்) தொழிலுறு மாயை தொடக்குண்ட சீவனைத் தொக்குநின்று அங்கு எழிலுறு மேனி இருபாற் கரணம் குணம் ஒருமூன்று ஒழிவிலவாகிச் சுகதுக்கம் மோகம் உடன்கொடுத்து-மாயையிற் காரியப்பட்ட கலைமுதலிய தத்துவங்களினாற் றொடக்குண்ட ஆன்மாவைப்பற்றி நின்று, அவ்வான்மாக்களுக்கு ஆங்கே அழகமைந்த தேகம், அந்தக்கரணம் புறக்கரணம் என்னும் இருவகைக் கரணம், மூக்குணம் என்னும் இவைகள் இடையறாது இன்ப துன்பமோகங்களை உடனே கொடுத்து; கழிபடுதுன்பங்களின் பயனாகக் கவர்விக்கும்-மிகுந்த துன்பத்தையே பயனாகத் துய்ப்பிக்கின்றன எ-று.

## அந்தக்கரணங்களின் இலக்ஷணம்

(சரு) கவரும் பொருளொன்றைக் கண்முத லாய கரணங் கண்ணுற்
றிவரு மனம்விகற் பிக்குமெஞ் சாதவாங் காரம்புத்தி

பவரும் படியா னெனதெனப் பாவிக்கும் பற்றிமுற்றுந்
தவரு மதிமிகத் தேறும்இப் பாலகன் றன்மையென்றே.

(இ-ள்) கவரும் பொருள் ஒன்றைக் கண்முதலாய கரணம் கண்ணுற்று இவரும் மனம் விகற்பிக்கும் - புசிக்கற்பாலதாகிய பொருளொன்றைக் கண்முதலாகிய ஞானேந்திரியமும் கன்மேந்திரியமும் பற்றி இவரும், அப்போது மனம் விகற்பிக்கும்; எஞ்சாத ஆங்காரம் புத்தி பவரும்படி யான் எனது எனப் பாவிக்கும் பற்றி முற்றுந் தவரும் மதிமிக இப்பால் அதன் தன்மை என்று தேறும்- குறையாத அகங்காரமும் புத்தியும் நெருங்குமாறு (முறையானே அகங்காரமானது) யான் எனது என்று அபிமானிக்கும், விஷயங்களிற்சென்று பற்றி எங்கும் விரியும் (புத்தியானது) இவ்விடத்து அப்பொருளினியல்பு இங்ஙனமாம் என்று நிச்சயிக்கும் எ-று.

உயிரால் அதிஷ்டிக்கப்பட்டு ஐம்பொறிகள் அறிந்த விடயங்களுள் ஒன்றனை இஃது யாதாகற்பாற்றெனச் சித்தம் சிந்தித்தறியும், யான் சிந்தித்தேன் என்று அறியமாட்டாது; மனம் அதனை இஃதின்னதாகற்பாற்று எனவும், அஃதாமோ அன்றோ எனவும் எனச் சங்கற்பவிகற்பஞ் செய்து அறியும், யான் சங்கற்ப விகற்பஞ் செய்தேன் என்று அறியமாட்டாது; அகங்காரம் அதனை இன்னதெனத் துணிவேன் யான் என்று ஒருப்பட்டெழுந்தறியும், யான் ஒருபட்டெழுந்தேன் என்று அறியமாட்டாது; புத்தி அதனை இன்னது இதுவென நிச்சயித்தறியும், யான் நிச்சயித்தேன் என்று அறியமாட்டாது.

---

## ஆன்மவியல்பு

(சகூ) என்றுடன் றேறிய புத்திக் கிசைந்த பொருணயந்து
சென்றுந் திரிந்தும் பயில்வுறுஞ் சேதனன் சேதமின்றி
நின்றுண்டு போகத்தை நீக்கிமற் றுண்பன நேடியின்னே
பொன்றும் பிறக்கும் புனற்சுழிப் பட்டதோர் புல்லெனவே.

(இ-ள்) என்று உடன் தேறிய புத்திக்கு இசைந்த பொருள் நயந்து சென்றும் திரிந்தும் பயில்வுறும் சேதனன்-இருவினைக்கீடாக வந்த விஷயத்தை இஃது இன்னது என நிச்சயித்த புத்திக்கு வாய்ந்த பொருளை விரும்பிப் பக்குவப்பட்ட போகம் துய்க்கச் சென்றும், பக்குவப்படாத போகங்களை அடையமாட்டாது மீண்டு

திரிந்தும் பயிலாநின்ற ஆன்மாவானது; சேதமின்றி நின்று உண்டு போகத்தை நீக்கி உண்பன இன்னே நேடிப் புனற் சுழிப்பட்ட தொர் புல்லெனப் பொன்றும் பிறக்கும்-ஆர்ச்சித்த சீருமம் குறை வுபடாது பக்குவமான வினைப்பயன்களைத் துய்த்துப் போகத்தை மாற்றி. துய்க்கக் கிடந்தனவாகிய போகங்களை இப்போது தேடிப் போய் நீர்ச்சுழிப்பட்ட புற்போல இறக்கும் பின்பு பிறக்கும் எ-று

---

## ஆன்மாக்களை இளைப்பாற்றல்

(சஎ) *புல்லிய பாசங்க ளுய்த்திடப் போகம் புமானுகர்ந்து
செல்லிய காலத் துறுஞ்செல்ல னீங்கச் சிரபுரக்கோன்
சொல்லிய மண்முத லாயின மாயையி லேதொகுத்தங்
கெல்லியி னித்திரை போலிளைப் பாற்று மணுக்களையே.

(இ-ள்) புல்லிய பாசங்கள் உய்த்திடப் போகம் புமான் நுகர்ந்து செல்லிய காலத்து உறும் செல்லல் நீங்கச் சிரபுரக்கோன்-இழி வாகிய ஆணவம் மாயை கன்மம் என்னும் பாசங்கள் செலுத்த ஆன்மாக்கள் போகத்தைப் புசித்துச் செல்லுங்காலத்து (அவ்வான் மாக்கள் படும் துன்பதசையையும், அவைகள் பக்குவப்பட்ட கன்மங் களைப் புசித்து முடித்தமையையும், மற்றோர் கன்மம் பாகப்படும் வரையும்) அவ்வான்மாக்களுக்கு எய்தும் துன்பம் நீங்கத் திருவு ளங்கொண்டு சீகாழித் தலைவராகிய சிவபிரான்; சொல்லிய மண் முதலாயின மாயையிலே தொகுத்து-சொல்லப்பட்ட பிருதிவிமுத லிய தத்துவங்களையும் கருவி முதலியவற்றையும் மாயையிலே ஒடுக்கி; அங்கு எல்லியில் நித்திரைபோல அணுக்களை இளைப்பாற் றும்-அங்கே இராத்திரியிற் செயப்படும் நித்திரைச்சங்காரம்போல அவ்வான்மாக்களை (மாயையிலே ஒடுக்கி) இளைப்பாற்றுவிப்பர் (எனவே சங்கரிப்பார்) எ-று.

போகஸாதகமாக்ஷிப்ய க்ருத்வா காரண ஸம்ச்ரயம்।
தச்ச ஸாத்மகமாக்ரம்ய விச்ரமாயாவதிஷ்டதே।
பவிநாம் பவகிந்நாநாம் ஸர்வபூத ஹிதோ யத:॥

"சம்சாரத்தில் வருத்தமடைந்த ஆன்மாக்களை இளைப்பாற்றுமாறு சர்வசெந்துக்களுக்கும் இன்பஞ்செய்யும் கர்த்தாவாகிய சிவபிரான்

---

*இச்செய்யுள் சிவப்பிரகாசத்துக்கு மதுரைச சிவப்பிரகாசர் எழுதிய பொது கப்ப உ௩-ஞ் செய்யுளுரைகளில் உதாரிக்கப்பட்டுள்ளது.

போகசாதனங்களாகிய தநுகரணாதிகளை ஒடுக்கி ஆன்மாக்களோடு கூட மாயையிலே லயிக்கச்செய்து அதனையும் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கின்றார்" என்று மிருகேந்திராகமம் கூறுகின்றது.

---

## தத்துவப்பிரகாசம்

சம்ஸாரே கிந்நாநாம் நிகிலாநாம ப்ராணிநாம் ப்ரபு: க்ருபயா।
குருதே மஹார்த்த ஸம்ஹ்ருதிமேதேஷாமேவ விச்ராந்த்யை॥
"சம்சாரத்திலே இளைத்துப்போய சமஸ்தமாகிய இந்த ஆன்மாக்களுக்கும் இளைப்பாறுதல் செய்யும் பொருட்டுச் சிவபிரான் அருளினாலே மகாசங்காரத்தைச் செய்கின்றார்."

---

## முப்பொருள் நித்தியம்

(சஅ) கலைகண்ண தாஞ்சுத்த தத்துவங் காழியர் கோனருளால்
விளைபுல னுஞ்சத்தி யுள்ளே யொடுங்கிடு மேதகுநாற்
றளைகெழு சத்தி சிவதத் துவந்தன்னி லேயொடுங்குங்
கிளைதரு மாயை சிவத்தோ டணுவுக்குங் கேடில்லையே.

(இ-ள்) கலைகண்ணதாம் சுத்ததத்துவம் காழியர்கோன் அருளால் விளைபுலனும் சத்தியுள்ளே ஒடுங்கிடும்—அனைத்துக்கும் ஆதாரமாகிய சுத்ததத்துவமாகிய சுத்தவித்தை ஈசுரம் சாதாக்கியம் என்னும் சிவதத்துவங்களும் சீகாழித்தலைவராகிய சிவபிரான் திருவருளால் விளைநிலமாகிய சத்திதத்துவத்தில் ஒடுங்கும்; மேதகுநால் தளைகெழு சத்தி சிவதத்துவந் தன்னிலே ஒடுங்கும்—மேம்பட்ட வேதாகம விரிவுகளிற் கூறப்பட்ட சத்திதத்துவமானது சிவமாகிய தத்துவம் எனப்படும் சிவதத்துவத்திலே ஒடுங்கும்; கிளைதரு மாயை சிவத்தோடு அணுவுக்கும் கேடில்லை—சேதனாசேதனப் பொருட்கிளைகளைத் தோற்றுவிக்கும் மாயைக்கும் சிவனார்க்கும் ஆன்மாக்களுக்கும் அநித்தியம் என்பதில்லை (எனவே, சிவன் சீவன் *மாயை என்னும் முப்பொருள்களும நித்தியபதார்த்தங்களாம் என்பது) எ-று.

---

* மாயையைக் கூறவே ஆணவம் கன்மம் என்னும் இரண்டும் உபலக்ஷணையினாற் பெறப்படும்.

த்வாஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே।
தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்யநச்நந்யோ அபிசாகசீதி॥
"பிரியாநண்பினையுடைய இரு பக்ஷிகள் ஒரே சரீரமாகிய மரத்தை யுற்றிருக்கின்றன; அவற்றில் ஒன்று இனிமையாகிய பழத்தை உண்கின்றது; மற்றது உண்ணாது பார்த்துக்கொண்டிருக்கின்றது" என்று இருக்குவேதம் கூறுகின்றது. ஈண்டுக்கூறப்பட்ட இருபக்ஷிகளும் பதியாகிய சிவபிரானையும், பசுவாகிய ஆன்மாவையும் உணர்த்திய. விருக்ஷமானது மாயாகாரியமாகிய சரீரத்தைச் சுட்டிற்று.

## தத்துவப்பிரகாசம்

மாயா புருஷ: சிவ இத்யேதத் த்ரிதயம் மஹார்த்த ஸம்ஹாரே।
அவசிஷ்யதே புநஸ்தத் ப்ரவர்த்ததே பூர்வவத் ஸ்ருஷ்டௌ॥
"மகாசங்காரகாலத்திற் பதியாகிய சிவன், புருஷனாகிய சீவன், மாயை என்னும் மூன்றும் அழியாது சேஷித்து நிற்கின்றன; பின் சிருஷ்டிகாலத்தில் முன்போலப் பிரவர்த்திக்கின்றன."

---

## ஆன்மாக்கள்பொருட்டுத் தத்துவங்கள் தோற்றி ஒடுங்குதல்

(சகூ) இல்லா தனபிறந் துள்ளன மாயுமென் றிம்மயக்க
நல்லா கமமறி ஞர்க்கில்லை நாட்டிய தத்துவங்க
ளெல்லா மியம்பு முறையே பிறக்கு மிறக்குமுத்த
ரல்லா வணுக்கட் கனுபவ காரண மாகின்றே.

(இ-ள்) இல்லாதன பிறந்து உள்ளன மாயும் என்று இம்மயக்கம் நல்லாகம அறிஞர்க்கு இல்லை—இல்லாதனவாகிய பொருள்கள் புதியனவாகத் தோன்றி அநாதியாயுள்ள பொருள்கள் மாயும் என்று கூறும் இந்த மயக்கம் நல்ல சிவாகமங்களை அறிந்த அறிவினர்க்கு இல்லை; நாட்டிய தத்துவங்களெல்லாம் இயம்பும் முறையே முத்தர் அல்லா அணுக்கட்கு அநுபவகாரணமாகிப் பிறக்கும் நின்று இறக்கும்—மேலே ஸ்தாபிக்கப்பட்ட தத்துவங்களனைத்தும் கூறிய முறையானே முத்தரல்லாத ஆன்மாக்கள் போகம் புசித்து ஒழிக்குமாறு காரணமாகி அவை தோன்றி நின்று அழியும் எ-று.

## முத்தொழில்

(ரு0) ஆகுத லாவது தோற்ற மடக்க மழிதலென்றே
நீகுறி யாயெள்ளு மெண்ணெயு போனினை நீண்டகொம்பிற்
கோகுல மார்பொழிற் கொச்சைப் பிரான்கழல் கூட்டுதற்கே
யாகுமென் றேயணுக் கட்கியல் பாகு மனுபவமே.

(இ-ள்) ஆகுதலாவது தோற்றம் - சிவதத்துவமுதற் பிருதிவியீறாக உற்பவிப்பதே தத்துவங்களின் சிருஷ்டியாம்; அடக்கம் அழிதலென்றே நீ குறியாய்-தோன்றின முறையானே ஒடுங்குதலே சங்காரம் என்றறிதி; எள்ளும் எண்ணெயும் போனினை — எள்ளும் எள்ளுக்குள் எண்ணெய்யும்போலக் காரியப்பட்ட விடத்தும் சங்கரிக்கப்பட்டவிடத்தும் திரிபதார்த்தங்களின் குறையாத முறையை அறிந்துகொள்ளுதி; நீண்ட கொம்பிற் கோகுலமார்பொழிற் கொச்சைப்பிரான் கழல் கூடுதற்கே ஆகும் என்றே அணுக்கட் கியல்பாகும் அநுபவம்-சோலையிலுள்ள மாக்கொம்பர்கள் தோறும் குயில்கள் ஆரவாரிக்கும் கொச்சை என்னும் சீகாழிப்பதிக்கு நாயகராகிய சிவபிரானது திருவடிகளிலே சேர்க்கும் சாயுச்சியம் உண்டாவதற்காக ஆன்மாக்களுக்கு இயல்பா முறையாற் கன்மப்பொசிப்பாகிய அநுபவம் உண்டாம் எ-று.

எண்ணெய்யை உள்ளே அடக்கிய எள்ளுப் போல்வதே சங்காரம் எனவும், எள்ளினின்று தோற்றிய எண்ணெய் போல்வதே சிருஷ்டி எனவும் ஓர்க.

## சிவத்தை அடையுமாறு

(ருக) *பவமே வியநெறி பந்திக்கு மீசன் பசுக்கடம்மை
யவமே வியநெறிப் போகங்க ளான்முற்ற வங்கிலேயே
தவமே வியநெறி சத்திகண் ணுச்சென்று சார்ந்துபின்னைச்
சிவமே வுவரென்று காண்கொச்சை காவலன் சித்திரிப்பே.

(இ-ள்) பவம் மேவிய நெறி பசுக்கடம்மைப் பந்திக்கும் ஈசன்-ஒவ்வோர் பிறவியும் பொருந்தும் முறையை அறிந்து ஆன்மாக்களை

*இச்செய்யுள் சிவப்பிரகாசத்துக்கு மதுரைச் சிவப்பிரகாசர் எழுதிய பாயிரம் உ-ஞ் செய்யுளுரையினும், போத எ-ஞ் செய்யுளுரையினும், உண்மை உரு-ஞ் செய்யுளுரையினும் உதகரிக்கப்பட்டுள்ளது.

(அவ்வவர்க்கு வாய்ந்த) தநுகரணாதிகள் கொண்டு பந்திக்கும் சிவபெருமான்; அவம் மேவிய நெறிப்போகங்களால் முற்ற-அவத்தை அடைந்த நெறியானே அப்பசுக்கள் போகங்களைப் புசித்து முற்றிவிட; அந்நிலையே தவமேவிய நெறிசத்திகண்ணைச்சென்று-அவ் அவசரத்திலே சிவபுண்ணியத் தவத்தினால் எய்தும் ஞானநெறி காரணமாக எய்தும் அருட்சத்தி வாயிலாகச் சார்ந்துபோய்; பின்னைச் சிவமேவுவர் என்று காண் -அவ்வான்மாக்கள் சிவத்தை அடைவார்கள் என்று அறிதி; கொச்சைகாவலன் சித்திரிப்பே-இஃதெல்லாம் கொச்சை எனப் பெயரிய சீகாழித்தலைவராகிய சிவபெருமானுடைய விசித்திர செய்கைகளாம் எ-று.

எண்பத்துநான்கு நூறாயிரயோனிகளினும் சிறைப்பட்டு மாறி மாறிப் பிறந்து நல்வினை தீவினைகளை ஆர்ச்சித்தும் பாகப்பட்ட வினைகளைப் பொசிப்பதுமாய் உழல்வதே சகலாவஸ்தையாம்.

"பந்தமும் பிரிவுந் தெரிபொருட் பனுவற்படி வழி சென்று சென்றேறிச்" சைவத்தில் எய்தப்பெற்றோர் ஆசாரியார் காட்டும் சிவாகம நெறியிற் சமயதீக்ஷை பெற்று, சரியை நெறியிற்றலைப் பட்டு, அது முற்றிய பின்னர் விசேஷதீக்ஷை பெற்றுக் கிரியை நெறியிற்றலைப்பட்டு, அது முற்றிய பின்னர் யோகநூல் கேட்டு யோகநெறியைத் தலைப்பட்டு இம்மூன்றும் முறையான் முற்றிய பின்னர் நிருவாண தீக்ஷைபெற்று ஞானநெறியைத் தலைப்பட்டு வீடுபேறடைவர் என்றமைபற்றியே ஈண்டு "தவமேவிய நெறி" என்று கூறப்பட்டது.

நிருவாணதீக்ஷையிற் றசகாரியங்களும் தசகாரியங்களை அடக்கிய நின்மலாவஸ்தை ஐந்தும், அவற்றின் பொருளை அடக்கிய பஞ்சாக்ஷரவுண்மையும் பிறவும் உணர்த்தப்படும். அங்ஙனம் ஞானாசாரியர் அறிவுறுத்திய நெறியானே "அவனருளே கண்ணாகக் காணினல்லால்" என்றும் "நின்னருட்கண்ணா னோக்காதாரல்லாதாரே" என்றும், "அவனருளாலே யவன்றாள் வணங்கி" என்றும் "மெய்யருளாந் தாயுடன்சென்றுபின் றாதையைக் கூடிப் பின் றாயைமறந் தேயுமதேநிட்டை யென்றா னெழிற்கச்சி யேகம்பனே" என்றும் கூறும் திருவாக்குகளுக்கியையக் கண்ணானது சூரியனது கிரணம் வாயிலாகச் சூரிய விம்பத்தைக்கண்டு உலகம் தோன்

ருது நின்றவாறுபோல, ஆன்மா அருட்சத்தியொளிவாயிலாகச் சிவத்தைச் சார்ந்து மற்றொன்றும் தோன்றப்பெறாது நிற்கும் உண்மை பற்றியே "சிவமேவுவரென்றுகாண்" என்று கூறப்பட்டது.

"சித்தத்துவந்தெமக்கின்பம்பட" என்னும் முதற்செய்யுளிற் பராசரமுனிவரது அஞ்ஞானமாகிய கொச்சையை நீக்கி ஆட்கொண்டமைபோல, இறுதிச்செய்யுளில் ஆன்மாக்களுடைய ஆணவமாகிய கொச்சையை நீக்கி ஆட்கொண்டருளுபவர் அக்கொச்சைபுரப்பெருமானாதலின் "கொச்சைகாவலன் சித்திரிப்பே" என்று ஈண்டும் கூறப்பட்டது.

**தத்துவவிளக்க மூலமும் உரையும் முற்றுப் பெற்றன.**

*திருச்சிற்றம்பலம்.*

---

இந்நூலைப் பார்த்து எழுதுவதற்கு ஏடுதந்த சாலிவாடீசுவரபுரத்து மகா-ள-ள-ஸ்ரீ பால்வண்ணமுதலியாரவர்களுக்கும், இதனை ஒத்துப் பார்த்தற்குப் பிரதி தந்த பாறுவாதீனத்து மகா-ள-ள-ஸ்ரீ முத்துக்குமாரத்தம்பிரானவர்களுக்கும் நன்றிசெலுத்தும் கடப்பாடுடையேம்.

இந்நூலின் டைட்டில்பேஜ் உள்பட முதற்பத்துப்பாரங்கள் மதுரைச் சூரியோதயப்பிரசினும், ஏனைய பாரங்கள் மதுரை வடக்குமாசிவீதி ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் அச்சியந்திர சாலையிலும் பதிப்பிக்கப்பட்டன.

# பிழைதிருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 3 | 19 | திவய | திய |
| 13 | 14 | முதநூல் | முதனூல் |
| 15 | 10 | வசி | சிவ |
| 19 | 20 | மந்த்ரு | மந்த்ர |
| 32 | 1 | தந்தந்த்ர | தந்த்ர |
| 34 | 9 | பூவும் | பூர்வம் |
| 43 | 25 | ளாரும் | ளாரும்; |
| 50 | 24 | தாநயோ | நாநயோ |
| 58 | 12 | தத்வ்ரத | தத்ரூப |
| 61 | 19 | நச்யதி | நச்யதிநிர்வாதி |
| 73 | 1 | த்பவி | த்விப |
| 84 | 8 | ஜுச் | ஜுத் |
| 95 | 14 | ஆய்நது | ஆய்ந்து |
| 101 | 2 | லகன் | லதன் |
| 104 | 16 | ஓ ங்கு | ஒடுங்கு |

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# விக்கிரயபுஸ்தகம்

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| (1) | நீலகண்டபாஷ்யத் தமிழ்மொழிபெயர்ப்பு ... | 6 | 0 |
| (2) | தேவாரம் வேதசாரம் ... ... ... | 3 | 0 |
| (3) | சிவஞானபோதவசனாலங்காரதீபம் ... ... | 3 | 0 |
| (4) | வைதிகசுத்தாத்துவிதசைவசித்தாந்த தத்துவப்படம் ... ... ... | 3 | 0 |
| (5) | ஷை வினாவிடை ... ... ... | 1 | 0 |
| (6) | தத்துவவிளக்க மூலமும் உரையும் ... | 1 | 4 |
| (7) | வச்சிரதண்டமுந் தாந்திரிகதுண்டகண்டன கண்டனமும் ... ... ... ... | 0 | 8 |
| (8) | மகாவுக்கிரவீரபத்திராஸ்திரம் ... ... | 0 | 8 |
| (9) | ஸ்ரீசீகாழிப்பெருவாழ்வின் சிவகாருண்ணியமாட்சி | 0 | 4 |

(இவற்றிற்குத் தபாற்சார்ஜ் வேறு)

இங்ஙனம்

சி. சிவசம்புநாதையர்

திருப்பரங்குன்றம்

மதுரை

---

* "இத்தத்துவவிளக்கம்" என்னும் மிகமிகப்பழைய சைவசித்தாந்தசாஸ்திரம் இயற்றினவர் சைவசமயஸ்தாபனாசாரிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருடைய நன்மாமனாராகிய சம்பந்தசரணாலயரேயாம்.